Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 04 | திருவள்ளுவர் ஆண்டு 2045 தை 13 ஞாயிற்றுக்கிழமை (26.01.2014) பக்கங்கள் 20 | ஓசை - 117

## இந்திய மீனவர்கள் அனைவரும் விடுதலை

(யாழ்ப்பாணம்)

வடக்கு கடலில் அத்துமீறி மீன்பிடித்தமை காரணமாக கடற்படையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய சிறையில் அடைக்கப்பட்டிருந்த அனைத்து இந்திய மீனர்வகளும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

எஞ்சியிருந்த தமிழக மீனவர்கள் 25 பேரும், ஊர்காவற்றுறை நீதவான் எஸ்.லெனின்குமார்

(19) பக்கம் பார்க்க...

## இலங்கை - இந்திய மீனவர்கள் சென்னையில் நாளை பேச்சு

(கொழும்பு)

தமிழக மீனவர்களின் அத்துமீறிய நடவடிக்கைகள் காரணமாக வடக்கு மீனவர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாக நாளை சென்னையில் இரு நாட்டு மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கு இடையே பேச்சுவார்த்தைகள் நடைபெறவுள்ளது. இதற்காக வடக்கில் இருந்து மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் இன்று சென்னைக்கு புறப்பட்டுச் செல்கின்றனர்.

நாளைய மேற்படி சந்திப்பின் போது வடக்கு மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து எடுத்து விளக்கப்படும்.

இச்சந்திப்பின் போது முக்கியமான பல முடிவுகள் எடுக்கப்படும் என்று தெரியவருகிறது.

# வலி.வடக்கில் படையினர் வசமுள்ள காணிகளை மீளளிக்க ஏற்பாடு



### யாழ்.தளபதியுடனான சந்திப்பில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கில் படையினர் வசம் இருக்கும் பொது மக்களின் அனேகமான குடியிருப்புப் பகுதிகளை மீண்டும் அவர்களிடம் கையளிப்பதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி உதய பெரேரா தெரிவித்தார்.

நேற்று ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் முக்கியஸ்தர்களுக்கும், கட்டளைத் தளபதிக்குமிடையிலான சந்திப்பு பலாலி கூட்டுப் படைகளின் தலைமையகத்தில் இடம்பெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் மக்கள் குடியிருப்பு பகுதியில் இராணுவத்தினர் நிலை கொண்டிருப்பதை நான் விரும்பவில்லை. அதன் நடவடிக்கையாகவே 200 இற்கு மேற்பட்ட காவலரண்களும், 30 இற்கு மேற்பட்ட இராணுவ விற்பனை நிலையங்களும் மூடப்பட்டுள்ளன என யாழ். மாவட்ட கட்டளைத்தளபதி உதயபெரேரா தெரிவித்தார்.

புதிதாக பொறுப்பேற்றுள்ள யாழ்.கட்டளைத்தளபதியுடனான சந்திப்பில் மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் தொடர்பாக எடுத்துரைக்கப்பட்டது. இதில் மக்களுக்கு உரிமையான வாழ்விடங்களை மீள ஒப்படைப்பதில் தாம் கூடிய அக்கறை கொண்டிருப்பதாகவும், அதிலும் வலிகாமம் வடக்குப் பகுதியிலுள்ள பல கிராமங்களை மக்களிடம் மீளக் கையளிப்பதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ளுவதாகவும், வலிகாமம் கிழக்கு பிரதேசத்தின் வளலாய் கிராம அலுவலர் பிரிவினை முழுமையாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், மேலும் இராணுவத்தினரால் உற்பத்தி செய்யப்படும் மரக்கறி வகைகளை மலிவு

(19) பக்கம் பார்க்க...

## மேலும் ஒரு மண்டையோடு மன்னார் புதைகுழியில் மீட்பு

மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் தோண்டப்பட்டு வரும் மனிதப் புதைகுழியில் இருந்து மேலுமொரு மண்டையோடு நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இதேவேளை, திருக்கேதீஸ்வரத்தில் கடந்த டிசம்பர் மாதம் முன்னெடுக்கப்பட்ட நீர்க்குழாய் பொருத்தும் நடவடிக்கைகள் தொடர்பான விரிவான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு மன்னார் நீதவான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

## முல்லையில் மீள் குடியமர்வு; மாவட்டச் செயலகத்தில் மாநாடு

### ஐ.நா.அதிகாரிகளும் பங்கேற்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியமர்வைத் துரிதமாக்கும் முகமாக துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது.

இதன் ஒரு கட்டமாக நேற்று முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் உயர்மட்ட மாநாடு ஒன்று நடைபெற்றது.

இந்த மாநாட்டில் பங்கு பற்றுவதற்காகவும் மீள்குடியேற்ற நடவடிக்கை குறித்து ஆராய்வதற்காகவும் உயர்மட்ட அதிகாரிகள் குழுவொன்று நேற்று முல்லைத்தீவு மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தது.

இந்தக் குழுவில் குடியேற்ற அமைச்சின் செயலாளர் மற்றும் ஜனாதிபதி செயலக உயர் அதிகாரிகள் ஆகியோரும் இடம்பெற்றிருந்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற உயர்மட்ட மாநாட்டிலும் இந்தக் குழு பங்கேற்றுள்ளது.

கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, துணுக்காய், மாந்தை கிழக்கு, மணலாறு, ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேச செயலர்களும் மற்றும் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான அமைப்பின் வன்னிப் பிராந்தியந்திற்குப் பொறுப்பான அதிகாரியும் இம் மாநாட்டில் பங்கேற்றிருந்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேற்றத்தை முன்னெடுக்க தடையாகவுள்ள விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து, குறித்த பகுதிகளில் மக்களை மீள்குடியேற்றுவது தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேலும் இந்த அதிகாரிகள் கேப்பாபிலவு, முள்ளிவாய்க்கால் போன்ற பகுதிகளுக்கும் விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

சம்பியன்



08

தப்பினார்



18

## பேருந்துக் கட்டணம் மீளாய்வுக்கு ஏற்பாடு

(கொழும்பு)

தேசிய பேருந்து பயணக் கட்டண சீர்த்திருத்தம் தொடர்பான பொது மீளாய்வு ஒன்றினை நடத்துவதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இதற்காக இலங்கையில் போக்குவரத்து துறையில் ஈடுபட்டுள்ள அனைத்து அரச நிறுவனங்களும் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக அதன் தலைவர் ரொஷான் குணவர்தன தெரிவித்துள்ளார்.

இதன்படி இந்த மீளாய்வில் தேசியப் போக்குவரத்துச்சபை, தொடரூந்து திணைக்களம், இலங்கை போக்குவரத்துச்சபை மற்றும் மாகாண போக்குவரத்து அதிகார சபை ஆகியவற்றின் அதிகாரிகள் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

## குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(காரைநகர்)

காரைநகரில் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டிருக்கிறார். மருதடி என்ற இடத்தைச் சேர்ந்த பஞ்சாட்சரம் சூரியகுமார் (வயது-52) என்பவரே அவரது வீட்டுக்கருகில் உள்ள வளவு ஒன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டிருக்கிறார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் தொடர்கின்றனர். (50)

## யாழில். மீண்டும் டெங்கு; நேற்று மட்டும் இருவர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

டெங்குத் தொற்றுக்கு இலக்காகிய இருவர் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சுழிபுரம் மற்றும் நாவாந்துறைப் பகுதிகளில் இருந்தே இவர்கள் இருவரும் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு டெங்கு நோய்த் தொற்றுக்கு இலக்காகி யாழ். போதனா வைத்தியசாலையில் இந்த மாதம் 30 இற்கும் மேற்பட்டவர்கள் அனுமதிக்கப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

**அமிர்தலிங்கம் கொலைக்கு காரண கர்த்தா யார்?**

நாளைய முரசில்

# இல்லமெய்வல்லுநர் போட்டிகள்; பாடசாலைகளில் துரித ஏற்பாடு

வலிகாமம் வலயப் பாடசாலைகளில் இல்ல மெய்வல்லுனர்ப் போட்டிகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் ஆரம்பமாகியுள்ளன.

பாடசாலை மட்ட விளையாட்டுப் போட்டிகளை மாணவர்களிடையே நடத்துவதற்காக மாணவர்களை இல்லங்களாகப் பிரித்தல், இல்லம் தலைவர்களை தெரிவு செய்தல் முதலான செயற்பாடுகள் பாடசாலைகளில் ஆரம்பமாகியுள்ளன.

முதலாம் தவணை முடிவிற்குள் பாடசாலைமட்ட விளையாட்டுப் போட்டிகள் முடிவடைந்து கோட்டமட்ட,, வலயமட்ட போட்டிகள் நடைபெற ஒத்துழைப்பு நல்கும வகையில் பாடசாலை மட்ட போட்டிகள் விரைவில் நடத்த ஏற்பாடாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (17)

## மிருக வைத்தியம்; ஓலைச்சுவடிகள்

மாடு, ஆடுகளுக்கு ஏற்படும் நோய்கள் அதற்குரிய சிகிச்சை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் என்கின்ற பண்டைய ஓலைச் சுவடிகளை படிக்க ஆவல் உள்ளவர்கள் வரணி சேலப்பிட்டி கந்தசாமி கோவிலடியில் வசிக்கும் சி.கந்தராசா என்பவருடன் தொடர்புகொண்டு இந்த ஏட்டுச் சுவடிகளைப் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (150)

# கிளிநொச்சி பொதுச்சந்தைக்கு மீண்டும் நேற்று முதல் மின்சாரம்

(கிளிநொச்சி)

துண்டிக்கப்பட்ட கிளிநொச்சி பொதுச் சந்தைக்கான மின்சாரம் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திர குமாரின் நடவடிக்கையினைத் தொடர்ந்து மீண்டும் நேற்று முதல் வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையினரால் இலங்கை மின்சார சபைக்கு கடந்த பல மாதங்களுக்கான மின்சாரக் கட்டணமாக 4 இலட்சத்து 40000 ஆயிரத்திற்கு மேல் செலுத்தப் படாமையினால் மின்சார சபையினரால் சந்தைக்கான மின் இணைப்பு கடந்த வியாழன் முதல் துண்டிக்கப்பட்டது. இதனால் வியாபாரிகள், பொது மக்கள், உற்பத்தியாளர்கள் என பலதரப்பினரும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வந்தனர்.

வியாபாரிகள் பயன்படுத்துகின்ற இலத்திரனியல் தராசுகளுக்கான மின்சாரம் இன்மையால் சந்தை வியாபாரிகள் விற்பனையில் பெரும் நெருக்கடிகளை சந்தித்தனர் அத்தோடு நேற்றைய தினம் மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் சந்தை வியாபாரிகள் விற்பனை நடவடிக்கையில் ஈடுப்பட்ட நிலைமையும் ஏற்பட்டுள்ளது இதுமாத்திரமன்றி நீரின்மையால் மலசல கூடத்திற்கு செல்லமுடியாத அவலமும் ஏற்பட்டுள்ளது மேலும் மீன் சந்தையினை சுத்தம் செய்ய முடியாத நிலையில் சுகாதார சீர்கேடுகள் மிக்க இடமாக சந்தை காணப்பட்ட நிலையில் கரைச்சி பிரதேச சபையினர் மீண்டும் மினசார விநியோகத்தை வழங்கும் வகையில் நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளாமல் சனி ஞாயிறு விடுமுறையில் சென்று விட்ட நிலையில்

கிளிநொச்சி சந்தை வியாபாரிகள் மற்றும் பொதுமக்களால் மின்சாரம் இல்லாமல் தாங்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகளை கொழும்பிலிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமாரின் கவனத்திற்கு கொண்டுவந்தனர்.

இந்த நிலையில் அங்கிருந்து தொலைபேசி மூலம் உரிய மின்சார சபை அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு மேற்கொண்ட நடவடிக்கையினை அடுத்து நேற்று பத்து மணிக்கு கிளிநொச்சி பொதுச் சந்தைக்கான மின்சாரம் மீண்டும் வழங்கப்பட்டு சந்தை நடவடிக்கைகள் சீராக வழமைக்கு திரும்பியது.

# ஆசிரியரின் மோட்டார் சைக்கிள் மாணவர்களால் சேதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப் பகுதியிலுள்ள பாடசாலையொன்றில் கற்பிக்கும் பெண் ஆசிரியரின் மோட்டார் சைக்கிள் சீற் மாண வர்களால் சேதமாக்கப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது பிரதான வீதியில் புகழ்பெற்ற கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றிற்கு அருகிலுள்ள பாடசாலையில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வடமராட்சி பாடசாலை ஒன்றிலிருந்து அண்மையில் குறித்த பாடசாலைக்கு இடமாற்றலாகி வந்த ஆசிரியரின் மோட்டார் சைக்கிளில் பாட வேளையில் மாணவர் சிலர் அமர்ந்திருந்து கண்ணாடியில் தலைமுடியை சரி செய்துகொண்டிருந்தனர்.

இதை அவதானித்த ஆசிரியர் மாணவர்களிடம் இவ்வாறு செய்யாது வகுப்புகளில் சென்று கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுங்கள் என தெரிவித்துள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த குறித்த மாணவர்குழு குறித்த ஆசிரியரின் மோட்டார் சைக்கிள் சீற்றை கிழித்ததுடன் அருகிலிருந்த அதேமாரியான இன்னொரு பெண் ஆசிரியரின் மோட்டார் சைக்கிள சீற்றினையும் கிழித்துள்ளனர்.

பாடசாலை முடித்து வீடு திரும்பத் தயாரக மோட்டார் சைக்கிளின் அருகில் வந்த போதே குறித்த சம்பவம் ஆசிரியர்களுக்கு தெரியவந்துள்ளது.

இதனால் ஆசிரியர்கள் அதிர்ச்சியுடன் கூடிய கவலையடைந்ததுடன் மாணவர்களின் நலனுக்காக சொன்னதற்கு கிடைத்த பரிசு எனத் தெரிவித்னார்.

இதே வேளை சம்பவத்தில் பாதிக்கப்பட்ட ஆசிரியரில் ஒருவர் குறித்த பாடசாலை மீது ஆர்வம் கொண்டு அண்மையிலேயே அப்பாடசாலைக்கு இட மாற்றலாகி வந்தவர் என்பது குறிபபிடத்தக்கது. (48)

## பெயர் மாற்றம்

இல.07 கண்டிறோட், கச்சேரி யாழ்ப்பாணம் எனும் முகவரியைச் சேர்ந்த றதுஹமஹே பிரதிப் நிலங்க ஆகிய நான் (953663015V) 26.01.2014 இன்றிலிருந்து எனது பெயரினை அப்துல் முகமது றிசாத் என மாற்றிக் கொள் கிறேன் என்பதனை சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

(R/334) அப்துல் முகமது றிசாத்

## விசேட கருத்தரங்கு

வரணி வடக்கு J/339 கிராம அலுவலர் பிரிவில் வேள் விஷன் அரச சார்பற்ற நிறுவனத்தால் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதால் அதற்கான முன் ஆயத்தக் கருத்தரங்கு கடந்த திங்கட்கிழமை 9 மணியளவில் வடவரணி சிமிழ் கண்ணகைபுரம் பொது மண்டபத்தில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு பயனடைந்தனர். (150)

# இன்று இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

தீவக லயன்ஸ் கழகத்தினால் இன்று காலை 9 மணிக்கு புங்குடுதீவு சர்வோதய வளாகத்தில் இலவச சத்துணவு வழங்கல் மரநடுகை, முன்பள்ளி மாணவர்களுக்கு பற்பசை வழங்கல் இலவச நீரிழிவுப் பரிசோதனை, இரத்தப் பரிசோதனை, பொது மருத்துவ பரிசோதனை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

தீவக லயன்ஸ் கழகத்தலைவர் லயன் லம்போதரன் JP தலைமையில் நடைபெறவிருக்கும் இவ் நிகழ்வினை லயன் ரி.குருநாதசிவம் JP (சிவாநறுமணப் பூங்கா யாழ்ப்பாணம்) ஆரம்பித்து வைக்கவுள்ளார். அனைவரையும் இவ் நிகழ்வுகளில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# காரைநகர் வீதி திருத்தம்

(காரைநகர்)

காரைநகர் புதுறோட் சந்தியில் ஆரம்பித்து சிவன் கோவில் வரை 2.5 கிலோமீற்றர் நீளமான வீதி தார் கலவை இட்டு சமப்படுத்தும் வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.


இவ்வீதி 5 மீற்றர் அகலத்தில் காப்பெற் வீதியாகவும் இரு மருங்கும் 1.5 மீற்றர் கிரவல் இடப்பட்டும் அமைக்கப்படவுள்ளது. இதற்காக 8.5 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதாகத் தெரிவிககப்பட்டுள்ளது. இதன் ஆரம்பக்கட்ட வேலை தற்போது நடைபெற்று வருகின்றது. (50)

# யாழ்.வான் பரப்பில் கிபிர் விமானங்கள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை விமானப்படையின் கிபிர் குண்டுவீச்சு விமானங்கள் நேற்று முன்தினம் காலை யாழ்.தீவுப் பகுதிகளில் தாளப்பறந்து சென்றது. பாரிய இரைச்சலுடன் தாளப்பறந்து வந்த இந்தக் குண்டுவீச்சு விமானங்களைப் பார்த்து அப்பகுதி மக்கள் அச்சமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(பா)



றெக்கிங்லீவ்ஸ் என்ற அமைப்பில் உருவாக்கப்பட்டுப் பேணப்படும் ஆவணக்காப்பகம் நேற்று யாழ்.கோவில் வீதியில் இலக்கம் 199 எனும் முகவரியில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வின் பதிவினை காணலம்.

படம்- பா.பார்த்தீபன்


நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி எண் 225 | திகதி 2014.01.24

வெற்றி இலக்கங்கள்

01 02 16 26 Y

பரிசுத் தொகை ரூபா.11,450,620/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| [illegible] | 1,000,000/- | 1 | 1,000,000/- |
| [illegible] | 50,000/- | 7 | 350,000/- |
| [illegible] | 1,000/- | 214 | 214,000/- |
| [illegible] | 1,000/- | 394 | 394,000/- |
| [illegible] | 60/- | 9736 | 584,160/- |
| [illegible] | 40/- | 5106 | 204,240/- |
| [illegible] | 20/- | 127651 | 2,553,020/- |
| [illegible] | 20/- | 18449 | 368,980/- |
| [illegible] | 11,450,620/- | | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,668,400/- |

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 11,700,380/-

2014.01.28ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுபடியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3265) web : www.dlb.lk

# பாடசாலையின் சிறந்த முன்னேற்றத்திற்கு மாணவரின் சாதனையே காரணமாகிறது

## கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் முருகவேல்



(கிளிநொச்சி)

ஒரு பாடசாலை முன்னேற்றம் அடைவதற்கு அப்பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள் பெறுகின்ற சாதனைகளே காரணமாகின்றது. அந்தவகையில் கிளிநொச்சி மத்திய கல்லூரி கல்வியில் மட்டுமல்ல இணைப்பாடவிதானச் செயற்பாடுகளான விளையாட்டிலும் சாதனைகளை நிலைநாட்டவேண்டும் என கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் முருகவேல் தெரிவித்தார்.

தேசிய பாடசாலையான கிளிநொச்சி மத்திய கல்லூரியின் பான்ட் அணியின் ஆற்றுகை நிகழ்வு அண்மையில் அதிபர் ரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இந்தப் பாடசாலை முதன்மையானது. இந்தப் பாடசாலையில் தான் அதிவிசேட சித்தியெய்திய உயர்தர வகுப்பு மாணவன் இருக்கிறார். நான் எங்கும் எமது கல்வி வளர்ச்சியை பறைசாற்ற இந்தப் பாடசாலையின் கல்வித்தரம் காரணமாய் இருககிறது.

எமது மாவட்டம் தேசிய ரீதியில் உயர்தரத்தில் 70 வீத சித்திகளைப் பெற்று முதல்நிலை வகிப்பதையும் நான் இங்கு பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.. அதில் இந்த கிளிநொச்சி மத்தியகல்லூரி தேசிய பாடசாலையின் பங்கும் முதன்மையானது எனக் குறிப்பிடடார்.

இந்நிகழ்வில் தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், வடக்கு மாகாணசபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை கரைச்சி பிரதேச சபையின் உப தவிசாளர் வ.நகுலேஸ்வரன், அயல் பாடசாலை அதிபர்களான பங்கயற்செல்வன், குகானந்தராசா, கிளிநொச்சி மத்திய கல்லூரி தேசிய பாடசாலையின் ஆரம்பப்பிரிவு அதிபர், ஆசிரியர் இராஜேந் திரகுமார், கிளிநொச்சி மத் திய கல்லூரி தேசிய பாட சாலையின் பிரதி அதிபர்கள் திருமதி கணேஸ்வரநாதன், ஆலாலசுந்தரம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.(48)

# தியாகராஜ இசை ஆராதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கம்பன் கழகம் நடாத்தும் தியாகராஜ சுவாமிகளுக்கான இசை ஆராதனை நிகழ்வு இன்று நல்லூர் கம்பன் கோட்ட மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகும் இந்நிகழ்வில் வரவேற்புரையை யாழ். கம்பன் கழகத் தலைவர் லோ.துஷிகரன், தொடக்கவுரையை யாழ். பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் கலாநிதி ஸ்ரீ தர்சனன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

காலை நிகழ்ச்சியாக யாழ்ப்பாண இசைக் கலைஞர்கள் இணைந்து வழங்கும் இசை ஆராதனையும் மங்கல வாத்தியக் கலைஞர்கள் இணைந்து வழங்கும் தியாகராஜ சுவாமிகள் இசை ஆராதனையும் நடைபெறவுள்ளன. மாலை நிகழ்வில் ரஜீந்திரன், சிவகுமார் ஆகியோரின் நாதஸ்வர இசையும் தட்சணாமூர்த்தி, சதீஸ்குமார், ரவீந்திரன் ஆகியோரின் தவில் இசையும் ந.பரந்தாமனின் குரலிசையும் நக்கீரனின் குழலிசையும் நடைபெறவுள்ளன.

# சாமசிறி விருது வழங்கல்

(யாழ்ப்பாணம்)



அகில இன நல்லுறவு ஒன்றியத்தின் ·25ஆவது ஆண்டு விருது வழங்கும் விழா கடந்த 19ஆம் திகதி மாத்தறையில் நடை பெற்றது. மானிப்பாயைச் சேர்ந்த தேசமானி லயன் எஸ்.ஜெ.செல்வராஜா (JP) சமாதான செயற்பாடுகளுக்கான உயர் விருதான "சாமசிறி" விருதுடன், பரந்துபட்ட மக்கள் சேவைக்கான "சமூகஜோதி" விருது மற்றும் பல்துறைசார் பொதுச்சேவை பங்களிப்புக்கான "தேசகீர்த்தி" விருது ஆகிய மூன்று விருதுகளைப் பெற்றுக்கொண்டார்.

இவ் விருதுகளை விழாவின் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக பிரதி அமைச்சர் கேமால் குணசேகர வழங்கிக் கௌரவித்தார். கடந்த காலங்களில் தேசத்தின் உயரிய விருது "தேசமானி" விருது, "லங்கா புத்திர" மற்றும் "விஸ்வகீர்த்தி" ஆகிய விருதுகளை இவர் பெற்றுக்கொண்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

# நல்லூர்பிரதேச செயலகத்தால் இலக்கியப் போட்டிக்கு விண்ணப்பம்

நல்லூர் பிரதேச செயலக கலாசாரக் குழுவினரால் 2014 ஆம் ஆண்டு பிரதேசத்திற்கு உட்பட்ட பாடசாலை மாணவ, மாணவிகள் மற்றும் திறந்த பிரிவினருக்கான இலக்கியப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மக்கள் மத்தியில் வருடாவருடம் இலக்கியக்கலை மற்றும் கலாசார விழிப்புணர்வை தோற்றுவிக்கும் நோக்கில் பிரதேச, மாவட்ட, தேசிய மட்டங்களில் மேற்படி போட்டிகள் நடாத்தப்பட்டுவருகிறது.

பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் கட்டுரைப்போட்டி, கவிதை எழுதுதல் கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவுகளுக்கும் கவிதை பாடல் போட்டி பாலர்பிரிவு, கனிஷ்ட பிரிவு, சிரேஷ்ட பிரிவுக்கும் கையெழுத்துப் போட்டி, பாடல் நயத்தல் போட்டி என்பனவும் நடாத்தப்படவுள்ளன.

திறந்த பிரிவில் பாடல் ஆக்கம், நாட்டார் கலை கற்றல், இலக்கிய விபரணம், சிறுகதை, கவிதை கற்றல், சிறுகதை, கவிதை ஆக்கம், சிறுவர் கதை ஆகிய ஆறு வகைகளிலும் போட்டிகள் நடாத்தப்பட இருக்கின்றன.

பாலர் பிரிவு 06 - 10 வயது வரையும் கனிஷ்ட பிரிவு 11 - 15 வயது வரையும், சிரேஷ்ட பிரிவு 16 - 19 வயது வரையும், 19 வயதுக்கு மேற்பட்டவர்கள் திறந்த பிரிவிலும் கலந்து கொள்ளலாம். சகல போட்டிகளுக்குமான விண்ணப்பங்கள் அனைத்தும் 2014 ஆம் வருடம் மார்ச் 03 ஆம் திகதிக்கு முன்னதாக அந்தந்தப் பிரதேச செயலக செயலாளருக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்க வேண்டுமென வும், ஒருவர் ஒருபடைப்பு மட்டும் சமர்ப் பிக்கவும், A4 தாளில் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதப்பட்டிருக்க வேண்டு மெனவும் அறியத்தரப்பட்டுள்ளது.

மாணவர்கள் மற்றும் திறந்த பிரிவுகளில் கலந்து கொள்ள விரும்புவோர் மாதிரிப் படிவங்களையும், விதிமுறைகளையும் நல்லூர், பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாமெனவும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (68)

# நில அளவை கள உதவியாளர் பதவிக்கு விண்ணப்பங்கோரல்

(யாழ்ப்பாணம்)

நில அளவைத் திணைக்களத்தில் நில அளவைக் கள உதவியாளர்கள் பதவிக்கு தகைமையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

18 வயதுக்கும் 45 வயதுக்குட்பட்டவராகவும் க.பொ.த. (சா/த) பரீட்சையில் 3 திறமைச் சித்தியுடனும், தொழில்சார் தகைமைகளுடன், இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றக் கூடிய உடல் உள ரீதியான தகைமைகளும், சிறந்த நடத்தை உடையவராகவும் இருத்தல் அவசியமாகும்.

பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்குட்பட்டதுமாகும். பரீட்சை பொது அறிவு, நுண்ணறிவு ஆகிய இருபாடங்களில் மூன்று மொழியிலும் நடைபெறும்.


விண்ணப்பங்கள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 21ஆம் திகதிக்கு முன்னர் சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் (பரீட்சை) அளவையியல் படமாக்கல் நிறுவனம் தியத்தலாவை என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும்.


கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ஆரம்பமட்டப்பகுதி தேர்ச்சி பெற்ற பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு எனக்குறிப்பிடல் வேண்டும். (105)

## மாசிமக பெருவிழா

தெல்லிப்பளை துர்க்காபுரம் அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான மாசிமக இலட்சார்ச்சனையும் மாசிமகப் பெருவிழாவும் எதிர்வரும் 5ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது. இதில் இலட்சார்ச்சனை 5ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதுடன் இந்நாட்களில் சங்கற்பம், சதுர்ஷஷ்டி உபகாரம், தீபாராதனை, அர்ச்சனை, ஹோமம், அர்த்தசாமப்பூஜை என்பன இடம் பெறும்.

தொடர்ந்து மாசிமகப் பெருவிழா மறுநாள் 15ஆம் திகதி நடைபெறவுள்ளதுடன் இவ்விழாவில் மாசிமகத்தீர்த்தம், காலை சந்திப் பூசை, கும்பபூசை, திரவியாபிஷேகம், அபிஷேகம் ஸ்வர்ணபத்ம புஸ்பார்ச்சனை தொடர்ந்து அம்பாள் வீதி உலா என்பன இடம்பெறவுள்ளது.





காரைநகர் பயிரிக்கூடல் சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தின் தேர்த்திருவிழா முதன் முதலாக தைப்பொங்கல் அன்று நடைபெற்றது. இதில் முருகப்பெருமான் எழுந்தருளி வருவதையும் புதிய தேரில்முருகன் ஆரோகணிப்பதையும் காணலாம். (50)

நற்செயல் மேலானது, அதனிலும் மேலானது நல்லெண்ணம்.
- சுவாமி விவேகானந்தர்.

தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## விடுதலையை நேசித்தல்!

எல்லோரும்தான் விடுதலையை நேசிக்கிறோம். அந்த விருப்பத்தில் நாம் எதிர்பார்ப்பது என்ன? "விட்டுவிடுதலையாகி நிற்பாய் இந்தச் சிட்டுக்குருவியைப் போலே" என்கிறான் பாரதி. அதன் பிறகு வரும் வரிகளில் விடுதலை வாழ்க்கையை பல படியாகச் சொல்கிறான்.

எட்டுத் திசையும் பறந்து திரிதல், பீடையில்லாதோர் கூடு கட்டிக் கொள்ளுதல், தானியம் சேகரித்துக் கொணர்தல், குஞ்சுகளுக்கு உணவு கொடுத்தன்பு செய்தல், துணையோடு இன்பம் பேசிக் களித்து, கதை சொல்லித் தூங்கிப் பின் வைகறையாகு முன் பாடி விழித்தல் என்றெல்லாம்தான் விடுதலை வாழ்க்கை பற்றிச் சொல்கிறான்.

விடுதலை வாழ்க்கை குறித்த நம் நேசம் மனப்பூர்வமானதாக இருக்கிறதா? அத்தகைய நம் வாழ்வுக்குத் தடையாக மற்றவர்கள் மட்டும்தான் இருக்கிறார்களா? நம் மனதுக்குள் விடுதலை எண்ணங்கள் உண்டா? இருப்பவை விடுதலை எண்ணங்கள்தானா?

நம்மைப் பற்றி நமக்கு மிகையான எண்ணம் இருக்கிறது. அதுதான் மற்ற எவருடனும் இணக்கம் கொள்ள முடியாதவாறு நம்மைத் தடுத்துக் கொண்டிருப்பதாகப் படுகிறது. மற்றவர்களை மறுக்கும் அல்லது மற்றையோர் பற்றிக் கவனத்தில் கொள்ளாத ஒரு தேசியத்தையே நாம் தொடர்ந்து பேசிவருகிறோம்.

பல்லினங்கள் இணங்கி வாழும் பன்மைச் சூழலை அங்கீகரிக்கும் விதமாக நம் தேசிய எழுச்சிப் பேச்சுக்கள் இருக்கின்றனவா? அவ்வாறில்லையெனில், நாம் பேசிக்கொண்டிருக்கும் தேசியம் இப்போதும் தனிநாட்டை நோக்கியதுதானா?

பிரபல இந்திய மார்க்சியரான இஜாஸ் அஹமது அவர்கள் சொல்வது இது:

*"பெரும்பாலான தேசியங்களின் தர்க்கம், கலாசார பன்முகத் தன்மையை நோக்கியோ; உள்ளார்ந்து கொள்வதை நோக்கியோ; பல்முரண் தன்மையை உள்ளடக்கியது நோக்கியோ இல்லை. மாறாக தனித்ததொரு தன்மையை, சுத்திகரித்தலை அல்லது பெரும்பான்மைவாதத்தை நோக்கித்தான் இருக் கிறது.*

*இந்தச் சாய்வினால்தான் நமது காலத்தில் தேசியம் என்பது இனவாத-நிறவாதத்துக்கு நெருங்கிய சொந்தமாக இருக்கிறது.... நம் காலத்தின் தேசியங்கள் ஒடுக்குமுறையானதாகவும் இன்னும் பாசிசமாகவும் வந்துவிட்டது.*

*குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், சமத்துவம், உலகமயமான நாகரீகம், பல்கலாசாரம் போன்றவற்றை அது மறுத்துவிட்டது. எல்லாப் பாசிசங்களும் அதிதேசியக் கருத்தியலினால்தான் கட்டப்பட்டன."*

நாம் மிகவும் மேன்மையானவர்கள் என்ற எண்ணத்தினூடாக மற்றவர்களுக்கு ஊறு செய்வதை நியாயப்படுத்தும் தேச பக்தி, அது நமக்கு வேண்டாம். நமது அடையாளம் மட்டுமே மேன்மையானதல்ல; நமது வாழ்வு என்பது மற்றைய அடையாள மனிதர்களோடும் வாழ்வதுதான்.

மற்றவர்களைச் சகித்துக் கொள்ளல் என்பதே நமக்குத் தேவைப்படுகிற மிக முக்கியமான மனத்தயாரிப்பு. நமது இருப்பும் வாழ்வும் மகிழ்ச்சியும் மற்றவர்களின் இருப்பையும் மகிழ்வையும் ஏற்றுக்கொள்வதிலும், ஏற்றுக்கொள்ள வைப்பதிலும் தான் இருக்கிறது என்பதை உணர வேண்டும்.

மற்றவர்களுடன் பன்மைத் தன்மையான ஒரு சூழலில் வாழ்வதற்கும் அதனால் இதம் பெறவுமான ஒரு மனோநிலையே நமது தேவை. இனத்தாலோ மொழியாலோ மதத்தாலோ கலாசாரத்தாலோ நம்மிடமிருந்து வேறுபடுகிறவர்களைத் தண்டிக்கும், அழிக்கும் உரிமையையோ ஆவேசத்தையோ எடுத்துக் கொள்ளாது, சேர்ந்து வாழ்தலை நாம் பழக வேண்டும்.

விடுதலையை நேசித்தல் என்பது இதுவாகத்தான் இருக்க முடியும்.

- ஆசிரியர்

# நாட்டு மக்கள் நகைகளை அடகு வைக்கும் யுகம்

## ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்

(கொழும்பு)

நாட்டு மக்கள் தங்க நகைகளை அதிகமாக அடகுவைக்கும் யுகம் ராஜபக்ஷ யுகமே என்பது இலங்கை வரலாற்றில் பதியப்படும் நிலை இன்றைய அரசாங்கத்தினால் தோற்றுவிக் கப்பட்டிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

வாழ்க்கைச்செலவு என்பது பாரிய பிரச்சினையாக உருவெடுத்து இருக்கின்ற இன்றைய காலகட்டத்தில் நாட்டு மக்கள் தம்மிடமிருக்கின்ற தங்க நகைகளை அட்கு கடைகளில் அடகு வைக்கின்றனர்.

ஐக்கிய தேசியக்கட்சியைப் பொறுத்தவரையில் நாம் வெளிநாடுகளிலிருந்து கடன்களை பெற்றோம். நிவாரண உதவிகளையும் பெற்றோம், அவற்றைக்கொண்டு மகாவலி, கம் உதாவ மின்சாரம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்களை ஏற படுத்தினோம்.

இன்று அரசாங்கம் பெறுகின்ற பாரிய அளவிலான வெளிநாட்டு கடன்களை கொண்டு என்னத்தை சாதிக்கின்றது. என்பதுதான் இங்கு இருக்கும் பிரதான கேள்வியாகும்.

இன்று நாட்டிலுள்ள அனைத்து சமூகத்தினரும் பொருளாதார பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். அப்படியிருக்கும்போது அரசாங்கத்தினது பொருளாதாரக் கொள்கை எவ்வாறு இருக்கின்றது என்பதை சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவினால் பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்பட்ட இலவச பகல் 'உணவுத் திட்டம் இன்று இல்லாமல் செய்யப்பட்டிருக்கின்றது.

மறுபுறத்தில் தமது பிள்ளைகளுக்காக பெற்றோர்கள், பாடசாலைத் தேவைக்கென பெருந்தொகையான பணத்தை செலவு செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றனர் என்றார்.

# தேர்தல் வேட்புமனுத்தாக்கல்; புதிய சட்ட திட்டங்கள் அமுல்

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலின் பொருட்டு தாக்கல் செய்யப்படும் வேட்புமனுவுடன், வேட்பாளர்களின் அடையாள அட்டை அல்லது பிறப்பு அத்தாட்சிப் பத்திரப் பிரதியும் சமர்ப்பிக்கப்படவேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

வேட்பாளர்களின் சொத்துக்கள், பொறுப்புகள் தொடர்பிலான பிரகடனங்களின்போது தோன்றும் பிரச்சினைகளை தவிர்ப்பதே இந்த நடவடிக்கையின் நோக்கம் ஆகும்.

இந்த அடையாள அட்டைகள் மற்றும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களின் பிரதிகள், கட்சிகளின் பொதுச் செயலாளர்கள் அல்லது சுயேட்சைக் குழுக்களின் தலைவர்களால் உறுதிப் படுத்தப்படவேண்டும்.

வேட்புமனுக்கள் நிராகரிப்படுவதைத் தவிர்த்துக் கொள்வதற்கான உரிய வழிமுறைகளைப் பின்பற்றுமாறும் கட்சிப் பிரதிநிதிகளிடம் தேர்தல்கள் ஆணையாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

கட்சிகளின் பொதுச் செயலாளர்கள் மற்றும் வேட்புமனுவில் உள்ளடக்கப்பட்டுள்ள வேட்பாளர்களில் முதல் மூன்று பேர் வேட்புமனுத் தாக்கல் செய்வதற்காக அனுமதிக்கப்படுவார்கள்.

இதேவேளை, வேட்பமனுக்களைத் தாக்கல் செய்யும்போது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களின் நான்கு பிரதிநிதிகள் மாத்திரமே தேர்தல்கள் செயலகத்திற்குள் அனுமதிக்கப்படுவார்கள் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# இலங்கையின் மொத்த ஏற்றுமதி கடந்த ஆண்டில் அதிகரிப்பு

நாட்டின் மொத்த ஏற்றுமதி கடந்த ஆண்டு 6.2 வீதம் அதிகரித்து 10.37 பில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியிருந்தது. 2012ஆம் ஆண்டு நாட்டின் மொத்த ஏற்றுமதி 7 வீத சரிவை பதிவு செய்திருந்தது.

ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தரவுகளுக்கு அமைவாக, 2013ஆம் ஆண்டில், ஏற்றுமதி வருமானம் 10,379,94 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியிருந்தது. இந்தப் பெறுமதி 2012ஆம் ஆண்டின் ஏற்றுமதியுடன் ஒப்பிடுகையில் 6.2 வீத வளர்ச்சியாகும். விவசாய உற்பத்திகள், ஆடை உற்பத்திகள் போன்றன அதிகளவு ஏற்றுமதியாகியிருந்தன.

# சமூகங்களின் ஒற்றுமைக்கு முஸ்லிம்கள் உதவ வேண்டும்

## ஈராக் இஸ்லாமிய மார்க்க அறிஞர்

இலங்கையில் நிலவுகின்ற சமூகங்களுக்கிடையிலான ஒற்றுமைக்கு முஸ்லிம்கள் உதவியாக இருக்கவேண்டும் என்று ஈராக் நாட்டின் இஸ்லாமிய மார்க்க அறிஞர் அஸ்ஸெய்ஹ் அபீபுத்தீன் பக்தாதி தெரிவித துள்ளார்.

ஏறாவூர் நகர சபைத் தலைவர் அலிசாஹீர் மௌலானாவின் அழைப்பின் பேரில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்த இஸ்லாமிய மார்க்க அறிஞர் அஸ்ஸெய்ஹ் அபீபுத்தீன் பக்தாதி, காத்தான் குடிக்கு நேற்றுக்காலை விஜயம் செய்தார்.

இவருக்கு காத்தான்குடி பத்ரிய்யா ஜும் ஆ பள்ளி வாசலில் வரவேற்பளிக்கப்பட்டது. இதன்பின்னர் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

உங்களையெல்லாம் சந்திப்பதில் எமக்கு பெருமகிழ்ச்சியாக இருக்கின்றது. இந்த நாட்டில் இருக்கின்ற சகல இனங்களும் சமாதானத்துடன் ஒற்றுமையாக வாழவேண்டும். அதற்கு முஸ்லிம்களாகிய நாம் உறுதுணையாக இருக்கவேண்டும் என்றார்.

# பாரிய நிதி நெருக்கடியில் அரச சார்பற்ற நிறுவனங்கள்

(கொழும்பு)

இலங்கையில் போர் முடிவுக்கு வந்த பின்னர் மேற்குலக நாடுகளின் நிதியுதவியின் கீழ் இயங்கி வந்த அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு நிதியுதவிகள் நிறுத்தப்பட்டுள்ளதால், அந்த நிறுவன்ங்கள் பலத்த நிதி நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சமாதானம், நல்லிணக்கம் மற்றும் நல்லாட்சிக்காக குரல் கொடுத்து வரும் பல அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு இந்த நிதி நெருக்கடி பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடும் நிதி நெருக்கடி காரணமாக அரசசார்பற்ற நிறுவனங்களின் ஊழியர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளதோடு கொழும்பில் பெரிய கட்டடங்களில் அலுவலகங்களை நடத்தி வந்த நிறுவனங்கள், கொழும்புக்கு வெளியில் சிறிய அறைகளில் தமது அலுவலகங்களை நடத்தும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் பல நிறுவனங்கள் பல மாதங்களாகத் தமது ஊழியர்களுக்கு சம்பளத்தை வழங்கவில்லை எனவும் கூறப்படுகிறது.

# மக்களை ஏமாற்றும் நாடகம் இன்னும் எத்தனை நாளைக்கு?

அரசியல் தீர்வு பற்றி வடமாகாண முதலமைச்சர் கூறியதைப்பார்த்தால் அவர் தூக்கத்திருந்து இப்போதுதான் விழித்துக் கொண்டாரா என்று கேட்கத் தோன்றுகின்றது. அரசியல் தீர்வு கிடைக்கும் என்ற எண்ணம் அருகி வருவதாலேயே சர்வதேச அரசியல் நெருக்கு தலைப் பலரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர் என்று வவுனியா பம்பைமடுவில் பேசியிருக்கிறார். அவருடைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் தீர்வைத் தவிர்ப்பதற்காகவே சர்வதேச சமூகம் என்ற மந்திரத்தை உச்சரிக்கின்றது என்பதை இன்னும் இவர் விளங்கிக் கொள்ளவில்லை. தமிழ் தலைவர்களுக்குமிடையே வேறுபாட்டைக் காண முடியவில்லை. அவர்கள் வார்த்தைகளால் சொல்வதை இவர்கள் செயற்பாட்டின் மூலம் மெய்ப்பிக்கின்றார்கள். தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்கும் அரசியல் தலைவர்களின் பணி இனப்பிரச்சினையின் தீர்வுக்காக உழைப்பது.




துடன் உருவாகியது. அந்தத் தீர்வை ஏற்றுக்கொள்ளும்மனோநிலையிலேயே பெரும்பாலான சிங்கள மக்கள் அப்போது இருந்தனர். கூட்டமைப்புத் தலைவர்கள் திட்டமிட்டு அந்தச் சூழ்நிலையைச் சீர்குலைத்ததோடு நிற்காமல் புலிகளோடு கூட்டுச் சேர்ந்து தனிநாட்டு ராகம் பாடியதன் மூலம் நியாயமான அரசியல் தீர்வுக்குச் சாதகமற்ற சூழ்நிலை தென்னிலங்கையில் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தார்கள். இந்த நிலையிலேயே இப்போது அரசியல் தீர்வு முயற்சியை முன்னெடுக்க வேண்டியுள்ளது. நாடாளு மன்றத் தெரிவுக் குழு அதற்கு வாய்ப்பான சந்தர்ப்பத்தைத் தருகின்றது.

இனப்பிரச்சினையின் தீர்வுக்கான ஆலோசனைகளை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் முன்வைப்பதன் மூலம் இப்போதைய நிலையிலும் பார்க்க முன்னேற்றம் ஏற்படுவதற்கு இடமுண்டு. அது அரசியல் தீர்வை நோக்கிய காத்திரமான நகர்வாக இருக்கும். தெரிவுக் குழுவில் அரசியல் தீர்வுக்கு ஆதரவான சக்திகளும் அங்கம் வகிக் கின்றன

**தமிழ்த் தலைமைக்கு முன்னால் இப்போது இரண்டு வழிகள் உள்ளன. மாகாண சபையை ஏற்றுச் செயற்பட்டுக் கொண்டு படிப்படியாக மேலதிக அதிகாரங்களுக்காக முயற்சிப்பது ஒரு வழி. நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்குபற்றுவது மற்றைய வழி. மாகாண சபையைச் செயற்படுத்துகின்ற அதே வேளை, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிலும் பங்குபற்றி அரசியல் தீர்வுக்கான ஆலோசனைகளை முன்வைக்கலாம். இந்த வழிகளை ஏற்றுக்கொள்ளாமல் அரசியல் தீர்வு பற்றிப் பேசுவது மக்களை ஏமாற்றுவதாகவே இருக்கும்.**

சங்கர சிவன்

அரசியல் வரலாறு அரசியல் தீர்வை நிராகரித்த வரலாறே என்பதையும் இவர் புரிந்து கொள்ளவில்லை.

பண்டா-செல்வா ஒப்பந்தத்தின் சரத்துக்களை நடைமுறைப் படுத்துவதற்கு 1965இலும் 1971இலும் கிடைத்த இரண்டு சந்தர்ப்பங்களையும் அன்றைய தமிழ்த் தலைமை நிராகரித்தது. வடக்கு-கிழக்கு இணைந்த மாகாண சபையைத் தமிழர் விடுதலைக் கூட்டணி நிராகரித்தது. சந்திரிகா முன்வைத்த சமஷ்டித் தீர்வை இன்றைய கூட்டமைப்புத் தலைவர்கள் நிராகரித்தார்கள். இந்தப் பாரம்பரியத் தொடர்ச்சியாக இப்போதும் இனப்பிரச்சினையை ஓரங்கட்டி அரசியல் தீர்வைத் தவிர்த்து வருகின்றார்கள்.

தான் சார்ந்திருக்கும் அணி அரசியல் தீர்வுக்கு எதிராக எப்படிச் செயற்படுகின்றது என்பது தெரியாமல் முதலமைச்சர் அரசியல் தீர்வு பற்றிப் பேசுகின்றார். கூட்டமைப்பின் ஆரம்பம் அரசியல் தீர்வை நிராகரிப்பதாகவே இருந்தது. சந்திரிகாவின் தீர்வுத் திட்டத்தை எதிர்ப்பது தான் இவர்கள் எடுத்த முதலாவது அரசியல் முடிவு. அதன் பின் புலிகளோடு கூட்டுச் சேர்ந்து தனிநாட்டுத் தாளம் போட்டார்கள். புலிகளின் தோல்விக்குப் பின் சிலர் தனிநாடு என்றும் வேறு சிலர் ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வு என்றும் கயிறிழுப்பு நடக்கின்றது. இந்த நிலையில் தனிநாடா அல்லது ஐக்கிய இலங்கையில் தீர்வா என்பதையிட்டு எந்த முடிவுக்கும் வர இயலாமல் சர்வதேச சமூகம் என்றும் ஜெனீவா மகாநாடு என்றும் வாய்ப்பாடு சொல்லி மக்களை ஏமாற்றுகின்றார்கள். கூட்டமைப்பும் அதன் சர்வதேச சமூக வாய்ப்பாடும்தான் அரசியல் தீர்வுக்குத் தடை என்பதை முதலமைச்சர் புரிந்துகொள்ள வேண்டும்.

இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை என்று கூறும் பேரினவாதிகளுக்கும் கூட்டமைப்புத் கூட்டமைப்பிடம் தீர்வுத் திட்டம் இல்லை. இனப்பிரச்சினை பற்றி இவர்கள் பேசுவதேயில்லை. மற்றைய பிரச்சினைகளை முன்னிலைப் படுத்தி அடிக்கடி ஆர்ப்பாட்டங்களும், சத்தியாக்கிரகங்களும் நடத்துவதன் மூலம் மக்கள் இனப்பிரச்சினையை மறக்கும்படி செய்கின்றார்கள்.

இப்படியானவர்களுக்கு மத்தியிலிருந்து முதலமைச்சர் விக்னேஸ்வரன் அரசியல் தீர்வு பற்றிப் பேசுகின்றார். இவர் அரசியல் தீர்வில் உண்மையான அக்கறை உள்ளவரென்றால் கூட்டமைப்புத் தலைமையை அரசியல் தீர்வின் பக்கம் திருப்ப வேண்டும். கூட்டமைப்புக்குள் நிலவும் கயிறிழுப்புக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அதுவரை அரசியல் தீர்வு பற்றிப் பேசுவது வெறும் வார்த்தை ஜாலமாகவே இருக்கும்.

அரசியல் தீர்வு என்று உசர்சாடனம் செய்வதன் மூலம் அரசியல் தீர்வை அடைய முடியாது. யதார்த்தத்தை விளங்கிக்கொண்டு அதற்கேற்றவாறு செயற்படுவதன் மூலமே அரசியல் தீர்வை அடைய முடியும். ஒரே நாளில் முழுமையான அரசியல் தீர்வை அடைவது சாத்தியமில்லை என்பதே இன்றைய யதார்த்தம். கட்டங்கட்டமாகவே அரசியல் தீர்வை நோக்கி நகர்ந்து செல்ல முடியும். அரசியல் தீர்வு பற்றிப் பேசும் முதலமைச்சர் இந்த யதார்த்தத்தை முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அரசியல் தீர்வை நோக்கிய நகர்வுக்காகத் தமிழ்த் தலைமைக்கு முன்னால் இப்போது இரண்டு வழிகள் உள்ளன. மாகாண சபையை ஏற்றுச் செயற்பட்டுக் கொண்டு படிப்படியாக மேலதிக அதிகாரங்களுக்காக முயற்சிப்பது ஒரு வழி. நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்குபற்றுவது மற்றைய வழி. மாகாண சபையைச் செயற்படுத்துகின்ற அதேவேளை, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிலும் பங்குபற்றி அரசியல் தீர்வுக்கான ஆலோசனைகளை முன்வைக்கலாம். இந்த வழிகளை ஏற்றுக்கொள்ளாமல் அரசியல் தீர்வு பற்றிப் பேசுவது மக்களை ஏமாற்றுவதாகவே இருக்கும்.

மாகாண சபையை அரசியல் தீர்வின் ஆரம்ப கட்டமாக ஏற்றுச் செயற்படும் நிலைக்கு முதலமைச்சரும் அவரது அணியினரும் வருவார்களேயானால் அரசியல் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்படுமேயொழிய அந்த எண்ணம் அருகி வராது. இப்போது உள்ள அதிகாரங்களுடன் மாகாண சபையை ஏற்றுச் செயற்படுவதற்குக் கூட்டமைப்புத் தலைமை முதலில் முன்வர வேண்டும். அதன் பின் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்திக் கட்டங்கட்டமாக மேலதிக அதிகாரங்களைப் பெறுவதன் மூலம் அரசியல் தீர்வை நோக்கிய நகர்வை ஆரம்பிக்கலாம். இந்த நடைமுறை இடம்பெறுவதை எப்படியாவது தடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே கூட்டமைப்புத் தலைமை செயற்படுகின்றது. இந்தச் செயற்பாட்டுக்கு மாகாண மட்டத்தில் தலைமை தாங்குபவர் முதலமைச்சர் விக்னேஸ்வரன். மாகாண சபையில் வெறும் பிரேரணைகளை நிறைவேற்றிக் காலத்தைக் கடத்துவதும் ஆளுநரை மாற்ற வேண்டும் என்றும், இராணுவத்தை

**கூட்டமைப்பின் ஆரம்பம் அரசியல் தீர்வை நிராகரிப்பதாகவே இருந்தது. சந்திரிகாவின் தீர்வுத் திட்டத்தை எதிர்ப்பது தான் இவர்கள் எடுத்த முதலாவது அரசியல் முடிவு. புலிகளின் தோல்விக்குப் பின் சிலர் தனிநாடு என்றும் வேறு சிலர் ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வு என்றும் கயிறுழுப்பு நடக்கின்றது. இந்த நிலையில் தனிநாடா அல்லது ஐக்கிய இலங்கையில் தீர்வா என்பதையிட்டு எந்த முடிவுக்கும் வர இயலாமல் சர்வதேச சமூகம் என்றும் ஜெனீவா மகாநாடு என்றும் வாய்ப்பாடு சொல்லி மக்களை ஏமாற்றுகின்றார்கள்.**

வெளியேற்ற வேண்டும் என்றும் மேலதிக அதிகாரங்களை வழங்க வேண்டும் என்றும் நிபந்தனைகளை முன்வைத்து மாகாண சபையின் செயற்பாட்டைப் பின்தள்ளிப் போடுவதும் மாகாண சபைக்கு எதிராகக் கூட்டமைப்பு பின்பற்றும் தந்திரோபாயம். இந்தத் தந்திரோபாயத்துக்குத் தலைமை தாங்கும் முதலமைச்சர் அரசியல் தீர்வு வரவில்லையே என்று முதலைக் கண்ணீர் வடிக்கின்றார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு விடயத்துக்கு வருவோம். இந்தத் தெரிவுக் குழுவின் மூலம் முழுமையான அரசியல் தீர்வை எதிர்பார்க்க முடியாது என்பது சிறு குழந்தைக்கும் தெரியும். முழுமையான அரசியல் தீர்வுக்குச் சாதகமான சூழ்நிலை நாட்டில் இன்னும் உருவாகவில்லை. கிட்டத்தட்ட முழுமையான தீர்வுக்குச் சாதகமான சூழ்நிலை சந்திரிகாவின் தீர்வுத் திட்டத்

என்பதும், அரசியல் தீர்வை நிராகரிக்கும் பேரினவாதிகளின் பிரதிநிதித்துவம் மிகக் குறைவானதே என்பதும் குறிப்பிடத்தக்கவை. மாகாண சபைக்கு மேலதிக அதிகாரங்கள் தேவை என்றும் ஒற்றையாட்சியை நீக்கும் அரசியலமைப்பு வேண்டும் என்றும் வடமாகாண மேடைகளில் உரத்துப் பேசும் கூட்டமைப்புத் தலைவர்கள் இதே கோரிக்கைகளை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் முன்வைப்பதற்கு ஏன் தயங்குகின்றார்கள் என்பது பற்றித் தமிழ் மக்கள் நிதானமாகச் சிந்திக்க வேண்டும்.

மக்களை உணர்ச்சிவசப்படுத்தி ஆதரவைத் தக்க வைப்பதுதான் மேடைப் பேச்சின் நோக்கம். ஆனால், அதே விடயங்களை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் முன்வைக்கும்போது அதன் அர்த்தம் வேறு. அக்கோரிக்கைகளை உத்தியோகபூர்வமாக முன்வைக்கின்றது என்பதே அர்த்தம். அரசியல் தீர்வுக்குச் சாதகமான சூழ்நிலை உருவாகுவதற்கு இடமளிக்கக் கூடாது என்று புலம்பெயர் அமைப்புகள் இட்ட கட்டளையை ஏற்றுச் செயற்படுகின்ற கூட்டமைப்பு அதற்காகவே நாடாளுமன்றத் தெரிவுக் குழுவைத் தவிர்க்கின்றது. தமிழ் மக்களின் நுகர்வுக்காக முதலமைச்சர் அரசியல் தீர்வு பற்றிப் பேசினாலும் அரசியல்தீர்வைத் தவிர்ப்பதே கூட்டமைப்பின்நிலைப்பாடு.

புலம்பெயர் அமைப்புகளுக்கு ஒரு முகமும், மக்களை ஏமாற்றுவதற்கு இன்னொரு முகமும் காட்டும் கூட்டமைப்பின் தப்புத்தாளத்தைத் தமிழ் மக்கள் புரிந்துகொள்வதிலேயே அவர்களின் விமோசனம் தங்கியுள்ளது.

# இலங்கையில் அதிகாரப் பகிர்வை தீவிரவாத சக்திகளே எதிர்க்கின்றன

## நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் அதிகாரப் பகிர்வை சில தீவிரவாத சக்திகளே பலமாக எதிர்த்து வருவதாக நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வந்திருந்த சொல்வேனிய குடியரசின் அரசியலமைப்பு நீதிமன்ற நீதிபதி பேராசிரியர் ஏனக்ஸ்ட் பெட்ரிக்கை நேற்றுமுன்தினம் சந்தித்து உரையாடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

1983 ஆம் ஆண்டில் ஏற்பட்ட யூலை கலவரத்தை தொடர்ந்து இந்தியாவின் ஏற்பாட்டில் அதிகாரப் பகிர்வுக்கு வழிகோலிய அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

யுத்தகால சூழ்நிலையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் அதனை வடகிழக்கில் நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்களை எதிர்நோக்கி இருந்தன.

ஜனநாயக ரீதியான தேர்தல் ஒன்றின் ஊடாக முதன் முதலாக தற்பொழுது அமைக்கப்பட்டுள்ள வடமாகாண சபை தனது பொறுப்புக்களை சிறப்பாக நிறைவேற்றுமென நம்புகிறோம்.

அதன் முதலமைச்சர் பதவியை வகிக்கும் முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் விக்னேஸ்வரன் மிகவும் திறமையானவர்.

வடபகுதியில் நிலப் பிரச்சினைகள் முதலான விடயங்களில் தேசவழமைச் சட்டமும், முஸ்லிம்களைப் பொறுத்தவரை முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டமும் நடைமுறையில் உள்ளது என்றார்.

பாலியல் வல்லுறவு, வயது குறைந் தோருக்கிடையிலான திருமணம் என்பவற்றின் விளைவினால் ஏற்படக்கூடிய மன உளைச்சல்கள், ஏனைய உள, உடல் ரீதியான பாதிப்புக்கள் மற்றும் ஓரின திருமணபந்தம் தொடர்பாக எழும்பும் மனித உரிமைக் குழுக்கள் பிரச்சினைகள் பற்றியும் பரஸ்பரம் கருத்துக்கள் பறிமாறிக்கொள்ளப்பட்டன.

# கட்டாருக்கு விமானத்தில் செல்ல இருந்தவர் பயணப்பையில் சடலமாக மீட்பு

(கொழும்பு)

காணாமற்போன இளைஞன் பயணப்பையில் கட்டப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த 21 ஆம் திகதி காணாமற்போனதாகக் கூறப்படும் கல்முனை சாய்ந்தமருது தோணா முகத்துவாரத்தைச்சேர்ந்த உதுமா லெப்பை முகமட் அப்சான் என்ற 20 வயதுடைய இளைஞன் நேற்றுமுன்தினம் பயணப்பையொன்றில் கட்டப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டதாக கல்முனை பொலிஸார் தெரிவித்தனர்.

சாய்ந்தமருது 2 ஆம் பிரிவு காரியப்பர் வீதியைச் சேர்ந்த இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேற்படி இளைஞன் தொழில் வாய்ப்பிற்காக கட்டார் நாட்டிற்கு நேற்றுமுன்தினம் விமானத்தில் செல்ல இருந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை காணாமற் போயுள்ளதாக உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் பகல் 12.00 மணியளவில் சாய்ந்தமருது தோணா பகுதியில் பயணப்பையில் கட்டபபட்ட நிலையில் சடலம் ஒன்று மிதந்து கொண்டிருப்பதை பொது மக்கள் கண்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

# இலங்கையின் மருத்துவச் செடிகள் ரெலிகொம் 2014 நாட்காட்டி



(கொழும்பு)

தேசிய தொடர்பாடல் சேவைகள் இயக்குனரான ஸ்ரீலங்கா ரெலிகொம், "இலங்கையின் மருத்துவ செடிகள்" என்ற கருத்தமசத்தில் தனது 2014 ஆம் ஆண்டுககான நாட்காட்டியை அறிமுகம் செய்துள்ளது.

பல ஆயிரக்கணக்கான வருடங்களாகப் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு மருத்துவத்திற்குப் பயன்படுத்தப்படும் 12 வகையான மருத்துவச்செடிகளே இம்முறை ரெலிகொம் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள நாட்காட்டியில் வரையப்பட்டுள்ளது.

எதிர்காலச் சந்ததியர்களின் நன்மைக்காக நாட்டின் பாரம்பரியத்தைப் பேணிப்பாதுகாப்பதை ரெலிகொம் நிறுவனம் தொடர்ந்தும் ஊக்கப்படுத்தி வருகிறது. இது, "நாளைக்காக பாரம்பரியத்தைப் பாதுகாத்தல்" என்ற கூட்டாண்மைச் சமூகப் பொறுப்பு மூலம் செய்யப்பட்டு வருகிறது.

கடந்த 2003 ஆண்டிலிருந்து இக்கம்பனியானது, நாட்காட்டிகள மற்றும் குறைநிரப்பு அம்சங்களை உருவாக்கி வருவது மட்டுமன்றி, பொதுமக்களுக்கு அறிவினைப் புகட்டும் நோக்கத்துடன், குறிப்பாக இளம் சந்ததியினர் எமது பாரம்பரியத்தைப் பேணிக்காக்கவேண்டியதன் முககியத்துவத்தை எடுத்துக்காட்டுவதற் கெனப் பல நடவடிககைகளையும் மேற்கொண்டு வருகிறது.

"நாளைக்காக பாரம் பரியத்தைப் பாதுகாத்தல்" என்ற பிரதான கருத்தம்சத்திற்கு அமைவாக, இக் கம்பனி ஒவ்வொரு வருடமும் இயற்கை, கலை மற்றும் கலாசாரம் போன்ற துறைகள் சம்பந்தமான் நாட்காட்டிகள் மற்றும் குறைநிரப்பு அம்சங்களை உருவாக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

2014 ஆம் ஆண்டின் நாட்காட்டியல், இலங்கையில் காணப்படும் 12 வெவ்வேறான மருத்துவச் செடிகள் வரையப்பட்டு, அவை வளருமிடங்கள், அவற்றின் பொதுவான அம்சங்கள், சிறப்பம்சங் கள் மற்றும் மருத்துவப் பயன்பாடுக[illegible] பற்றிய தகவல்கள் தரப்பட்டுள்ளன. இவற்றில் சில செடிகள் இலங்கையில் அருகி வரும் அதேநேரம், மற்றவை இந்த நாட்டுக்குள் கொண்டுவரபபட்டு பயிரிடப்பட்டு வருகின்றன. இந்த நாட்காட்டியில் திரட்டித் தரப்பட்டுள்ள தகவல்கள் பொது மக்கள், தகவல் சேகரிப்போர் மற்றும் மாணவர்கள் போன்ற பலருக்கும் கல்வி சம்பந்தமான அறிவையும் பொது அறிவையும் தரக்கூடியவை.

# தேர்தல் பிரசாரத்திற்கு இடையூறு; சரத்பொன்சேகா முறையீடு

(கொழும்பு)

ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா மனித உரிமை ஆணைக்குழு மற்றும் தேர்தல் ஆணையகம் ஆகியவற்றில் முறைப்பாடு செய்துள்ளார். தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

பிரசார கூட்டங்களை நடாத்த உள்ளூராட்சி மன்றங்கள் அனுமதியளிப்பதில்லை. ஏனைய கட்சிகளுக்கு இடமளித்த போதிலும், ஜனநாயகக் கட்சிக்கு இடமளிக்கப்படமாட்டாது என உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் நேரடியாகவே தெரிவிப்பதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

நாட்டில் சர்வாதிகார ஆட்சி நிலவி வருகின்றது. ஜனநாயகத்திற்கு பாரியளவில் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சரத் பொன்சேகா தேர்தல் ஆணையாளரிடமும் முறைப்பாடு செய்துள்ளார். தேர்தல் பிரசார நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த முயற்சிக்கப்படுவதாக அந்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

# மனிதவளத்தை பயன்படுத்தும் கொள்கைத் திட்டம் அவசியம்

## ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்

நாட்டின் மனித வளத்தைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய வகையில் கொள்கைகள் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என நாடாளுமன்ற உறுப்பினர் அனுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொருளாதார நெருக்கடி நிலைமைகளை தடுக்க வேண்டுமாயின் அரசாங்கம் கொள்கைகளில் மாற்றங்களைச் செய்ய வேண்டியது அவசியமானது என ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப் பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அதிகளவான சனத்தொகையினர் வாழ்ந்து வருவதாகவும், ஆளணி வளத்தை பிரதானமாகக் கொண்டு கொள்கைகள் வகுக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுற்றுலாத்துறையை மேம்படுத்த வேண்டும் என்பதில் தவறில்லை என்ற போதிலும் அதனை பிரதான வருவாய் வழியாகப் பயன்படுத்த முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவுஸ்ரேலியாவில் ஒரு சதுர கிலோ மீற்றர் 2.3 பேர் வாழ்ந்து வருவதாகவும், அமெரிக்காவில் 23 பேரும், சீனாவில் 147 பேரும், இலங்கையில் 323 பேரும் வாழ்ந்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நாட்டின் கலாசாரத்துடன் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதில் சிக்கல் நிலைமை காணபபடுவதாகத் தெரிவித்துள்ளார்.

# இறப்பர் ஆராய்ச்சி நிலையத்தில் பாரிய தீ விபத்து

அகலவத்தை இறப்பர் ஆராய்ச்சி நிலையத்தில் பார்ரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் அதிகாலை ஒரு மணியளவில் இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

எனினும் இதனால் எவருக்கும் ஆபத்து ஏற்படவில்லை என பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

தீ விபத்தால் தொழிற்சாலையின் பொருட்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது. தீ விபத்துக்கான காரணம் இதுவரை தெரியவராத நிலையில் பொலிஸார் சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# புனர்வாழ்வு முகாமிலிருந்து புலி உறுப்பினர் தலைமறைவு

பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாமில் புனர்வாழ்வு பயிற்சிக[illegible] பெற்றுவந்த விடுதலைப் புலிகளின் அமைப்பின் முன்னாள் முக்கி[illegible] உறுப்பினரான சிவராசா பிரகாஷ் என்ற நபர் முகாமில் இருந்து தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பிரகாஷ் என்ற இந்த நபர் இலங்கையில் இருந்து சில வருடங்களுக்கு முன்னர் சுவிட்சர்லாந்துக்கு சென்றிருந்ததுடன் இரகசியமான முறையில் இலங்கைக்கு திரும்பிய இவரை கடந்த வருடம் யூலை மாதம் 13 ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சந்தேகத்தின் பேரில் கைது செய்து பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாமில் வைத்து புனர்வாழ்வு பயிற்சிகள் வழங்கப்பட்டு வந்த நிலையிலேயே அவர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

இவர் யாழ். மானிப்பாய் பொலிஸ் பிரிவின் சண்டிலிப்பாய் பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் இவரைக் கைது செய்வதற்காக இவர் பற்றிய சகல தகவல்களும் அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

# 10 கிலோ தங்க பிஸ்கட்டுக்களை டுபாயிலிருந்து கடத்தியவர் கைது




சுமார் ஐந்து கோடி ரூபா பெறுமதியான 10 கிலோ கிராம் தங்க பிஸ்கட்டுக்களை சட்டவிரோதமாக எடுத்துவந்த இலங்கை பிரஜை ஒருவர கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

டுபாயிலிருந்து பயணித்த 54 வயதான ஒருவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இதேவேளை சட்டவிரோதமான முறையில் தங்கம் எடுத்து வந்த தாய் மற்றும் மகள் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 20 தங்க ஆபரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக விமான நிலைய சுங்க ஊடகப்பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்துள்ளார்.

இந்த தங்கத்தின் நிறை 1035 கிராம் எனவும் அவற்றின் பெறுமதி 52 இலட்சத்து 75,000 ரூபா எனவும கணிப்பிடப்பட்டுள்ளது.

ஒருவருக்கு தலா 25,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டு 57 வதான தாய் மற்றும் 20 வயதான மகள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.




உயரப்புலம் மெ.மி. வித்தியாலயத்தில் கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும், புதிய மாணவர்கள் வரவேற்கப்படுவதையும் காணலாம். (137)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு அதிகரிக்கப்படவேண்டும்



(கிளிநொச்சி)

இதுவரை ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் பெறாது கடமையாற்றும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்கும், கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என ஈ.பி.டி.பி வடக்கு மாகாணசபையின் உறுப்பினர் வை.தவநாதன் தெரிவித்துள்ளார்.

ஈ.பி.டி.பி யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரின் பன்முகப் படுத்தப்பட்ட நிதி மூலம் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்களை கோணாவில் செந்தமிழ் முன்பள்ளிக்கு வழங்கும் நிகழ்வு அண்மையில் முன்பள்ளி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் உபகரணங்களை வழங்கி வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியினை முழுமையான மக்கள் நலத்திட்டத்திற்கு பயன்படுத்தவேண்டுமென்பது நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரின் நோக்கமாகும்.

கிளிநொச்சி கல்வி வலயத் திற்குட்பட்ட முன்பள்ளிகளில் கடமையாற்றும் நூறுவரையான ஆசிரியர்கள் மிகக்குறைந்த தொகையான மூவாயிரம் ரூபா உதவித்தொகையைக் கூட பெற்றுக்கொள்ளாது கடமையாற்றி வருகின்றனர். அவர்களுக்கு குறித்த கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என நான் மாகாணசபை அமர்வில் குறிப்பிட்டுள்ளேன். அத்தோடு, அத்தொகையை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பதையும் வலியுறுத்தியுள்ளேன். மேலும், வடக்குமாகாண ஆளுநருடனும் இது தொடர்பாக பேசியுள்ளேன்.

இதேவேளை, இளம் சிறார்களின் எதிர்காலம் தொடர்பாக அனைத்து தரப்பினரும் அதிக அக்கறை செலுத்த வேண்டிய தருணத்தில் இன்று எமது சமூகம் உள்ளது.

வறுமையும், பெற்றோர்களின் பொருளாதார நிலையும் சிறார்களின் ஆரோக்கியத்தையும், எதிர்காலத்தையும் பாதிக்கும் என்ற அபாயச் சூழலும் எமது பிரதேசங்களில் காணப்படுகின்றன. அத்தகைய நிலை மாற்றமடையவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், கோணாவில் கிழக்கு கிராமஅபிவிருத்திச் சங்கத் தலைவர் தில்லைவேல், கோணாவில் செந்தமிழ் முன்பள்ளியின் ஆசிரியர் சுனித்தா, முன்பள்ளியின் தலைவி இராமாயி, அப்பகுதி மாதர்கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவி மாக்கிரேட், யூனியன்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் உதயகுமார், முன்பள்ளியின் ஆசிரியர் கிருஸ்ணகுமாரி ஆகியோரும் முன்பள்ளி சிறார்களின் பெற்றோர்களும் கலந்துகொண்டனர். (48)

# குடாநாட்டு சந்தைகளில் முருங்கைக்காய்க்கு கிராக்கி

(அச்சுவேலி)

குடாநாட்டுச் சந்தைகளில் முருங்கைக்காய்க்கு தட்டுப்பாடு நிலவு வதுடன் விலையும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

ஒரு சில சந்தைகளில் மட்டுமே முருங்கைகாயைக் காணமுடிகின்றது. ஒரு கிலோ 800 ரூபாவாக விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே பல்வேறு நோய்களுக்கு மருந்தாகப் பயன்படும் முருங்கைக்காயை பலரும் சந்தைகளில் தேடி அலைவதையும் காணமுடிகின்றது. (85)

# பெண்கள் மீது துஷ்பிரயோகம் இருவருக்கும் விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளைப் பொலிஸ் பிரிவில் 20 வயது யுவதி ஒருவரை பாலியல் வல்லுறவுக்குட் படுத்திய சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் பாரப் படுத்தப்பட்டதாக யாழ்.பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

கடந்த 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதிக்கும் 30ஆம் திகதிக்கும் இடைப் பட்ட காலத்தில் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படும் இச்சம்பவத்தில் சந்தேக நபர் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டதனை அடுத்து அவர் எதிர் வரும் மூன்றாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். சந்தேகநபர் அளவெட்டியைச் சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மற்றொரு சம்பவத்தில் 15 வயதுச் சிறுமி ஒருவரைச் கடத்திச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்த பண்ணாகம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவருக்கு நீதிமன்றம் எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு தீர்ப்பு வழங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# குடியிருப்புக்குள் காட்டுயானைகள் அச்சத்தில் கற்குளம் மக்கள்

(கண்டாவளை)

வவுனியாநெடுங்கேணி கற்குளம் பகுதியில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளதால் இரவில் தாம் அச்சத்துடனே வாழ்வதாக இப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை இரவுவேளை இக் கிராமத்திற்குள் புகுந்த காட்டு யானைகள் அங்கு நின்ற பயன் தரும் மரங்களையும் பயிர்களையும் அழித்து நாசமாக்கியுள்ளன. தாம் சுயதொழில் நடவடிக்கைக்காக நட்ட பயன்தரு மரங்களை இவ்வாறு நாசமாக்குவதால் நாம் எந்தவித பயனையும் அடையமுடியாதுள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

குறிப்பாக கற்குளம் பட்டிக்குடியிருப்பு மருதோடை, மாறாயிலுப்பை, குளவி சுட்டான்,மாமடு ஆகிய கிராமங்களில் காட்டு யானைகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் தாம் என்ன செய்வதென்று தெரியாது கஷ்டத்தை எதிர்நோக்குவதாக தெரிவிக்கும் இப்பகுதி மக்கள் காட்டு யானைகள் குடியிருப் புக்களுக்குள் வருவதை தடுப்பதற்குரிய நடவடிக்கை அவசியம் தேவை என இக்கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

# முரசின் இன்றைய பலன்



(26.01.2014 ஞாயிற்றுக்கிழமை)

விஜய வருஷம் தை மாதம் 13 ஆம் திகதி.
தசமி / மரணயோகம். அனுச நட்சத்திரம் மு.இ. 10.45 வரை.
பின் கேட்டை.
இராகுகாலம் 05.06 - 06.36 வரை. சுபநேரம் 09.36 - 11.06 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | தோல்வியை அனுபவ பாடமாகிக்கொள்ளல், அதிகாரியுடன் பகையை வளர்த்ததனால் பதவிக்கு கேடு. |
| ரிஷபம் | பணியை ஆரம்பிக்கையில் குழப்பத்தை தவிர்த்தல், வெளிநாடு சென்று கற்பதற்கு முயற்சி எடுத்தல். |
| மிதுனம் | பிள்ளைகளின் உணர்வுகளை பகிர்ந்து கொள்வதால் குடும்பத்தில் மகிழ்ச்சி, களவு குறித்து எச்சரிக்கையாக இருக்கவும். |
| கடகம் | தன்னம்பிக்கையாலும் விடாமுயற்சியாலும் காரிய ஜெயம், நியாயத்தை எடுத்துக்கூற முயல்தல். |
| சிம்மம் | வாய்ச்சாதுரியத்தினால் பிறரைக்கவர்தல், புதிய யுக்தியைக் கையாண்டதால் பணியை தக்க வைத்தல். |
| கன்னி | சிறிய வியாபார நிலையம் திறக்க முயல்தல், மனைவியின் வார்த்தைக்கு மதிப்புக்கொடுத்ததால் துயர் அற்றுப்போதல். |
| துலாம் | மன உளைச்சல் நீங்க காரியத்தில் நாட்டங் கொள்ளல், மின்சார தாக்கத்தினால் மயிரிழையில் தப்பிப்பிழைத்தல். |
| விருச்சிகம் | பிறரின் கருத்துக்கு மதிப்பளித்தல், நம்பிக்கையினால் திட்டமிட்ட பணி எளிதாக முடிதல். |
| தனுசு | தேங்கிய பொருட்களை அதிக இலாபம் எதிர்பாராது விற்பனை செய்து முடிக்கமுயலுதல், எதிர்பாராது வந்த பிரச்சினையால் குடும்பத்தில் மகிழ்ச்சி குன்றல். |
| மகரம் | படுகுழியில் விழப்போகும் சமயத்தில் நண்பரின் அறிவுரை கேட்டு தப்பிப்பிழைத்தல், வழக்கு விவகாரத்தில் முடிவு ஏற்பட காலதாமதமாகலாம். |
| கும்பம் | வேலை தேடி அலைந்த சமயத்தில் பிரமுகரின் உதவியால் பணி கிடைத்தல், மனைவியின் நோய் பற்றி கவனம் எடுத்தல். |
| மீனம் | திட்டத்தை செயற்படுத்த முன்வருவதால் நன்மை கிடைத்தல், கவலையில் இருக்கும் நண்பருக்கு ஆறுதல் கூறுதல். |

# ஜடேஜா, அஸ்வின் அதிரடி 3ஆவது ஆட்டம் சமநிலை



(ஒக்லாண்ட்)

ஜடேஜா, அஸ்வின் ஆகியோரின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் ஒக்லாண்டில் நடைபெற்ற இந்திய, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஒரு நாள் போட்டி சமநிலையில் நிறைவு பெற்றது.

இந்திய, நியூசிலாந்து அணிகளுக் கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் மூன்றாவது போட்டி நேற்று நியூசிலாந்தின் ஒக்லாண்டில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய நியூசிலாந்து அணி, குப்ரில், வில்லியம்ஸன் ஆகியோரின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் நியூசிலாந்து அணி 50 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 314 ஓட்டங்களைப் பெற்றது. இதில் குப்ரில் 111, வில்லியம்ஸன் 65, ரொன்ஞ் 38, ரிம் சௌத்தி 27 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜடேஜா, மொகமட் சமி ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 315 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இந்திய அணிக்கு ரோகித் சர்மா, தவான் இணை மிக நிதான-மாக ஆடி சிறந்ததொரு அடித்தளத்தை இட்டனர். இருப்பினும் 61 ஓட்டங்களை இந்த ஜோடி இணைப்பாட்டமாகப்பெற்ற வேளை பிரிக்கப்பட்டது. தொடர்ந்து களமிறங்கிய நட்சத்திர வீரர் ஹோலி வந்தவேகத்தில் வெளியேற இந்தியாவின் வெற்றிக் கனவு சிதைந்துபோனது. தொடர்ந்து களமிறங்கிய ரெய்னா, ரஹானே நிதானமாக ஆடியபோதும் நீண்ட நேரம் தாக்குப் பிடிக்க முடியவில்லை. ஒரு கட்டத்தில் இந்திய அணி ஆறு விக்கெட்டுக்களை இழந்து 184 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இந்நிலையில் ஏழாவது விக்கெட்டுக்காக இணைந்த அஸ்வின், ஜடேஜா இணை நியூசிலாந்து அணியின் பந்து வீச்சை நாலாபுறமும் பறக்கவிட்டு ஓட்டங்களைக் குவித்தது. இந்த ஜோடி ஏழாவது விக்கெட்டுக்காக 85 ஓட்டங்களைப் பெற்ற வேளை (அஸ்வின்) பிரிக்கப்பட்டது. தொடர்ந்தும் சளைக்காது போராடி ஜடேஜா அதிரடியில் கலக்கினார். இறுதி ஓவரில் வெற்றிக்கு 18 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் 17 ஓட்டங்களைப் பெற்று அணியை தோல்வியிலிருந்து மீட்டார். இறுதியில் இந்திய அணி 50 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 314 ஓட்டங்களைப் பெற்றது. இதன் மூலம் இப்போட்டி சமநிலையில் நிறைவுற்றது. துடுப்பாட்டத்தில் 45 பந்துகளை எதிர்கொண்ட ஜடேஜா நான்கு சிக்ஸர்கள், ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 66 ஓட்டங்களைப் பெற்றார்.

மற்றும் அஸ்வின் 46 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், எட்டு பவுண்டரிகள் அடங்கலாக 65, டோனி 50,ரோகித் சர்மா 39, சுரேஸ் ரெய்னா 31, தவான் 28 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அண்டர்சன் ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். சகலதுறையில் கலக்கிய ஜடேஜா போட்டியின் ஆட்டநாயகனாகத் தெரிவானார். ஐந்து போட்டிகளைக்கொண்ட ஒருநாள் தொடரில் 2-0 என்ற கணக்கில் நியூசிலாந்து அணி முன்னிலை பெற்றுள்ளது.



# ஆஸி. ஓப்பன் லீநா சம்பியன்



(மெல்பேர்ன்)

அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவில் சீனாவின் லீநா கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டார்.

கிராண்ட்சிலாம் போட்டிகளின் ஒன்றான அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரின் பெண்கள் ஒன்றையர் பிரிவு இறுதி ஆட்டம் நேற்று மெல்பேர்னில் நடைபெற்றது. இதில் நான்காம் நிலை வீராங்கனை சீனாவின் லீநா 24ஆம் நிலை வீராங்கனை சுலோவோக்கியாவின் சிபுல்கோவா ஆகியோர் பலப்பரீட்சை நடாத்தினர்.

முதல் செட்டில் இரு வீராங்கனைகளுமே கடுமையாக முட்டி மோதிக் கொண்டனர். இருப்பினும் லீநா தனது அனுபவ ஆட்டத்தை வெளிப்படுத்தி 7-6 என்ற கணக்கில் முதல் செட்டைக் கைப்பற்றினார். முதல் செட் வெற்றி உத்வேகத்துடன் இரண்டாவது செட்டைஎதிர்கொண்ட லீநா சிபுல்கோவாவை உண்டு இல்லை எனச் செய்து திணறடித்தார். இறுதியில் லீநா 7-6, 6-0 என்ற செட் கணக்கில் சிபுல்கோவாவைத்



தோற்கடித்து முதல் தடவையாக அவுஸ்ரேலிய ஓப்பன் பட்டத்தைக் கைப்பற்றினார். இதற்கு முன்னர் லீ நா 2011, 2013ஆம் ஆண்டு இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றார். இரண்டிலும் தோல்வியடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கடந்த 2011ஆம் ஆண்டு பிரெஞ் ஓப்பன் பட்டத்தை லீநா கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

முதன் முறையாக கிராண்ட்சிலாம் போட்டியின் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்ற சிபுல்கோவாவுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

# பெண்கள் இரட்டையர்

## இத்தாலி ஜோடி சம்பியன்



(மெல்பேர்ன்)

அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரின் மகளிர் இரட்டையர் பிரிவில் இத்தாலியின் சாரா எரானி-ராபர்ட்டா வின்சி ஜோடி மீண்டும் சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.

தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் இந்த ஜோடி, நேற்று நடைபெற்ற இறுதிப்போட்டியில், 6-4, 3-6, 7-5 என்ற செட்கணக்கில் ரஷ்யாவின் மகரோவா-வெஸ்னினா ஜோடியை வென்றது. இதன்மூலம் அவுஸ்ரேலிய ஓப்பன் பட்டத்தை தக்க வைத்துக்கொண்டது. அத்துடன், அவுஸ்ரேலிய ஓப்பனில் செரீனா-வீனஸ் ஜோடிக்குப் பின்னர் அடுத்தடுத்து இரண்டு முறை பட்டம் வென்ற பெருமையையும் சாரா எரானி-வின்சி பெற்றுள்ளனர்.

# தொடரை வெல்வோம்

(டாக்கா)

இலங்கை வலுவான அணி என்பது உண்மையே. இருப்பினும் இலங்கை அணியைத் தோற்கடித்து டெஸ்ட் தொடரை வெல்ல முயற்சிப்போம் என பங்களாதேஷ் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் தமிம் இக்பால் தெரிவித்துள்ளார்.

இலங்கை அணி முதல் தரமானது என்பது கேள்விக்கிடமற்றது. பாகிஸ்தானுடனான தொடரிலும் இலங்கை அணி சிறப்பான செயற்பாட்டை வெளிப்படுத்தியிருக்கின்றது. இருப்பினும் உள்ளூரில் எங்களால் இலங்கை அணியைத் தோற்கடிக்க முடியும் என்று நம்புகின்றேன். வலுவான பந்து வீச்சை நாம் கொண்டிருக்கின்றோம். சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தன போன்ற அனுபவ வீரர்களை விரைவாக வெளியேற்றி இலங்கை அணிக்கு நெருக்கடி கொடுக்கும். அதன் மூலம் தொடரை வெல்ல முடியும் என்று நம்புகின்றேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சிம்பாப்வேக்கு தென்னாபிரிக்கா அழைப்பு

(டேர்பன்)

சிம்பாப்வேயுடன் டெஸ்ட் போட்டியொன்றில் விளையாடுவதற்கு தயாராக இருப்பதாக தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. எனினும், இப்போட்டி இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் குறைவாகக் காணப்படுவதாகக் கருதப்படுகிறது.

உலகின் முதல் நிலை டெஸ்ட் அணியான தென்னாபிரிக்க அணியும் 9ஆம் நிலையில் சிம்பாப்வே அணியும் காணப்படுகின்றன. இந்நிலையிலேயே தென்னாபிரிக்க அணி இந்த அழைப்பை விடுத்துள்ளது.


அவுஸ்ரேலிய அணி தென்னாபிரிக்காவிற்குகிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 03 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்குபற்றவுள்ளதுடன், இத்தொடர் பெப்ரவரி 12ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.

இத்தொடருக்கு முன்னதாக சிம்பாப்வே அணியை தென்னாபிரிக்க அணி அழைத்துள்ளது. ஒரு டெஸ்ட் போட்டியும் ருவென்ரி-20 தொடரிலும் பங்குபற்ற வருமாறு சிம்பாவே கிரிக்கெட் அணியை தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை அழைத்துள்ளது.


எனினும், ஊதியப் பிரச்சினை காரணமாக சிம்பாவே அணியின் வீரர்கள் கிரிக்கெட் போட்டிகளைப் புறக்கணித்து வருவதால், இந்தத் தொடர் இடம்பெறாது என எதிர்பார்க்கப்படுகிறது. சர்வதேசப் போட்டிகள் அண்மைக்காலத்தில் சிம்பாப்வேயில் இடம்பெறுவதில்லை என்பதோடு, உள்ளூர்ப் போட்டிகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையில் அழைப்பு நிராகரிக்க சிம்பாப்வே கிரிக்கெட் சபை விரும்பவில்லை என்றும், இத் தொடரை நடாத்துவதற்கான சூழ்நிலையை சிம்பாப்வே கிரிக்கெட் சபை உருவாக்கிக் கொள்ளும் என கிரிக்கெட் விமர்சகர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிண்ணம் வென்றது தாவடி காளியம்பாள்





(தாவடி)

பொங்கல் விழாவினை முன்னிட்டு நடாத்தப்பட்ட தாச்சிப் போட்டியின் வெற்றிக் கிண்ணத்தை தாவடி காளியம்பாள் அணி கைப்பற்றிக் கொண்டது.

தைப்பொங்கல் தினத்தை சிறப்பிக்கும் வகையில் வடமாகாண சபையின் விளையாட்டுத் திணைக்களம், யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் மாபெரும் தாச்சிப் போட்டியை நடாத்தியது.

இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி கடந்த 21ஆம் திகதி தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் தாவடி காளியம்பாள் அணியும், உடுவில் வைகறை அணியும் மோதின.

சொந்த இடத்தில் விளையாடிய தாவடி காளியம்பாள் அணி ஆரம்பம் முதலே போட்டியை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது.

முதல் அரைப்பாதியில் 3:0 என்ற பழங்கள் அடிப்படியில் தாவடி காளியம்பாள் அணி முன்னிலையிலிருந்தது.

இரண்டாவது பாதியிலும் தாவடி காளியம்பாள் அணியின் ஆக்ரோஷமான ஆட்டம் தொடர்ந்தது.

பதிலுக்கு உடுவில் வைகறை அணி பழங்களை பெற முயற்சித்த போதும் அம்முயற்சி கைகூடவில்லை.

இரண்டாவது அரைப்பாதியில் தாவடி காளியம்பாள் அணி மேலும் 3 பழங்களை எடுத்து 6:0 என்ற கணக்கில் உடுவில் வைகறை அணியை வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இப் போட்டியின் சிறந்த தாச்சியாக தாவடி காளியம்பாள் அணியின் த.கமலநாதன், சிறந்த வீரராக தாவடி காளியம்பாள் அணியின் ச.ராஜு தெரிவானார்கள்.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி விளையாட்டு பண்பாட்டு அலுவல்கள் அமைச்சர் த.குருகுலராஜா, வடமாகாண சபை உறுப்பினரும், வடமாகாண விளையாட்டு அமைச்சின் இணைப்பாளருமானஇ.ஆனோல்ட், வடமாகாண சபை உறுப்பினர் பரஞ்சோதி,வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் ராஜா ரணசிங்க, யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி மோகன், வலி. தெற்கு பிரதேச சபை உபதவிசாளர் பரமேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கி வைத்தனர். இப்போட்டியில் ஆயிரக்கணக்கான தாச்சி இரசிகர்கள் கலந்து கொண்டு போட்டியைக் கண்டுகளித்தனர். (48)

## கைதடி குமரன் காலிறுதிக்கு முன்னேற்றம்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டத் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு கைதடி குமரன் அணி தகுதி பெற்றுள்ளது.

சாவகச்சேரி ஸ்ரீமுருகன் விளையாட்டு கழகம் நடாத்தும் தென்மராட்சி பிரதேச கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையில்கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியை மின்னொளியில் நடாத்தி வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் கைதடி குமரன் அணியும், யுனைட்டட் அணியும் மோதின.

ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய கைதடி குமரன் 3-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றது. (48)

## இன்று மகாஜனவில் பிரதேச மட்ட கரப்பந்து

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை பிரதேச செயலக விளையாட்டு விழாவின் ஓர் அங்கமாக தற்போது பெருவிளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த வகையில் ஆண், பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி இன்றைய தினம் காலை 8.30 மணிக்கு தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகளில் பங்குகொள்ளவுள்ள அணிகளை உரிய நேரத்திற்கு வருகை தந்து நேர விரயத்தைத் தவிர்த்துக் கொள்ளுமாறு தெல்லிப்பளை பிரதேச விளையாட்டு உத்தியோகஸ்தர் கேட்டுள்ளார். ஏனைய போட்டிகள் நடைபெறும் விபரங்கள் விரைவில் அறிவிக்கப்படும். (93)

## சாந்தை விநாயகர் முன்னேற்றம்

(அளவெட்டி)

மாவட்ட அணிகளுக்கிடையிலான தாச்சிப் போட்டியின் இரண்டாவது சுற்றுக்கு சாந்தை விநாயகர் அணி முன்னேறியுள்ளது.

அளவெட்டி கிழக்கு கும்பல்லை பாரதி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் நடாத்தும் மின்னொளியிலான தாச்சிப் போட்டிகள் பாரதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

24 அணிகள் பங்குகொள்ளும் இச் சுற்றுப் போட்டிகள் அளவெட்டி கிழக்கு கும்பலை பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை முதல் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் சாந்தை விநாயகர் அணியும், சண்டிலிப்பாய் உதயசூரியன் அணியும் மோதின. இதில் சாந்தை விநாயகர் அணி 5-0 என்ற பழங்கள் அடிப்படையில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

இன்றையதினம் நடைபெறவுள்ள போட்டியில் திருவள்ளுவர் பி அணியும், மயிலிட்டி பாரதி அணியும் மோதவுள்ளன.

இப்போட்டியில் வெற்றியீட்டும் அணிக்குப் பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும் எனவும், சிறந்த தாச்சி மற்றும் சிறந்த வீரருக்கான விருதுகளும் வழங்கப்படும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (48)

## தாச்சிச் சங்க நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் தாச்சிச் சங்கத்திற்கான புதிய நிர்வாகம் கடந்த வாரம் இணுவில் அண்ணா விளையாட்டு மைதானத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

புதிய தலைவராக செ. சண்முகலிங்கம், செயலாளராக க. ஜினதாஸ், பொருளாளராக வை. யேஸ்கரன், உப தலைவராக க. தயாளன், உப செயலாளராக க. சற்குணலிங்கம், போசகராக நா. பேரம்பலம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இத்தெரிவின்போது வடமாகாண சபை உறுப்பினர் இ. ஆனோல்ட், யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி எஸ். மோகனதாஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## அரையிறுதியில் கே.சி.சி.சி.

(கொக்குவில்)

நியூஸ்ரார் வெற்றிக்கிண்ண ருவென்ரி-20 தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு கொக்குவில் கே.சி.சி.சி. அணி முன்னேறியுள்ளது.

நியூஸ்ரார் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் நியூஸ்ரார் பிரிமியர் லீக் ருவென்ரி-20 வெற்றிக் கிண்ணத்திற்கான காலிறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

இப் போட்டியில் கொக்குவில் கே.சி.சி.சி. அணியும் சென்றலைட்ஸ் அணியும் மோதின.

நாணயற் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கொக்குவில் கே.சி.சி.சி. அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 205 ஓட்டங்களைக் குவித்தது. இதில் ஜெயரூபன் ஒன் பது சிக்ஸர்கள் அடங்கலாக 100 ஓட்டங்களைக் குவித்தார். மற்றும் வல்லவக்குமரன் 30, ஜனுதாஸ் 25 ஓட்டங்களைப் பெற்றனர். பதிலுக்கு 206 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென்றலைட்ஸ் அணி 16-.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 115 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. (48)

## கிளி. மாவட்ட அணிகளுக்கிடையிலான கரப்பந்து
## புதிய பாரதி வசம் கிண்ணம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் இராணுவத்தினால் நடாத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரின் கிண்ணத்தை பாரதிபுரம் புதிய பாரதி அணி கைப்பற்றிக் கொண்டது.

கிளிநொச்சி மாவட்ட இராணுவத்தினால் மாவட்ட கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டம் கடந்த 17ஆம் திகதி கிளிநொச்சி மக்கள் வங்கிக்கு அருகில் அமைந்துள்ள மைதானத்தில் நடைபெற்றது.

இதில் உதயநகர் இளம்தென்றல் அணியும், பாரதிபுரம் புதிய பாரதி அணியும் மோதின. மூன்று செட்களைக் கொண்ட இப்போட்டியில் புதிய பாரதி அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

இப்போட்டித் தொடரில் எட்டு அணிகள் பங்குகொண்டமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டி நிகழ்வில் கரப்பந்தாட்ட ஆதரவாளர்கள், நலன் விரும்பிகள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியாளர்களை உற்சாகப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கு மாகாண ஆளும்தரப்புக்கு இந்தத் தகவல் சமர்ப்பணம்




– சாலையூரான் –

தமிழ் சூழலில் ஆளும் - ஆளப்படும் தரப்புக்கள் என்ற நிலைமாறி நம்பிக்கைப் பொறுப்பு இரண்டறக் கலந்திருக்கும் ஒன்றிணைந்த ஜனநாயக வழி முறையில் நிர்வாகத்தை நடாத்துவதற்கு வடக்கிலிருந்து இராணுவம் வெளியேறுவது அவசியமானது என்றொரு கருத்தை வடக்கின் முதல்வர் முன்வைத்திருக்கிறார்.

வடக்கின் அனைத்து சமூகமட்டங்களிலும் மக்களின் தேவைப்பூர்த்திநிலையும் பற்றாக்குறை உணர்வுகளும் ஒரேமாதிரி இருப்பது போன்றும் அந்த நிலையிலேயே மக்கள் தம்முடன் இரண்டறக்கலந்திருப்பது போன்ற ஒரு தோற்றப் பாட்டை முதல்வர் தனது உரையின் மூலம் காண்பிக்க விரும்புவதாக தெரிகிறது.

இராணுவம் அகன்று விட்டால் இந்த தமிழ் சூழலுக்குள் கொள்ளல், கொடுத்தல் எல்லாம் சரியாக நடைபெற்று தமிழ் மக்கள் சுபீட்சமாக வாழ்ந்துவிடுவார்கள் என்கிற தொனியில் வடக்கின் முதல்வர் தனது கருத்தை வெளியிட்டிருப்பதாகவே கருத வேண்டியிருக்கிறது.

வடக்கினை ஜனநாயகப்படுத்தல், ஆளுமை, அபிவிருத்தி, நலிவுத்தன்மை என்கிற தொனிப் பொருளில் இம்மாதம் 10ஆம் திகதி இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில், வடக்கின் நல்லாட்சிக்கென முதல்வர் வெளியிட்டிருக்கும் இந்தக் கருத்தினுள்ளே பல பிரச்சினைகள் தொக்கி நிற்கின்றன.

வடக்கின் ஆளும் ஆளப்படும் தரப்புகள் என்பதில் தமது வடக்கு மாகாண சபையை ஆளும்தரப்பாகவும் மறுபக்கத்தில் தமிழ்மக்களில் அனைத்து பிரிவினரையும் ஆளப்படும் தரப்பாக கருதிக்கொண்டு முதல்வர் இவ்வாறு கூறியிருப்பதாகத் தெரிகிறது.

வடக்கு மாகாணசபையை கைப்பற்றியிருக்கும் இந்த ஆளும் தரப்பினர் எமது தமிழ் சூழலுக்கு வெளியே வேறெங்கிலுமிருந்து இங்கு குதிக்கவில்லை. எமது சமூகத்தில் மேலாதிக்கம் செலுத்தும் இந்த அணியை எப்படியாவது அதிகாரத்துக்கு கொண்டு வந்துவிடவேண்டும் என்பதில் ஒரு பிரிவினர் குறிப்பாக செயற்பட்டதன் ஒரு விளைவாகவே இந்த மாகாண சபைக்கான இப்போதைய ஆளும்தரப்பு தெரிவாகியிருக்கிறது. இவர்களில் ஒரு தரப்பினர் தமிழ் சூழலில் அனைத்து ஒதுக்கல் விலக்கல்களையும் தம்மகத்தே கொண்டு கோலோச்சி வாழ்ந்த பின், போர்ச் சூழலின் பெயரால் மேற்கு நாடுகளில் தம்மை புலம்பெயர்த்திக் கொண்டிருப்பவர்கள்.

மற்றொரு சாரார், உள்நாட்டில் எந்த அரசை மறுதலிக்கிறார்களோ அதே அரசின் நிர்வாகத்தில் உயர்பதவிகளை வகிப்பதன் மூலம் தமது வாழ்நாளுக்குமான இருப்பை உறுதிப்படுத்திக் கொண்டிருப்பவர்கள்.

தேசியத்தின் பெயரால் இதே அரச நிர்வாக இயந்திரத்தின் மூலம் பின்தங்கிய நிலையில் வாழும் மக்களுக்கு கிடைக்க வேண்டியவற்றை மறுதலித்துக் கொண்டு அதனை அரசுக்கெதிரான ஒரு நடவடிக்கையாக அதே மக்களுக்கே கற்பிதம் செய்ய முயல்பவர்கள் இவர்கள்.

இந்த இரு தரப்புக்கும் குறிப்பான ஒரு ஒற்றுமை இருக்கிறது. அதாவது தமது வாழ்க்கை தேவைகளுக்காக அரசிடமிருந்து எந்த உதவியையும் எதிர்பார்த்திருக்க வேண்டிய அவசியமெதுவும் இவர்களுக்கு இல்லை என்பதாகும்.

அதுமட்டுமன்றி, தமிழ் சமூகத்தில் உரிமை மறுக்கப் பட்டவர்கள், தேவைகளை அடைந்துகொள்ள முடியாத அணியினர் தமது வாழ்வுரிமைகளுக்காக தனியான ஒரு அரசியல் அமைப்பையோ தமக்கான உண்மையான பிரதிநிதிகளையோ தேர்ந்துவிடக் கூடாதென்பதில் இந்த வசதி வாழ்வைக் கொண்ட அணியினர் குறியாக இருக்கிறார்கள் என்பதை முதல்வர் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தளவுக்கு உள்முரண் பாடுகளை தமிழ் சூழல் தன்னகத்தே கொண்டிருக்கும் போது இராணுவத்தை விலக்கிக் கொள்வதன் மூலம் ஆளப்படும் தரப்பாக இருக்கும் தமிழ் மக்களுக்கும் அவர்களை நிர்வகிக்க விரும்பும் வடமாகாண ஆளும்தரப்புக்குமிடையே நம்பிக்கையான பொறுப்பு இரண்டறக்கலந்து அனைத்து பிரச்சினைகளையும் தமிழ் மக்கள் தீர்த்துக்கொண்டு விடுவார்கள் என்பதாக முதல்வர் குறிப்பிடுவது கேலிக் கூத்தான அரசியலாகும்.

பதிலுக்கு இந்த நிகழ்வில், வடக்கு மாகாண சபையால் முன்னெடுக்கப்படும் நலத்திட்டங்கள் சகலருக்கும் சென்று சேர வேண்டுமெனில் சாதிவர்க்கப் பாகுபாடுகளுக்கப்பால் சகலரும் பங்கேற்கும் அபிவிருத்தி வழிமுறைகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்றொரு கருத்தை அந்நிகழ்வில் உரையாற்றிய அகிலன் கதிர்காமர் குறிப்பிட்டிருக்கிறார்.

வளவாய்ப்புக்களை தமக்குள்ளே பங்கிட்டுக்கொள்வதில் தமிழ் சூழல் கொண்டிருக்கும் உள்முரண்பாடுகளை ஒப்பீட்டளவில் முதல்வரை விட அகிலன் கதிர்காமர் புரிந்துகொண்டிருப்பதாகத் தெரிகிறது. கூடவே, இதனை வடக்கு மாகாண சபை ஆளும் தரப்பும் புரிந்து கொண்டால் நீண்ட போரில் ஏதிலிகளாக்கப்பட்டிருக் கும் மக்களுக்கு ஏதாவது நன்மை கிடைக்க வழிகள் திறக்கலாம்.

# சமாதானம் செய்கிறவர்கள் பாக்கியவான்கள்...

- எழுகதிரோன் கட்டுரையிலிருந்து.



எதிர்வரும் மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை மாநாட்டில் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, இலங்கை குறித்த அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க உள்ளார். இந்த அறிக்கையின் அடிப்படையில் இலங்கை நிலைமைகளை மதிப்பீடு செய்து கொள்ள முடியும் என பிரித்தானியா அறிவித்துள்ளது.

அதே வேளை கடந்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் போர்க்குற்ற விவகாரங்களைக் கையாளும் சிறப்புத் தூதுவர் ஸ்டீபன் ஜே ராப்பிடம் இறுதிக்கட்டப் போரின் போது, இடம்பெற்றதாக சொல்லப்படும் யுத்த குற்றங்கள் பற்றி பல முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் மட்டுமன்றி ஆயர்களும் இணைந்து இலங்கை அரசு மீது கடுமையான குற்றசாட்டுகளை தெரிவித்துள்ளனர்.

சிறிலங்கா படையினரால் வீசப்பட்ட கொத்தணிக் குண்டுகள் விமானக்குண்டுகள், இரசாயனக் குண்டுகளாலேயே, அதிகளவு பொதுமக்கள் கொல்லப்பட்டதாக அமெரிக்காவின் போர்க்குற்ற விவகார நிபுணரிடம் மன்னார் ஆயர் இராயப்பு யோசேப் முறையிட்டுள்ளார். போர்க்குற்றங்கள் தொடர்பாக அனைத்துலக விசாரணைகள் நடாத்தப்பட வேண்டும் என்றும் ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தக் குற்றசாட்டுக்கள் எதுவும் புதியவையல்ல. இவற்றில் மிகைப்படுத்தல்கள் இருந்தாலும் அடிப்படையில் இறுதி யுத்தத்தின் போது மக்கள் வகைதொகையின்றி இறக்க நேரிட்டது என்பது பொய்யானதல்ல. ஆனால் இந்தக் குற்றச்சாட்டுகளை அரசு கடந்த ஐந்து வருடங்களாக இலங்கை அரசு எதிர்கொண்டு வருவதுடன் அவற்றை வெற்றிகொண்டே வருகின்றதென்பதும் கவனிக்கத்தக்கது.

இந்த நிலைமைக்கு காரணங்கள் பல காரணங்கள் உண்டு. எந்த இறுதி யுத்தத்தில் மக்கள் மீது படுகொலைகள் நிகழ்த்தப்பட்டன என முறையிடப்படுகின்றதோ அந்த யுத்தத்தை முன்னின்று நடாத்திய ஜெனரல் சரத் பொன்சேகாவை நாட்டின் ஜனாதிபதியாக்க 2010ல் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு எடுத்த முடிவே முதன்மையான காரணியாகும்.

தம்மீது பல்லாயிரம் கொலைகள் நிகழ்ந்ததாக கூறுகின்ற ஒரு இனம் அதன் சூத்திரதாரிக்கு எப்படி பெரும்பான்மை வாக்குகளை அளிக்கமுடியும்? நாட்டிலுள்ள இருபத்தி இரண்டு மாவட்டங்களில் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழுகின்ற பதினெட்டு மாவட்டங்களிலும் தோல்வியடைந்த பொன்சேகாவுக்கு வடக்குகிழக்கின் ஐந்து மாவட்டங்களிலும் தமிழர் கூடுதலாக வாழும் நுவரெலியாவிலும் மட்டுமே வெற்றி கிடைத்தது. கூட்டமைப்பினரின் அரசியல் சூனியமான இந்த முடிவுதான் இலங்கை அரசின் மேலான யுத்தகுற்றங்களை சர்வதேச ரீதியில் நீர்த்துப்போக செய்த முதற்காரணி ஆகும்.

தமிழ் மக்களின் அரசியல் வழிகாட்டிகளான யாழ்ப்பாண பெருங்குடிகள் (63 வீத) 113877 வாக்குகளை அளித்து சரத் பொன்சேகாவை ஜனாதிபதியாக்க முயன்றனர். இறுதியுத்தம் நடந்த படுகொலைகள் நடந்த வன்னி மாவட்டத்தில் (66 வீத) 70367 வாக்குகள் பொன்சேகாவுக்கு அளிக்கப்பட்டது. தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவு பெற்ற அந்த சரத் பொன்சேகா தலைமையில் தமிழ் மக்கள் மீது இனப்படுகொலை நடந்தது எனக் கூறுவதை உலகில் எந்த மடையன் நம்புவான்? இந்த மடத்தனத்துக்கு தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பல்லாயிரம் ஆண்டு சென்றாலும் பரிகாரம் தேட முடியாது.

இவை ஒருபுறம் இருக்க சர்வதேச யுத்த குற்றம் பற்றிய தீர்ப்பாயம் சம்பந்தமான ரோம் ஒப்பந்தத்தில் இலங்கை பங்கெடுக்காமை, ஐக்கிய நாடுகள் சபையின் வீட்டோ அதிகாரம் மிக்க ரஷ்யா, சீனா போன்ற நாடுகளை தமிழர் தரப்பினர் இன்றுவரை வெற்றிகொள்ள முடியாதிருக்கும் கையாலாகாத்தனம் போன்ற பல விடயங்கள் இலங்கை அரசுக்கு வாய்ப்பாக அமைந்திருக்கின்றன.

எனவே மீண்டும் மீண்டும் இந்த யுத்த குற்றங்களை பேசிப்பேசியே தமிழர் தரப்பு காலத்தை கடத்துவதும் அப்பாவி மக்களை ஜெனிவா கனவுகளில் மிதக்க செய்வதும் தமிழ் மக்களை ஏமாற்றும் செயலேயாகும். போதாமைக்கு வடமாகாண சபையை கொண்டு நடாத்த முடியாது திணறுகின்ற கூட்டமைப்பினர் இன்னும் மூன்று மாத காலத்துக்கு காலம் கடத்த இந்த ஜெனிவா கதையளப்பு கைகொடுக்கும்.

இந்த லட்சணத்தில் இருக்கும் அரசியல் வாதிகள் போதாதென்று எமது ஆயர்களும் இப்போது முழுநேர அரசியல் வாதிகளாகி விட்டனர். அமெரிக்காவின் போர்க்குற்ற விவகார நிபுணருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்கள் இந்த இலங்கை வாழ் ஆயர்கள். குழந்தைகளின் கைகளில் புலிகள் வெடிகுண்டுகளை திணித்த பொழுதுகளிலும், தமிழர்களிலேயே தமக்கெதிரானவர்கள் என்று பல நூற்றுக்கணக்கானவர்களை கொன்றுபோட்ட பொழுதுகளிலும், பல்லாயிரம் மக்களை மனித கேடயங்களாக தடுத்துவைத்து பலியிட்ட பொழுதுகளிலும் பிதாவே இவர்கள் அறியாமல் செய்கிறார்கள் இவர்கள் பாவங்களை மன்னியுமென்று மன்றாடியிருப்பார்கள் போலும்.

சமாதானம் செய்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றுதான் கர்த்தரின் வார்த்தைகள் சொல்கின்றன. ஆனால் நமது பாதிரிகளோ பழிவாங்கலும் வஞ்சம் தீர்த்தலும் என்று நடந்துகொள்கிறார்கள்.

இது நாட்டில் மீண்டும் மீண்டும் குரோதங்களையே விளைவிக்கும் என்பதை இவர்கள் அறியாதிருக்கிறார்களா?

# வலைஞர் எனும் எழுத்தாளர்

**செ**ன்னைப் புத்தகக் காட்சியில் இந்த ஆண்டு அதிரடியாகக் கலக்கியவர்கள் - சமூக ஊடக எழுத்தாளர்கள். ஃபேஸ்புக் பதிவுகள், ட்விட்டர் பதிவுகள் என தொகுக்கப்பட்ட புத்தகங்கள் விற்பனையில் கலக்க, "நீங்களெல்லாம் எழுத்தாளர்கள் என்றால் நாங்கள் என்னவாம்?" என்கிற சர்ச்சை உருவானது. அதிலும் அராத்து, விநாயக முருகன், ப்ரியா தம்பி ஆகியோருக்குக் கிடைத்த கவனம் "பாரம்பரிய எழுத்தாளர்"களைக் கொதிப்படைய வைத்தது.

இதுகுறித்து இணையத்திலும் புழங்கிக்கொண்டு பத்திரிகைகளிலும் எழுதும் சாருநிவேதிதா, பாஸ்கர் சக்தி இருவரிடமும் பேசினோம்.

"இணையத்தில் எழுதும் பெரும்பாலான எழுத்தாளர்களுக்கு தமிழில் வாசிப்பே கிடையாது; அவர்களுக்குத் தமிழில் எழு-தவே தெரியவில்லை. இணையம் வழியாக நல்ல எழுத்தாளர்கள் உருவாகலாம். ஆனால், தற்போதைய சூழலில் அப்படி யாருமே உருவாகவில்லை என்றே சொல்வேன். ஒன்லைனிலேயே அமர்ந்து போதை அடிமை போல புத்தக வாசமே இல்லாமல் எதையாவது மொக்கையாக எழுதிக்கொண்டிருப்பவர்கள்தான் பெரும்பாலான இணைய எழுத்தாளர்கள். அராத்து போன்றவர்கள் இதில் விதிவிலக்கு" என்றார் சாருநிவேதிதா.

"ஒரு ஊடகம் சமூகத்தில் புதிதாக வரும்போது பல்வேறு சலனங்கள் தோன்றும். இப்போது வெகுஜனப் பத்திரிகைகளில்கூட இணையத்தில் சுவாரசியமாக எழுதுபவர்களைப் பார்த்து வேலை கொடுக்கும் வழக்கம் உருவாகியுள்ளது. வெகுஜனப் பத்திரிகைகளில்கூட வலைப்பக்கம் தவிர்க்க முடியாத அங்கமாகிவிட்டது. இவை எல்லாம் ஒரு தொழில்நுட்ப வளர்ச்சியின் பக்கவிளைவுகள்தான். இப்படிப் புதிதாக வருகிற எழுத்தாளர்கள் அவர்கள் எழுதும் துறைகளில் முக்கியமான எழுத்தாளர்களாக வருங்காலத்தில் வருவார்களா வர மாட்டார்களா என்பதை இப்போது கணிக்க முடியாது. ஆனால் அதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதையும் மறுக்க முடியாது. இணையம் புதிய வகை எழுத்துகள் வருவதற்கு அதிக வாய்ப்புகளை அளிக்கிறது" என்றார் பாஸ்கர் சக்தி.



சரி, இணையம் மூலம் எழுத "வந்தவர்கள் என்ன நினைக்கிறார்கள்?

"பொதுவாக, சமூகத்தில் பேசத் தயங்கும் விஷயங்களை இணைய எழுத்தாளர்கள் பேச வேண்டும் என்று வாசகர்கள் எதிர்பார்க்கிறார்கள். பொதுவாக, "பாரம்பரிய எழுத்தாளர்"களுக்கும் வாசகர்களுக்கும் இடையே பெரிய இடைவெளி இருந்துள்ளது. அந்த இடைவெளியை இணைய சமூகம் நிரப்பியுள்ளதாக நினைக்கிறேன" என்கிறார் அராத்து.

நவீன வாழ்க்கையின் கொண்டாட்டங்களை, சுகதுக்கங்களை, நீர்க்குமிழிகளைப் போன்ற நிலையாமைத் தருணங்களைச் சமூக ஊடகங்கள்தான் ரத்த வாடையோடு தருகின்றன. அவை புத்தகங்களாக வெளியாகும்போது ஆதரவைப் பெறுவதில் வியப்பில்லை. ஆனால், அவை இலக்கியமா, இலக்கியமில்லையா என்பதைக் காலம்தான் தீர்மானிக்க வேண்டும்!

(நன்றி: தமிழ் இந்து)

# இந்திய விளம்பரங்களில் இருந்து நாம் கற்றுக்கொண்டது என்னென்ன?



- கத்ரினாவுக்கு பொடுகு, தலைமுடி பிரச்சினை இருக்கிறது... ஷில்பாவுக்கு தலைமுடி உதிர்கிறது.
- மனைவி இருப்பவன், பக்கத்து வீட்டுக்காரன் வாசனைப்பொருட்கள் பயன்படுத்தாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
- சமையலறையில் உப்பு இல்லையா, கவலை வேண்டாம். டூத் பேஸ்ட் பயன்படுத்தலாம்!
- ஒவ்வொரு பற்பசை பிராண்டும் நம்பர் 1 பிராண்ட்தான், எல்லாமே இந்திய பல் மருத்துவர்கள் அனைவராலும் பரிந்துரை செய்யப்படுபவைதான்!!!
- உங்கள் மகள் திருமணம் செய்ய விருப்பம் இல்லாமல் இருந்தால் நகைக்கடைக்கோ அல்லது துணிக்கடைக்கோ செல்லுங்கள்.
- ஆண்கள் வாசனைத் தைலம் பயன்படுத்துவதன் ஒரே காரணம் பெண்களைக் கவர்வதற்கே.
- கோலா பானங்கள் அனைத்துமே எல்லா வகையான பயங்களையும் போக்கிவிடும். தொடர்ந்து பருகி வந்தால் நீங்களும் சூப்பர்மேன் ஆகிவிடுவீர்கள்!!
- சூப்பர்ஸ்டார்கள் எல்லாருமே பாவம், மிகவும் ஏழைகள். 10 ரூபா கொடுத்து கோலா வாங்க இயலாமல் உயிரையே பணயம் வைக்கவும் தயங்க மாட்டார்கள்.
- ஷாம்பு அல்லது சோப்பில் இருக்கும் பழப்பொருட்களின் விகிதம், 99 வீத பழச்சாறுகளில் இருக்கும் விகிதத்தை விட அதிகமானது.
- குறிப்பிட்ட பால்பொருள் நல்ல பால்பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய திறமைசாலிகளைவிட கார்ட்டூன் வரையும் திறமைசாலிகள் அதிகமாக இருக்கிறார்கள்.
- மோட்டார் பைக் வாங்குவோர் எவரும் பயணம் செய்வதற்காக அல்ல, பெண்களை பிக் அப் செய்யவே வாங்குகிறார்கள்.
- தாயும் மகளும் பேசிக்கொள்கிற ஒரே நேரம், தலைமுடிக்கான எண்ணெய் பற்றிப் பேசும்போது மட்டும்தான்.
- எந்தத்துறை வல்லுநராக இருந்தாலும் சரி, அவர் எப்போதும் வெள்ளை கோட் அணிந்திருப்பா

- உமாராணி -

# லெனின் இன்று தேவையா?

பீ.ஏ.கிருஷ்ணன் கட்டுரையிலிருந்து.

"**லெ**னின் உலகை வலம் வருகிறார். கறுப்பு, வெள்ளை, பழுப்பு எல்லா நிறத்தவரும் அவரை வரவேற்கின்றனர்.

மொழி தடையே அல்ல. அவரை அரிதினும் அரிதான மொழியைப் பேசுபவர்களும் நம்புகின்றனர்."

ஆபிரிக்க அமெரிக்கக் கவிஞரான லோங்ஸ்டன் ஹ்யூஸ் எழுதிய இந்த வரிகள், சென்ற நூற்றாண்டின் 70 கள் வரை உண்மையாக இருந்தன. இன்றைய உண்மை வேறு. லெனினைப் பற்றி அறிந்தவர்களின் எண்ணிக்கை அருகிக்கொண்டே வருகிறது. இதற்குக் காரணங்கள் பல. லெனினின் வழி வந்தவர்கள் செய்த தவறுகளும் இவற்றில் ஒன்று.



ஆனால், முக்கியமான காரணம், தொழில்நுட்பத்தின் துணைகொண்டு முதலாளித்துவம் இன்று அடைந்திருக்கும் முன்னேற்றம். இந்த முன்னேற்றம் ஏற்றத்தாழ்வை ஒழிக்குமென்றோ அல்லது போரற்ற சமுதாயத்தை உருவாக்குமென்றோ நம்பிக்கை கொள்வதற்கான எந்த அறிகுறிகளும் இல்லை. மாறாக, முதலாளித்துவத்துக்கு அடுத்தடுத்து நெருக்கடிகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனாலும், இந்த நெருக்கடிகளைப் பயன்படுத்தி உழைக்கும் மக்களின் கரங்களை ஓங்க வைக்கும் வழிமுறைகளை நமக்குக் காட்டும் தலைவர்கள் இன்று இல்லை என்பதுதான் கசப்பான உண்மை.

உலகத் தலைவர்களில் விடுதலை இயக்கங்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தவர்களில் முதன்மையானவர் லெனின். இதை நமது விடுதலை இயக்கத்தில் ஈடுபட்ட எல்லாத் தலைவர்களும் நன்றியோடு நினைத்தனர். காந்தி சொன்னது இது: "லெனின் போன்ற மனவலிமை மிக்க பெருந்தலைவர்கள் லட்சியத்தின் மீது கொண்டிருந்த ஈடுபாடு நிச்சயம் பலனை அளிக்கும். அவரது தன்னலமற்ற தன்மை பல நூற்றாண்டுகளுக்கு ஓர் உதாரணமாக விளங்கும். அவரது லட்சியமும் முழுமை அடையும்."

நேருவைப் படித்த எவரும் அவருக்கு லெனின் மீதிருந்த பெருமதிப்பை உணரத் தவற மாட்டார்கள். பகத் சிங் தூக்குமேடை ஏறுவதற்கு முன்பு படித்த கடைசிப் புத்தகம் லெனினின் வாழ்க்கை வரலாறு என்பது நம்மில் பலருக்குத் தெரிந்திருக்கும்.

சரி; விடுதலை இயக்கத்தின்போது அவர் தேவையாக இருந்திருக்கலாம். இன்று அவரது தேவை என்ன?

லெனின் 1918இல் எழுதிய "ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சக்கட்டம்" புத்தகத்தைப் படித்தால் பதில் கிடைக்கும். ஏகாதிபத்தியத்தின் ஐந்து முக்கிய கூறுகளை இந்நூலில் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.


1. ஏகபோக முதலாளித்துவம் உலகப் பொருளாதாரத்தில் முக்கியத்துவம் பெறுவது.
2. நிதி நிறுவனங்களின் கை ஓங்குவது.
3. நிதி ஏற்றுமதியின் முக்கியத்துவம் அதிகரிப்பது.
4. ஏகபோக முதலாளிகள் உலகப் பொருளாதாரத்தைப் பங்கிட்டுக்கொள்ள அவர்களுக்குள் ஒப்பந்தங்கள் செய்துகொள்வது.
5. உலக நாடுகளை ஏகாதிபத்திய நாடுகள் தங்களுக்குள் பங்கிட்டுக்கொள்வது.


இவற்றில், கடைசியில் குறிப்பிடப்பட்டிருக்கும் பங்கீடு முதல் உலகப் போருக்குப் பின் நடந்தது என்பது உண்மை. ஆனால், முதலாளித்துவ நாடுகளுக்கிடையே ஏற்பட்ட முரண்களால் நடந்த இரண்டாவது உலகப் போரின் விளைவாலும், இந்தியா, சீனா போன்ற நாடுகளில் நடந்த தேசிய விடுதலைப் போராட்டங்களின் விளைவாலும் நேரடியாகப் பங்கிட்டுக் கொள்ளப்பட்ட நாடுகளுக்குப் பெயரளவில் விடுதலை கிடைத்தது.

ஏகாதிபத்தியம் லெனின் கூறிய மற்றைய அனைத்துக் கூறுகளையும் கொண்டிருக்கிறது என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இதனால் மக்களுக்கு என்ன கேடு என்று சிலர் கேட்கலாம். ஏற்றத்தாழ்வுகள் இல்லாத சமுதாயம் நேற்று கனவாக இருந்திருக்கலாம். ஆனால், இன்று அது முற்றிலும் சாத்தியமானது. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் அசுர வளர்ச்சி அதைச் சாத்தியமாக்குகிறது. இவை வளர்ந்ததற்கு முதலாளித்துவம் முக்கியமான காரணம் என்பது முற்றிலும் உண்மை. ஆனால், வளர்ச்சியின் பயனை உலக மக்கள் அனைவரையும் அடையச் செய்ய வேண்டும் என்ற கொள்கைப்பிடிப்பு அதனிடம் இல்லை. இருந்தால் அது முதலாளித்துவமாக இருக்காது. இதனாலேயே இன்று உலகம் முழுவதும் ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்திருக்கின்றன. போர்கள் தூண்டப்பட்டுக்கொண்டிருக்கின்றன. மதவாதிகளும் பழமைவாதிகளும் தூக்கி நிறுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவையெல்லாம் மாற வேண்டும் என்று நினைப்பவர்கள் எவரும் ஏகாதிபத்தியம் இருந்துவிட்டுப் போகட்டும் என்று சொல்ல மாட்டார்கள்.

எனவே, மக்களுக்கு அடிப்படை விடுதலை இன்றுவரை கிட்டவில்லை என்று கருதுபவர்கள் காந்தியையும் அம்பேத்கரையும் மார்க்ஸையும் ஏங்கல்ஸையும் குறிப்பாக லெனினையும் மறுவாசிப்பு செய்ய வேண்டும். கூடவே, முதலாளித்துவத் தரப்பிலிருந்து என்ன சொல்கிறார்கள் என்பதைப் பற்றிய அறிதலும் இருந்தாக வேண்டும். அது லெனினுக்கு நிச்சயம் இருந்தது.

லெனினுடைய பெயர் வரலாற்றின் அடிக்குறிப்புகளுக்குள் தள்ளப்படும் நாட்கள் தொலைவில் இல்லை என்று சில மேற்கத்திய வல்லுநர்கள் சொல்லத் தொடங்கியிருக்கிறார்கள். லெனின் அவ்வளவு எளிதாக மறையக் கூடியவர் அல்ல. ஏற்றத்தாழ்வுகள், ஒடுக்கப்படுதல், ஏகாதிபத்தியத்தின் நேரடி மற்றும் மறைமுகத் தாக்குதல்கள், முற்றுகைகள், ஏகபோக முதலாளிகளுக்குத் தரப்படும் தங்குதடையற்ற சுதந்திரம் போன்றவை உலகில் இருக்கும்வரை, லெனின் சொன்னவை எல்லாம் நினைவில் இருக்கும். "எல்லோரும் ஓர் நிலை, எல்லோரும் ஓர் நிறை" ஆகும் நாள் வரும்போது அவரது பெயர் நன்றியோடு சொல்லப்படும்.





பருத்தித்துறை நகரசபையின் உள்ளூராட்சி வார பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜகத் அபயக்கோன் மங்கள விளக்கேற்றி ஆரம்பிப்பதையும், அருகில் நகர சபைத் தவிசாளர் சட்டத்தரணி சபா.இரவீந்திரன் நிற்பதையும் விளையாட்டு வீரருக்கு நகர சபை உறுப்பினர் திருமதி என். மதினி பரிசில்வழங்குவதையும் காணலாம். (01)

# கலை அலுவல்கள் அமைச்சினால் அரச நாடக விழாவிற்கு விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இலங்கை கலைக் கழகத்தின் அரச நாடகக் குழு ஒன்றிணைந்து ஏற்பாடு செய்யும் 2015 அரச நாடக விழாவிற்கும் 2014அரச குறு நாடக விழாவுக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

இதன்படி அரச நாடக விழாவிற்கு 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01ஆம் திகதி முதல் 2014 டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரை அரங்கேற்றப்பட்ட சுயமொழிபெயர்ப்பு தழுவல் மேடை நாடகங்கள் தொடர்பாக விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

மேலும் 2015 அரச குறு நாடக விழாவிற்கு சகல விண்ணப்பதாரிகளும் நாடகக் குழுவின் செயலாளரால் வழங்கப்படும் விண்ணப்பத்தை தகுந்த முறையில் பூரணப்படுத்தி 03 நாடகப் பிரதியுடனும் 03 சாராம்சப் பிரதிகளுடனும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவேண்டும்.

அரச குறுநாடகவிழாவுக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பத்தில் அரச குறுநாடக விழா 2014 எனக் குறிப்பிட்டு செயலாளர், அரச நாடகக்குழு, கலாசார அலுவல்கள் திணைக்களம், 8ஆம் மாடி செத்சிறிபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பவேண்டும்.

அரச நாடக விழாவுக்கான விண்ணப்பப்படிவங்கள் மற்றும் சுற்று நிருபம் என்பவற்றை மேலுள்ள முகவரியில் பெற்றுக் கொள்ளமுடியும். அத்துடன் சகல மாவட்ட பிரதேச செயலகங்களிலும் விண்ணப்பங்கள் மற்றும் சுற்று நிருபங்களை பெற்றுக்கொள்ளலாம்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை பெற 0112872385 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

# இணையத்தளம் அங்குரார்ப்பணம்

(மானிப்பாய்)

வலி. தெற்கு சுன்னாகம் பிரதேச சபைக்கு இணையத்தளம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

வலி. தெற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி வார பரிசளிப்பு விழாவும் கௌரவிப்பு நிகழ்வும் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது இந்நிகழ்வில் மேற்படி இணையத்தளம் வடக்கு மாகாண முதலமைச்சர் சீ.வீ.விக்கினேஸ்வரனால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

ஆரம்பிக்கப்பட்ட இணையத்தளத்தை vsps.lk என்னும் முகவரியில் பார்வையிட முடியும். பிரதேச சபையின் வரலாறு, வளங்கள், அதன் செயற்பாடுகள் அனைத்தையும் உலகெங்கும் உள்ள மக்கள் இணையவழி மூலம் அறிந்து கொள்வதற்கு ஏதுவாகவே இவ் இணையத்தளம் உருவாக்கப்பட்டுள்ளதாக தவிசாளர் பிரகாஷ் தெரிவித்தார்.

அத்துடன் இவ் இணையத்தளத்தினூடாக மக்கள் கருத்துக்களை தெரிவிக்க முடியும். அத்துடன் ஏனைய பிரதேசத்தவர்களும் வலி தெற்கு சுன்னாகம் பிரதேசசபையின் நடவடிக்கைகளை இதன் மூலம் அறிய முடியும் என தவிசாளர் மேலும் தெரிவித்தார். (48)

# அபிராமிப்பட்டர் விழா

(அளவெட்டி)

அளவெட்டி மேற்கு, நாகேஸ்வரம், ஸ்ரீநாகவரதநாராயணர் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 30, ஆம் திகதி வியாழக்கிழமைஅபிராமிப்பட்டர் விழா பக்தி பூர்வமாக நடைபெறவுள்ளது.

மாலை ஆறுமணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசை ஆரம்பமாகும். அபிராமிப்பட்டர் அபிராமியும் அருள்பெற்று முழு அமாவாசை தினத்தில் பௌர்ணமியைக்காண்பிக்கும் நிகழ்வு நடைபெற்று அம்பாள் திருவீதி எழுந்தருளி பக்தர்களுக்கு அருளாசி வழங்கும் நிகழ்வும் இடம்பெறும். (68)

# கரும்புள்ளியான் வீதிபுனரமைப்பு சிறந்த போக்குவரத்துக்கு வழி

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு கரும்புள்ளியான் கிராமத்தையும் துணுக்காய் யோகபுரத்தையும் இணைக்கும் விவசாய வீதி நீர்ப்பாசன திணைக்களத்தினால் புனரமைக்கப்பட்டுள்ளதாக வவுனிக்குள நீர்ப்பாசன பொறியியலாளர் பா.விகர்னன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேசத்திற்குட்பட்ட கரும்புள்ளியான் கிராமத்திலிருந்து துணுக்காய் பிரதேசத்திற்குட்பட்ட யோகபுரம் ஊடாக மல்லாவிச் சந்தி வரையான விவசாய வீதி புனரமைக்கப்படாத நிலையில் பாரிய குண்டும் குழியுமாகக் காணப்பட்டதுடன் போக்குவரத்து செய்ய முடியாதுள்ளது.

இந்நிலையில் நீர்பாசனத் திணைக்களத்திற்கு சொந்தமான மேற்படி வீதியும் புனரமைக்கப்பட்டுள்ளதுடன் இதனைக் குறுக்கறுத்துச் செல்கின்ற பாலியாற்றுக்கான பாலமும் புதிதாக நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.

இதனால் தற்போது இவ்வீதியைப் பயன்படுத்தும் 1000 இற்கும் மேற்பட்ட மக்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் இலகுவாக போக்குவரத்தை மேற்கொள்வதாக அவர் மேலும் தெரிவித்தார். (40)

# செஞ்சிலுவை சங்க சேவையில் இணைவதற்கான வழிமுறைகள்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் செயற்பாடுகளுக்கு அங்கத்தவர்களே பக்க பலமாக இருந்து வருகின்றனர். அங்கத்துவங்கள் கீழ் காணும் வகையில் அமைந்துள்ளன.

1. ஆயுட்கால அங்கத்துவம்
2. செயலாற்றும் அங்கத்துவம்
3. ஆதரவளிக்கும் அங்கத்துவம்
4. இளைஞர் அங்கத்துவம்
5. கனிஸ்ட அங்கத்துவம்
6. குருளை அங்கத்துவம்

அங்கத்தவர்களாக இணைந்து கொள்பவர்கள் சேவை மனப்பான்மை உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். துரித அங்கத்தவர்களே அதிகமாக இணைத்துக் கொள்ளப்படுகின்றனர்.இவர்கள் பல்வேறு சேவைகளுக்காக காலத்திற்கு காலம் அவர்களின் திறன் சார்ந்த கடமைகளுக்கு அமர்த்தப்படுகின்றனர். அங்கத்தவர்களாக இணைந்து கொள்வதற்கு இனம், மதம் என்ற பாகுபாடு பார்ப்பதில்லை. வருடாந்த அங்கத்துவ சந்தா ரூபா பத்து (ரூபா 10.00) மட்டுமேயாகும். இவ்வாறு மிகவும் குறைந்த சந்தா பெற்று அங்கத்துவம் வழங்கும் தேசிய சங்கம் - இலங்கை செஞ்சிலுவைச் சங்கமாகும்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் நல்லதொரு நிர்வாகக் கூட்டமைப்பைக் கொண்டு இயங்கி வருகின்றது. தேசிய தலைமையகம், கொழும்பு 07இல் இயங்குகின்றது. இதன் வலைபபின்னலாக 25 மாவட்டங்கள் தோறும 25 கிளைகள் இயங்குகின்றன. ஒவ்வொரு மாவட்ட கிளைகளும் அதன் பிரதேச நிர்வாக கட்டமைப்புக்கு ஏதுவாக பிரிவுகளை உருவாக்கி இயங்குகின்றன. யாப்பின் பிரகாரம் குறைந்தது. 03 பிரிவுகள் இயங்கியே ஆகவேண்டும். பிரிவுகளின் கீழ் அலகுகள் இயங்குகின்றன. அலகுகள் அங்கத்தவர் தொகைக்கேற்பவும், நிர்வாக செயற்பாட்டிற்கு வசதியாகவும், வகுத்து சரிப்படுத்திக் கொள்ளலாம். ஒரு பிரிவின் கீழ் குறைந்தது. 03 அலகுகளாவது இயங்க வேண்டும். ஒரு அலகினை புதிதாக ஸ்தாபிக்கவோ அன்றேல் தொடர்ந்து இயங்கவோ 50 அங்கத்தவர்கள் இருக்க வேண்டும்.

இங்கே மிகவும் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய விடயம் யாதெனில், அங்கத்தவர்களை புதிதாக இணைத்துக் கொள்வதிலும் ஏற்கனவே அங்கத்துவம் பெற்றுள்ள அங்கத்தவர்களை வருடந்தோறும், புதுப்பிதது்க் கொள்வதிலும், முக்கிய பொறுப்பு வாய்ந்தவர்களாக அலகு நிர்வாகக் குழுவினர் காணப்படுகின்றனர். அலகினுடைய செயற்பாடுகள் யாவும் பிரிவுகள் ஊடாக ஆற்றப்படுகின்றன. அங்கத்துவத்தைப் பொறுத்த மட்டில் பிரிவுகள், அலகுகளில் இருந்து பெறப்படும் புதிய மற்றும் புதுப்பிக்கும் அங்கத்துவங்களை பட்டியல்படுத்தி கிளைக்கு அனுப்பி வைக்கும் கிளை நிர்வாக சகல பிரிவுகளிலும் இருந்து கிடைக்கும் அங்கத்துவபடிவங்களை செவ்வை பார்த்து தேசிய தலைமையகத்திற்கு அனுப்பிவைக்கும்.

அங்கத்துவ சந்தாவின். ஒருபகுதி தேசிய தலைமையகத்திற்கும், மீதியை கிளையும், பிரிவுகளும் பகிர்ந்து கொள்கின்றன.

ஆயுட்கால அங்கத்துவம் பெற விரும்புவோர் (ரூபா 10,000.00) செலுத்தி அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்ளலாம். கௌரவ ஆயுட்கால அங்கத்துவம் சந்தா செலுத்திப்பெறுவதில்லை. அங்கத்தவர் ஒருவரின் மூப்பு அடிப்படையும், அவர் கடந்த காலங்களில் செய்த சேவைகளையும், கருத்திற்கொண்டு மத்திய ஆளுநர் சபையினர் தீர்மானம் எடுத்து இவ் அங்கத்துவம் வழங்கப்படுகின்றது. தற்சமயம் இலங்கை முழுவதிலும் இருவர் மட்டுமே கௌரவ ஆயுட்கால அங்கத்தவர்களாக உள்ளனர்.

மொத்த அங்கத்துவ எண்ணிக்கையின் அடிப்படையிலே, பிரிவு /கிளை, தேசிய தலைமையக வருடாந்த பொதுக் கூட்டங்களில் அங்கத்துவப் பிரதிநிதித்துவம் (Delegates) கிடைக்க வாய்ப்புக் கிடைக்கின்றது.

உதயசூரியன்,
தலைவர்,
வலி.மேற்கு பிரிவு (சங்கானை)

புதிய அங்கத்துவத்தை இணைத்துக் கொள்வதிலும், தற்சமயம் உள்ள அங்கத்தவர்களை புதுப்பித்துக்கொள்வதிலும் நாம் உரிய முறையில் செயற்பட கடமைப்பட்டுள்ளோம். புதிய திட்டங்களை அமுல்படுத்த வரும் எமது சகோதர செஞ்சிலுவைச் சங்கங்கள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கங்கள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை சங்கத்தினர் எம்மை முதலில் கேட்பது மொத்த அங்கத்தவர்களின் தொகையே ஆகும்.

எனவே, அலகுகள், பிரிவுகள், இவற்றை மனதில் நிறுத்தி செயற்படின் எம்மால் மென்மேலும் பற்பல சேவைகளை நலிந்த மக்களுக்கு ஆற்ற முடியும்

# கல்வியில் குறை நிகழாதவாறு அதிபர் ஆசிரியர்கள் செயற்படவேண்டும்

## வடமாகாண கல்வி அமைச்சர்



வடமாகாணத்தின் குறிப்பாக கிளிநொச்சி கல்விவலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன. இதனால் மாணவர்களின் கல்வியே பாதிக்கப்படுகின்றது.எனவே மாணவர்களின் கல்வியில் குறை நிகழாதவாறு அதிபர்கள், ஆசிரியர்கள் செயற்படவேண்டுமென வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா கேட்டுக்கொண்டுள்ளார்.

வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் அறுவுறுத்தலுக்கு அமைய, கிளிநொச்சி வலய கல்விப் பணிமனையால் ஒழுங்குபடுத்தப்பட்ட அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று வலயக்கல்வி பணிமனையில் அண்மையில் வலயக் கல்விப் பணிப்பாளர்* முருகவேல் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

அண்மைக்காலமாக பத்திரிகைகளில் கல்வி தொடர்பான குறைபாடுகள் பிரச்சினைகளை அதிகம் காணக்கூடியதாக இருக்கின்றது. பல பிரச்சினைகள் வகுப்பறைகளுக்குள்ளேயோ அல்லது பாடசாலை வளாகத்துக்குள்ளேயே தீர்க்கப்பட வேண்டியவை. ஆனால் அவை அதையும் தாண்டிசெல்வதை அவதானிக்க முடிகின்றது. ஒரு நல் அதிபராக இருப்பது, நல்லாசிரியராக இருப்பது கட்டடங்களை மெருகுபடுத்துவதிலும் யாரை அழைத்து எப்படி விழாக்களை நடாத்துகின்றோம் என்பதில் இல்லை என்று நான் நினைக்கின்றேன்.

இன்று பல்வேறு பிரச்சினைகள் கல்வி தொடர்பாக கிளிநொச்சி வலயத்தில் பாடசலைகளில், குறிப்பாக நகர்புற பாடசாலைகளில் முதலாம் பாடவேளை பாதிக்கப்படுவதாக உணர்கிறேன். காரணம் கிளிநொச்சி வலயத்தில் 500 தொடக்கம் 750 வரையிலான ஆசிரியர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்தே வருகின்றார்கள். அவர்களுக்கு அன்றாடப் பயணம் என்பது பிரச்சினையான ஒன்றாக இருப்பதாகத் தெரியவருகிறது.

இது கிளிநொச்சி வலய பாடசாலைகளில் பாதிப்பை ஏற்படுத்துமென நினைக்கின்றேன். இதற்கான தீர்வுகளை அதிபர்களே மேற்கொள்ள வேண்டும். ஒரு அரச உத்தியோகத்தருக்கு இருக்கக்கூடிய சட்ட நடைமுறைகளை அவர்களுக்கு விளக்க வேண்டும். அந்த வரையறைகளை விளங்கிக்கொண்டு ஆசிரியர்களும் இயங்குவதற்குரிய நிலையை ஏற்படுத்த வேண்டும்.

முன்னைய காலத்தில் இதே கிளிநொச்சி வலயத்தில் யாழ்ப்பாண ஆசிரியர்கள் இங்குவந்து தங்கி நின்று அல்லது இங்கு வாழும் மாணவர்களுக்கு குறையில்லாத கல்வியை வழங்குவதற்கு தம்மை தயார்படுத்தி அர்ப்பணிப்பு உள்ளவர்களாய் இருப்பதை நான் கண்டுள்ளேன். ஏன் இன்று அது முடியாதிருக்கின்றது.

கிளிநொச்சியையும் தாண்டி இன்னும் தூர கஷ்ட பிரதேசங்களில் இன்று முன்னுதாரணமான முறையில் யாழ்ப்பாணத்தில் இருந்து வரும் ஆசிரியர்களின் சேவை காணப்படுவதை நான் நேரடியாக கண்டுள்ளேன்.

எனவே மாணவர்களின் கல்வியில் குறை நிகழாதவாறு அதிபர்கள், ஆசிரியர்கள் செயற்படவேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன் எனத்தெரிவித்தார்.

# அபிராமி உபாசகித்தாயாரின் அருளொளி தரிசன மாலை

(திருநெல்வேலி)

டென்மார்க் பிரண்டாபதி ஸ்ரீ அபிராமி உபாசகித் தாயாரின் அருளொளி தரிசன மாலை நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் ஆரம்பமானது.

தாயாருக்குப் பூஜை, வழிபாடு, ஆராதனை என்பன இடம்பெற்றன. அம்மாவின் அருள் வேண்டி ஏராளமான அடியார்கள் பூஜைக் தட்டு, கற்பூரம், மலர்கள் தூவி அர்ச்சனை செய்தனர். பஜனை இடம்பெற்றது.

உயரப்புலம் வித்தியாலய மாணவர்கள் நாற்பது பேருக்கு டென்மார்க் அபிராமி அம்மன் ஆலய அம்மாவினால் அன்பளிப்பு செய்யப்பட்ட புத்தகப்பைகள் வழங்கப்பட்டன. அத்துடன் கணவன்மார்களை இழந்த பெண்களுக்கு உடுபிடவைகள் வழங்கப்பட்டன.

பஜனை, பூஜையில் கலந்து கொண்ட அடியார்கள் அனைவருக்கும் டென்மார்க் ஆலய அம்மாவின் ஆசியுடன் பெறுமதிமிக்க அன்பளிப்புப் பொருட்கள் வழங்கப்பட்டன. அம்மாவின் வேண்டுதலின் பேரில், யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது அன்பர்களினால் இவ்வுதவிகள் வழங்கப்பட்டன.

டென்மார்க்கில் அபிராமி அம்மன் ஆலயம் எழுந்தருளி உள்ளது. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அம்மையார் டென்மார்க் நகரில் இவ்வாலயத்தை நடாத்தி வருகின்றார். இக் கோவிலைப் பற்றியும், அம்மாவின் மகிமை பற்றியும் அந்நாட்டுப் பத்திரிகைகள் பல புகழ் பரப்பி எழுதியுள்ளன. பல வெளிநாடுகளிலிருந்தும் இக் கோவிலுக்கு மக்கள் தினமும் திரண்டு வருவது குறிப்பிடத்தக்கது. (137)



யாழ். மாநகரசபை மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை தென்பகுதியில் இருந்து வந்திறங்கிய சிறியரக உலங்கு வானூர்த்தியையும் அதனை வீதியோரத்தில் நின்று மக்கள் பார்வையிடுவதனையும் காணலாம்.

(படம்:- பார்த்தீபன்)

# பதிவிருக்கப் பெட்டகம்

ஒரு புகழ்பெற்ற அரசியல் தலைவர் தன் நாயுடன் நடைப் பயிற்சிக்காக சென்று கொண்டிருந்தார்.

எதிரே வந்த முல்லா "என்ன கழுதையுடன் நடை போகிறீர்கள்?" என்று கிண்டலாகக் கேட்க தலைவருக்குக் கோபம் வந்து விட்டது.

"என்ன உனக்குக் கண் சரியாகத் தெரியவில்லையா? இது என் நாய்" என்றார்.

முல்லா தலைவரிடம் சொன்னார். "அது நாய் என்று எனக்குத் தெரியும். நான் கேள்வி கேட்டது அந்த நாயிடம்" என்றார்.

தலைவருக்கு தன்னைக் கழுதை என்று முல்லா பரிகாசம் செய்கிறார் என்று தெரிய சிறிது நேரம் தேவைப்பட்டது.

எல்லோரும் தன்னை தலைவா என்று மரியாதையுடன் அழைக்கையில் முல்லா கழுதை என்கிறாரே என்று உடனே வெகுண்டு, நீதிமன்றத்தில் முல்லா மீது வழக்கு தொடர்ந்தார்.

வழக்கை விசாரித்த நீதிபதி முல்லா ஒரு புகழ் பெற்ற தலைவரை கழுதை என்றழைத்தது தவறு என்றும் அந்தத் தலைவரிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கினார்.

முல்லா நீதிபதியிடம் ஒரு சந்தேகம் கேட்டார்.

"ஐயா நான் கழுதையைத் தலைவா என்றழைப்பதில் சட்டத்தில் ஏதாவது ஆட்சேபனை இருக்கிறதா?"

"இல்லை" என்றார் நீதிபதி.

சரி என்ற முல்லா அந்தத் தலைவரிடம் சென்று "தலைவா என்னை மன்னித்து விடுங்கள்" என்று சொல்லிவிட்டு நடந்தார்.

*** *** *** ***

புகழ்பெற்ற பிரபல ஓவியர் பிக்காஸோ, தன் வீட்டில் தனது நண்பர்களுக்கு விருந்தளித்துக் கொண்டிருந்தார். விருந்தெல்லாம் தடபுடலாக நடந்தது. எல்லோரும் மகிழ்ச்சியில் மிதந்து கொண்டிருந்தார்கள்.

விருந்துக்குப் பிறகு அனைவரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது வந்த நண்பர்களில் ஒருவர், பிக்காஸோ வீட்டுச் சுவர்களைக் கவனித்துவிட்டு, "உங்களுக்கு உங்கள் ஓவியங்கள் பிடிக்காதா? உங்கள் வீட்டில் உங்கள் ஓவியம் ஒன்றுகூட இல்லையே?" என்று கேட்டார். அதற்கு பிக்காஸோ, "எனக்கும் ஆசைதான். ஆனால் அவ்வளவு விலை கொடுத்து வாங்க எனக்குக் கட்டுப்படியாகாதே…" என்றார் அமைதியாக.

*** *** *** ***

இணையதளம் மூலம் பெண் பார்க்க விரும்பிய இளைஞன் ஒருவன், பலமுறை முயன்றும் ஒரு பெண்ணும் அவனுக்குச் சரியாக அமையவில்லை. இறுதியில் ஒரு திருமண புரோக்கரின் தொடர்பு இணையதளத்தின் மூலம் கிடைத்தது. அவரிடம் பேசினான்.

அதற்கு அவர் சொன்னார்: "20 வயதில் அழகிய பெண் இருக்கிறாள். சீதனம் 5 இலட்ச ரூபாதான் கிடைக்கும் "

"இவ்வளவுதானா?"

"25 வயதில் ஒரு பெண் இருக்கிறாள். 10 இலட்ச ரூபா சீதனம் கிடைக்கும்"

இளைஞன் கேட்டான்:

"50 வயதில் பெண் கிடைக்குமா? ஏனென்றால் எனக்குத் தேவை இப்போது 50 இலட்சம் ரூபா"

*** *** *** ***

மோரிகோ ரெல்லி, அருமையான ஆங்கில நாவலாசிரியரான அவர் திருமணத்தை மறுத்து வாழ்ந்து வந்தார். அவரது நெருங்கிய தோழி கேட்டாள்: "நீ ஏன் திருமணம் செய்து கொள்ளவில்லை?' என்று.

"நான் செல்லமாக ஒரு நாய், ஒரு கிளி, ஒரு பூனை ஆகியவற்றை வளர்க்கிறேன். அது போதும் ஒரு கணவன் செய்யும் வேலையை அவை செய்து முடித்து விடும்".

"எப்படி?"

"இப்படித்தான். நாய் காலை முழுவதும் குரைக்கும், கிளி பகல் முழுவதும் திட்டித் தீர்க்கும். பூனை இரவு முழுவதும் வெளியே போய்விடும்."

*** *** *** ***

* 1948இல் நமது பிரதமரின் பெயர் என்ன?

பிறந்தது முதலே தி.மு.ஜயரத்ன தான் 1948ல் ஒரு பெயர், 2014இல் ஒரு பெயரா இருக்க முடியும்?

* ஒரு காட்டுக்குள் ஒரு நாய் எவ்வளவு தூரம் ஓட முடியும்?

பாதி தூரம் தான்… அதற்குப் பிறகு, "காட்டை விட்டு வெளியே வந்து கொண்டிருக்கிறது…' என்று சொல்ல முடியுமே தவிர, காட்டுக்குள் என்று எப்படி சொல்ல முடியும்?

# சமூக அமைப்புக்களின் பங்களிப்பு அபிவிருத்திக்கு அவசியம்

## கிளிநொச்சி அரசாங்க அதிபர்




(கொழும்பு)

“சமூக மட்ட அமைப்புக்கள் ஒரு வலுவான அமைப்பாக இருக்க வேண்டும்” என கிளி ச்சி மாவட்ட அரசாங்க அதி ப திருமதி ரூபவதி கேதீஸ் ன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் எக்டட் நிறுவனத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள சமூக மட்ட அமைப்புக்களுக்கான ஒருங்கிணைந்த உள்ளக வலுவூட்டல் நிலையத்தின் தொடக்க விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

அபிவிருத்தி போன்ற பல்வேறு விடயங்களில் ஒவ்வொரு மட்ட அமைப்புக்களும் முன்னிலை வகிக்கவேண்டும்.

சமூக மட்ட அமைப்புக்களில் பிரதிநிதிகளாக இருப்பவர்களுக்கு தங்களுக்கு கிடைக்கின்ற சமூகம் சார்ந்த செய்திகளை அந்தந்த கிராமங்களுக்கு கொண்டுசெல்ல வேண்டிய பாரிய பொறுப்புள்ளது.

அதேபோன்று ஒவ்வொரு கிராமங்களின் செயற்பாடுகளையும் சமூக அமைப்புக்கள் மிகவும் வலுவுடையதாக வளர்த்தெடுக்க வேண்டும்.

அதனால் இதுபோன்ற வள நிலையங்களின் ஊடாக நன்மைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்றார். இந்நிகழ்வில் எக்டட் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் அன்ரூசற்றி, சமூக மட்ட அமைப்புக்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# மீள்புனரமைப்பு செய்யப்பட்ட விசுவமடு மத்தி நூலகம் திறப்பு

விசுவமடு மத்தி பொதுநூலகம் வாசகர்களினதும் இளைஞர்களினதும் இணைந்த உதவிகளுடன் மீள்புனரமைப்புச் செய்யப்பட்டு நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகம் இந் நூலகத்தை நாடா வெட்டி திறந்து வைத்தார்.

சிறப்பு விருந்தினர்களாக பூநகரி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ந.பிரபாகரன், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் எ.பிரதாபன், புதுக்குடியிருப்பு பிரதேச சபை செயலாளர் மிதிலைநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விசுவமடு மத்தி பொதுநூலகம் கடந்த காலத்தில் சுமார் 15ஆயிரத்திற்கும் அதிக நூல்களைக் கொண்டு வாசகர் களின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற நூலகமாகக் காணப்பட்டது.

இந்நிலையில் கடந்த யுத்த காலத்தில் இந்த நூலகம் சேதமடைந்துள்ளதுடன் பத்தாயிரம் வரையான நூல்களும் அழிவடைந்துள்ளன. இருப்பினும் எஞ்சிய ஐயாயிரம் வரையான நூல்கள் பூநகரி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலனால் பாதுகாக்கப்பட்டு நூலக நிர்வாகத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கசிந்தது ‘காஸ்’ 25 பேர் மருத்துவமனையில்

ஹோமாகம - கடுவான பிரதேசத்திற்கு அருகில் கடலுணவுகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட காஸ் கசிவினால் 25 பேர் வரை ஹோமாகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு தலைவலி, மயக்கம், வாந்தி போன்ற நோய்களே ஏற்பட்டுள்ளன. ஆபத்தான நிலையில் எவரும் இல்லை எனத் தெரியவந்துள்ளது.

# பேருந்து பயணக்கட்டண சீர் திருத்தம் பொது ஆய்வு நடத்த தீர்மானம்

தேசிய பேருந்து பயணக்கட்டண சீர் திருத்தம் தொடர்பான பொது ஆய்வு ஒன்றை நடத்த தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இதற்காக இலங்கையில் போக்குவரத்து துறையில் ஈடுபட்டுள்ள அனைத்து அரச நிறுவனங்களும் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக அதன் தலைவர் ரொஷான் குணவர்தன தெரிவித்துள்ளார்.

இதன்படி இந்த பொது ஆய்வில், தேசிய போக்குவரத்து சபை, ரயில் திணைக்களம், இலங்கை போக்குவரத்து சபை மற்றும் மாகாண போக்குவரத்து அதிகாரசபை ஆகியவற்றின் அதிகாரிகள் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

# தேசிய மின் கட்டமைப்புடன் இணைந்தது நுரைச்சோலை மின்சாரம்

(கொழும்பு)

நுரைச்சோலை அனல்மின்னுற்பத்தி நிலையத்தின் இரண்டாம் கட்ட மின்னுற்பத்தி தேசிய மின்சார கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.

மின்சாரத்துறை அமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே நுரைச்சோலை அனல்மின்னுற்பத்தி நிலையத்தின் முதல் கட்ட மின்னுற்பத்தி நடவடிக்கை தற்காலிகமாக ஸ்தம்பிதமடைந்துள்ளது.

இதனைச் சீர் செய்ய இரண்டு வார காலம் செல்லும் என்று மின்சாரத் துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் முதல் அதன் இரண்டாம் கட்ட உற்பத்திகள் தேசிய மின்சார கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பழுதடைந்திருந்த களனிதிஸ்ஸ மின்னுற்பத்தி நிலையம், தற்போது வழமைக்கு திரும்பி இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வாய்க்காலை புனரமைக்குமாறு கிராம மக்கள் கோரிக்கை

(வரணி)

வரணி கரம்பைக் குறிச்சி கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட திக்கில் குளத்திற்கு அருகாமையில் இருக்கும் வாய்க்காலை புனரமைத்துத்தருமாறு அப்பகுதி மக்கள் தென்மராட்சி பிரதேச செயலரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்த வாய்க்கால் நீண்ட காலமாக புனரமைக்கப்படாமையால் அப்பகுதி மக்க ளின் விளைச்சல் நிலங்களும் பாதிக்கப்படுவதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்,

இதுகுறித்து கிராம அலுவலர் விவசாயப் புணிப்பாளருக்கு தெரியப்படுத்தியுள்ள நிலையில் இவ்வாய்க்காலை கூடிய விரைவில் புனரமைத்து தருமாறும் இதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வரணிப்பகுதியில் இவ்வாறு பல வாய்க்கால்கள் நீண்டகாலமாக புனரமைக்கப்படாமையினால் போக்குவரத்து பிரச்சினை மற்றும் மலேரியா போன்ற தொற்று நோய்களும் ஏற்படக்கூடிய அபாயம் உள்ளதாகவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# வீட்டினுள் புதையல் தோண்டிய பெண் உட்படமூவர் கைது

வீட்டினுள் புதையல் அகழ முயற்சித்த பெண் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளது.

பதுளை, காலிஎல, அன்குடுவாவல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் புதையல் அகழ முயற்சித்த பெண் ஒருவர் உட்பட மூவர்ரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாரின் முற்றுகையின்போது புதையல் அகழ்விற்காக பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் பலாங்கொடை, மகவெலகந்த மற்றும் கலேவெல பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

# நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.தலைமைப் பொலிஸ் நிலையத்தினால் நடாத்தப்படும் நடமாடும் சேவை இன்று ஞாயிறு காலை 8.30 மணிக்கு யாழ்.கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ரொஹான் டயஸ் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் கண்பரிசோதனை கண்ணாடி வழங்களுடன் சுகாதார பரிசோதனை இடம் பெறும். ஒவ்வொரு கிராம அலுவலர்கள் பிரிவிலும் மிகவும் கஸ்டப்பட்ட குடும்பம் ஒன்றுக்கும் உலர் உணவும் வழங்கப்படவுள்ளது. (105)

# பகிரங்க ஏலவிற்பனை

வவுனியா நீதிவான் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான ஏராளமான பொருட்கள் எதிர்வரும் 22.02.2014 சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

ஏலவிற்பனை நாளின் அரைமணித்தியாலத்திற்கு முன்னர் பொருட்களை பார்வையிடலாம் ஏலத்தில் பொருட்களை பெற்றவர்கள் பணத்தை செலுத்தி பொருட்களை அப்புறப்படுத்தல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பொருட்களாக லுமாலா துவிச்சக்கரவண்டிகள், தண்ணீர் மோட்டார், மரவேலை இயந்திரம், காஸ் சிலிண்டர்கள், தையல் இயந்திரங்கள், தராசு, அம்பிளிவயர், ஒலிபெருக்கி, செற், குத்து விளக்கு, தொலைக்காட்சி பெட்டி ஆகியவை ஏல விற்பனை செய்யப்படவுள்ளன. (105)

# சிறுவர் துஷ்பிரயோகங்களை ஏற்றுக்கொள்ள முடியாது

## ஐ.தே.க.உறுப்பினர் நடிகை நதீஷா ஹேமமாலி

சிறுவர்கள் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என பிரபல நடிகையான நதீஷா ஹேமமாலி தெரிவித்துள்ளார். தென் மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடவுள்ள ஹேமமாலி மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் தனது தவறுகளை மறைப்பதற்காகவே மங்களசமரவீரவின் தனிப்பட்ட வாழ்க்கை பற்றி தேடுகிறது.

அரசாங்கத்தில் போதைப் பொருள் விற்பனையாளர்கள், பாலியல் துஷ்பிரயோக குற்றவாளிகள், கொள்ளையர்கள் உள்ளனர். அவர்களின் பிரச்சினைகளை மூடி மறைக்க மங்கள மீது குற்றம் சுமத்தப்பட்டு வருகிறது.

ஆணோ, பெண்ணோ அவர்கள் வயது வந்தவர்கள் என்றால் பலவந்தமின்றி காதல் தொடர்புகளை வைத்திருப்பதும் பாலியல் தொடர்புகளை வைத்திருப்பதும் தவறில்லை என்பதே எனது தனிப்பட்ட நிலைப்பாடு.

எனினும் நான் சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுவதை ஏற்றுக்கொள்வதில்லை. மங்கள சமரவீரவுடன் ஓரினச் சேர்கையில் ஈடுபட்டவர் என்று பிரசாரப்படுத்தி வரும் இளைஞர் ஒரு குழந்தையல்ல. அவர் ஒரு பிள்ளையின் தந்தை. அந்த இளைஞர் அரசாங்கத்தின் பொறியாக மாற்றப்பட்டுள்ளார்.


எவ்வாறாயினும் ஓரினச் சேர்கையாளர்களுக்கு எதிராக காலம் கடந்த சட்டத்தை பயன்படுத்தி தண்டனை வழங்குவதை எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றார்.

# பொதுக்கூட்டம்


யாழ்.கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் பொதுக்கூட்டம் இன்று காலை 10 மணிக்கு ஏ.எச்.ஜமால் மொஹிடீன் தலைமையில் யாழ். ஒஸ்மானியா கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.


சென்ற வருட அறிக்கையில் கடந்த கால செயற்பாடுகள் மற்றும் எதிர்கால நடவடிக்கை பற்றியும் விரிவாக ஆராயப்படுமென பொதுச் செயலாளர் ஆர்.கே.சுவர்கஹான் தெரிவித்துள்ளார். (105)

31. மிதுஷன் தனது எட்டாவது பிறந்தநினத்தை 2011ம் ஆண்டு கொண்டாடினான். எனின் மிதுஷன் பிறந்த ஆண்டு எது?
1) 2003 2) 2001 3) 2004

32. 

அருகில் உள்ள அட்டையை புள்ளிக்கோட்டின் வழியே மடித்தால் பெறப்படும் உரு எது என தெரிக.




33. 

இவ்இரு திண்மவடிவங்களையும் சேர்ப்பதால் பெறப்படும் வடிவம் எது?
1) சதுரமுகி 2) கனவுரு 3) நான்முகி


34. 3845 இல் உள்ள 8இன் பெறுமானம் யாது? 1) 800 2) 80 3) 8000

35. மணி 19:45ஐ காட்டும் சாதாரண நேரம் எது?
1) மு.ப. 7.45 2) பி.ப 7.45 3) பி.ப 9.45

36. நாள் ஒன்றின் பொழுதினை ஒழுங்கு முறையாக காட்டும் விடையின் கீழ் கோடிடுக.
1) இரவு - பகல் - மாலை - காலை
2) பகல் - இரவு - காலை - மாலை
3) காலை - பகல் - மாலை - இரவு

37. 


தரப்பட்ட உருவை B பக்கத்திலிருந்து பார்க்கும் போது எவ்வாறு தோன்றும்



❖ 38 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்குரிய விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக.

38. என்னை என்வீட்டில் கோமாதா என்று போற்றி வருகின்றனர். என் உறைவிடமும் நன்றாக உள்ளது. வேளை தவறாது பசும்புற்களை தருகின்றனர். நானும் அதற்கு நன்றிக்கடனாக பாலை தருவேன் நான் யார்?

.....................................

39. நாட்டிலே நடப்பதெல்லாம்
நல்ல பல செய்தியெல்லாம்
வீட்டிலே காட்டிவிடும்
விந்தையான பெட்டியிது

பாடலில் கூறப்படும் தகவல் தொடர்புசாதனம் எது?

.....................................

### வினாவிற்குரிய விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01. 3 | 07. 2 | 13. 1 | 19. 3 | 25. 3 | 31. 1 | 38. பசு |
| 02. 1 | 08. 1 | 14. 3 | 20. 1 | 26. 1 | 32. 2 | 39. தொலைக்காட்சி |
| 03. 2 | 09. 1 | 15. 2 | 21. 2 | 27. 2 | 33. 2 | |
| 04. 2 | 10. 2 | 16. 30 | 22. 1 | 28. 3 | 34. 1 | |
| 05. 1 | 11. 1 | 17. 3 மடங்கு | 23. 2 | 29. 3 | 35. 2 | |
| 06. 1 | 12. 3 | 18. 60 | 24. 3 | 30. 2 | 36. 3 | |
| | | | | | 37. 1 | |



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014

பகுதி - I
1.30 மணி

# கல்வி முரசு



❖ ஒரே கூட்டத்தை சேராத சொற்கள் இடம்பெறும் அடைப்பை தெரிவு செய்க.

01. 1) வைத்தியர், நோயாளி, தாதி 2) வியாபாரி, நுகர்வோர், உற்பத்தியாளர் 3) முகாமையாளர், அதிபர், சாரதி

02. 1) விண்மீன், நட்சத்திரம், அம்புலி 2) இன்னல், துன்பம், வேதனை 3) சாகரம், ஆழி, பரவை


❖ பழமொழிகளுக்கு பொருத்தமான கருத்தினை எழுதுக.


03. அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி
1) ஆராய்ந்து செய் 2) முன்மாதிரி 3) வீண்பெருமை


04. இரக்கப்பேனாலும் சிறக்கப்போ
1) இரக்கப்படுதல் 2) வறுமையில் செம்மை 3) தாளம் போடுதல்


05. குற்றம் பார்க்கின் சுற்றமில்லை
1) உறவினரை குறை கூறக்கூடாது. 2) இறைவனின் மகிமை 3) மனசாட்சி உறுத்தும்.

❖ 6ஆம், 7ஆம் வினாக்களில் இடைவெளிக்கு பொருத்தமான உருவின் கீழ் கோடிடுக.

06. 



07. 



❖ பாடலின் உதவியுடன் 8ஆம், 9ஆம் வினாக்களுக்கு விடை தருக.

குளத்தில் தாமரை மலர்கள் மலர்ந்தனவே
பூவின் நறுமணம் திசையெங்கும் பரவியதே
வீசிய காற்று குளிரைத்தரவே
எம் உள்ளம் அசைந்ததே

08. இப்பாடலில் கூறப்படுவது.
1) தாமரை மலர்கள் பற்றி
2) எம் உள்ளம் பற்றி
3) காற்றின் சிறப்புப் பற்றி

09. வீசியக்காற்று குளிரைத்தரவே என்பதன் கருத்து யாது?
1) வீசிய குளிர்ச்சியான காற்று
2) குளத்தில் நிறைந்த நீர்
3) பூக்களின் மணமுள்ள காற்று

10. சதுரவடிவ கடதாசி ஒன்றை இரண்டாக மடிக்கும் போது தோன்றாத வடிவம் எது?
1) ▭ 2) □ 3) △

11. இருபத்தொன்பது என்பதை உரோமன் இலக்கத்தில் எழுதினால்?
1) XXIX 2) XXIV 3) XXXI


12. 'தினமும் எட்டு மணி நேரம் உறங்குங்கள்' இது ஓர்
1) அறிவித்தல் 2) அறிவுறுத்தல் 3) அறிவுரை

13. அழகிய, நீண்ட, உயர்ந்த என்பன
1) அடைமொழிகள் 2) வினைச்சொற்கள் 3) இணைமொழிகள்

14. 
இக்குறியீடு குறிப்பது.
1) கவனமாக கையாளவும்
2) மீள் சுழற்சிக்கு உட்படுத்தக்கூடியது
3) உடையக்கூடியது

15. W.W.W. என்பதன் விரிவாக்கம்.
1) இணையத்தளம் 2) வையகவிரிவுவலை 3) பதிவேற்றம்

❖ பண்ணை ஒன்றில் உள்ள பிராணிகளின் எண்ணிக்கை பற்றிய விபரம் வட்ட வரைபில் காட்டப்பட்டுள்ளது.




16. பண்ணையில் உள்ள பிராணிகளின் மொத்த எண்ணிக்கை 120 எனின் பண்ணையில் உள்ள ஆடுகள் எத்தனை?
..............................

17. பன்றியின் எண்ணிக்கையை போல் எத்தனை மடங்கு கோழிகள் பண்ணையில் உள்ளன?
..............................

18. பண்ணையில் உள்ள பன்றிகளின் கால்களின் மொத்த எண்ணிக்கை யாது? ..............................

❖ கீழே உள்ள கணித செய்கையில் அடைப்புக்களில் உள்ள பெறுமதிக்கு பதிலாக பயன்படுத்தக்கூடிய அடைப்பை தெரிவு செய்க.

19. 24 + [8 + 5] = 37 1) [4 + 6] 2) [6 × 3] 3) [21 - 8]

20. [38 - 14] + 16 = 40 1) [8 × 3] 2) [12 + 9] 3) [36 ÷ 2]



❖ தரப்பட்ட இலக்கங்களின் வரிசையை அவதானித்து 21ஆம், 22ஆம் வினாக்களுக்குரிய விடையை தெரிந்து கோடிடுக.

3 5 8 5 1 9 5 4 3 8 5 1 2 8 5 4 9

21. ஒரு தடவை மாத்திரம் எழுதப்பட்ட இலக்கம் எது? 1) 1 2) 2 3) 4

22. இலக்கம் 8ஐ அடுத்து இலக்கம் 5 எத்தனை தடவைகள் வந்துள்ளது?
1) 3 2) 5 3) 4

❖ பின்வரும் வினாக்களில் தடித்த எழுத்தில் காணப்படும் சொற்களின் பொருளை தரும் விடையை தெரிந்து கோடிடுக.

23. **பரவை** மேலாக அழகிய **பறவை** பறந்து சென்றது.
1) வானம், புள் 2) கடல், பட்சி 3) காடு, பட்சி

24. **காட்டின்** மத்தியில் இருந்த குளத்தில் **அழகிய** மலர்கள் மலர்ந்திருந்தன.
1) அடவியின், மணமுள்ள 2) கானகத்தின், மதுர 3) வனத்தின் , வனப்பு

❖ தரப்பட்ட பந்தியை வாசித்து 26 - 28 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.


அதிகாலை வேளையில் சூரியன் ..........A.......... வானில் இருந்து தனது பொற்கிரணங்களை பரப்பிக் கொண்டு மெல்ல மெல்ல எழுந்து வந்தான். கதிரவனின் வரவைக் கண்ட ..........B.......... கா.... கா... கூ... கூ... என குரல் எழுப்பிக்கொண்டு பறந்தன. முகம்மலர்ந்த மலர்களில் இருந்து வாசனை ..........C.......... என வீசியது.

25. A இடைவெளிக்கு பொருத்தமான சொல் எது?
1) மேற்கு 2) வடக்கு 3) கிழக்கு

26. B இடைவெளிக்கு வரவேண்டிய சொல் எது?
1) காகங்களும், குயில்களும் 2) கொக்குகளும், காகங்களும் 3) கிளிகளும், குயில்களும்

27. C இடைவெளிக்கு வரவேண்டிய சொல் எது?
1) சல சல 2) கம கம 3) கல கல

❖ A,B,C,D ஆகிய நான்கு ஒரே அளவான மெழுகுதிரிகள் ஒரே நேரத்தில் ஒளிர வைக்கப்பட்டு மூன்று மெழுகுவர்த்திகள் வெவ்வேறு அளவுடைய கண்ணாடிக் குவளைகளில் மூடப்பட்டது.




28. இவற்றில் முதலில் அணையும் மெழுகுவர்த்தி எது?
1) A 2) B 3) C

29. நீண்ட நேரம் ஒளிரக்கூடிய மெழுகுவர்த்தி எது?
1) B 2) C 3) A

30. மாலதியின் மாமன் தேவன் ஆவான் இந்த உறவுமுறைப்படி சரியான விடை
1) தேவனின் அண்ணாவின் மகள் மாலதி
2) மாலதியின் தாயின் தம்பி தேவன்
3) மாலதியின் தாயின் தங்கையின் கணவர் தேவன்

# ஆனைவிழுந்தான் வயல் காணிகளை பகிர்ந்தளிக்க சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தெரிவிப்பு



ஆனைவிழுந்தான் குளத்தின் கீழ் வருகின்ற வயல் காணிகளை அந்த மக்களுக்கு பகிர்ந்தளிக்க சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமறக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

பிரதேச கமக்கார அமைப்புகளின் வேண்டுகோளுக்கிணங்க ஆனைவிழுந்தான் பிரதேசத்திற்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், கிளிநொச்சி மாவட்ட கமநல சேவைகள் நிலைய உதவி ஆணையாளர் தயாரூபன், கரைச்சி பிரதேச செயலக உதவித் திட்டப்பணிப்பாளர் அமல்ராஜ் ஆகியோருடன் விஜயம் மேற்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆனைவிழுந்தான் கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோருடன் அண்மையில் கலந்துரையாடிய பின்னரே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இங்கு இனம் காணப்பட்டுள்ள 400 ஏக்கர் வயல் காணிகளும் இந்தப் பிரதேச வாழ் மக்களுக்கே நியாயமான முறையில் பகிர்ந்தளிக்கப்படும் அதற்கு முன்னதாக பெரும் மரங்கள் காணப்படுவதால் வனவள திணைக்களத்தின் நடைமுறைக்கு அமைவாகவும் அரச காணிகள் வழங்கல் தொடரபான சட்ட விதிமுறைகளுக்கு ஏற்பவும் மக்களுக்கு சட்ட ரீதியாக வழங்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அவ்வாறு சட்டரீதியாக மக்களுக்கு வயல் காணிகள் வழங்கப்பட்ட பின்னர் நீர்ப்பாசன குளமாக ஆனைவிழுந்தான் மாற்றப்படுவதால் அதனை நீர்ப்பாசனத் திணைக்களத்தின் மூலம் புனரமைக்கவும் முடியும் எனவும் தெரிவித்தார்

இவ்விஜயத்தின் போது கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் சபாநாயகம், ஆனைவிழுந்தான் கமக்கார அமைப்பின் தலைவர் செல்வராஜ், செயலாளர் லக்கினேஸ்வரன் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# ஹிருணிகாவை தோற்கடிக்க தேர்தல்களத்தில் பிரபல பாடகி

எதிர்வரும் மேல் மாகாண சபைத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடும் ஹிருணிகா பிரேமச்சந்திரவை தோற்கடிப்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவினால் ஜின்ஜர் வைட் என்ற பிரபல பாடகியை களமிறக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை துமிந்த சில்வாவின் கோரிக்கைக்கு அமையவே தான் அரசியலுக்கு வந்துள்ளதாக பிரபல பாடகர் நாமல் உடுகமவின் மனைவியான ருவாந்தி மங்களா கூறியுள்ளார்.

இதனடிப்படையில் ஹிருணிகாவுக்கு எதிராக ஜின்ஜர் மற்றும் ருவந்தி ஆகியோரை தேர்தலில் களமிறக்கி பிரசாரங்களை ஆரம்பித்த பின்னர், தமது குடும்ப ஊடக வலையமைப்பின் ஊடாக பெரும் பிரசாரங்களை முன்னெடுக்க துமிநத சில்வா தயாராகி வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# கொழும்பில் 25 நாட்களில் 293 பேருக்கு டெங்கு நோய்

(கொழும்பு)

கொழும்பு நகரில் டெங்குநோய் ப்ரவல் அதிகரித்துள்ளது. இந்த மாதத்தில் 25 நாட்களுக்குள் 293 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன் டெங்கு நோயால் கொழும்பைச் சேர்ந்த 4 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த நிலையில் கொழும்பில் டெங்கு நோயை தடுக்கும், வகையில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி முதல் விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை நடாத்தவிருப்பதாக கொழும்பு மாநகர சபை தெரிவித்துள்ளது.

# வறிய குடும்பத்திற்கு தையல் இயந்திரம்



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் வறிய குடும்பம் ஒன்றின் சுயதொழில் முயற்சிக்கென தையல் இயந்திரம் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி தையல் இயந்திரம் கிளிநொச்சி செல்வாநகரில் வசிக்கின்ற வறிய குடும்பம் ஒன்றிற்கு வழங்கப்பட்டுள்ளது.

இத் தையல் இயந்திரத்தினை வட்டு இந்து வாலிபர் சங்க உறுப்பினரும் அமெரிக்காவில் ஆங்கில பாடத்தில் PHD மேற்படிப்பினை மேற்கொண்டு வரும் ம.திருவரங்கன் வழங்கி வைத்தார். (54)

# பொலிஸ் ஆணைக்குழுவுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும்

## ஆணையாளர் கோரிக்கை

பொலிஸ் ஆணைக்குழுவிற்கு கூடுதல் அதிகாரங்கள் தேவைப்படுவதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் ஆணையாளர் சேனக வெல்கம்பாய தெரிவித்துள்ளார்.

18 ஆவது திருத்தச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் போதுமானதல்ல என அவர சுட்டிக்காட்டியுள்ளார்.

பொலிஸாரால் பொது மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு பொலிஸ் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற போதிலும், அதற்கான சட்ட 'அதிகாரம் வழங்கப்படவில்லை.

17 ஆவது திருத்தச் சட்டம் இரத்து செய்யப்பட்டு 18 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் பொலிஸ் ஆணைக்குழு உருவாககப்பட்டுள்ளது. எனினும் தற்போதைய சட்டங்களின் மூலம் பொலிஸ் ஆணைக்குழுவிற்கு போதியள்வு அதிகாரங்கள் கிடையாது.

பொலிஸாரால் பொதுமகன் ஒருவருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என நிரூபிக்கப்பட்டாலும் அவருக்கு நட்ட ஈடு வழங்க பொலிஸ் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் கிடையாது.

நட்டஈடு வழங்குவதற்கு தற்போதைய சட்டத்தில் இடமில்லை நட்டஈடு வழங்கப்படக் கூடிய வகையில் சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.



உத்தேச சட்டமொன்று உருவாக்கப்பட்டுள்ளது. இது அமைச்சரவையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட உள்ளது.

முறைப்பாடு தொடர்பில் விசாரணை நடாத்தும் அதிகாரம் மட்டுமே பொலிஸ் ஆணைக் குழுவிற்கு காணப்படுவதாக் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஆசிரியர் பயிற்சிக்கு படிவங்கள் விநியோகம்

2014ஆம் ஆண்டிற்கான ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவங்களை விநியோகிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் 31ஆம் திகதி வெளியிடப்படும் என கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதன்படி 2014ஆம் ஆண்டிற்கான ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன.

# முதியோர் சங்கக்கூட்டம்

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கப் பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் நேற்றுச் சனிக்கிழமை கோப்பாய் வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்றது.

இந்தப் பொதுக்கூட்டத்திற்கு கிராமத்திலுள்ள முதியவர்கள் கலந்துகொண்டனர். (85)

# கொலை செய்யக் கூலிக்குழு; பொலிஸாரால் காலியில் மூவர் கைது

நீர் கொழும்பு சிறைச்சாலையில் இருக்கும் கைதிகளின் தொலைபேசி மூலம் இயக்கி வநத கூலிக்கு கொலை செய்யும் குழுவைச் சேர்ந்த மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காலி வட்டரெக்க பிரதேசத்தில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிறைச்சாலையில் உள்ள கைதிகளினால் வழி நடாத்தப்பட்டு வரும் இவர்கள் நாட்டின் பல பிரதேசங்களுக்குச் சென்று கூலிக்கு கொலை செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளனர்

ஒரு இலட்சம் ரூபா அல்லது இரண்டு இலட்சம் ரூபா பணத்தைக் கொடுத்தால் எந்த பிரதேசத்திற்கு சென்றும் கொலை செய்யவேண்டிய நபரை இவர்கள் கொலை செய்து வந்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மாத்தறை துடாவே பிரதேசத்தில் விலங்கு பண்ணை ஒன்றின் உரிமையாளரான மஞ்சு லக்ஷான் என்பவர் கடந்த 11 ஆம் திகதி சுட்டுக்கொலை செய்யப்பட்டார்.

2 இலட்சம் ரூபா பணத்தை பெற்றுக்கொண்டு சந்தேக நபர்கள் இந்த கொலையைச் செய்துள்ளனர்.

ஹெரோயின் போதைப் பொருள் விற்பனையாளர் ஒருவரை பொலிஸார் கைது செய்திருந்தனர். அவரைக் கைது செய்ய பண்ணையின் உரிமையாளர் பொலிஸாருக்கு தகவல் வழங்கினார் என்ற சந்தேகத்தின் பேரில் இந்தக் கூலிப்படையினரால் அவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

எனினும் விலங்கு பண்ணை உரிமையாளரை கொலை செய்ய 2 இலட்சம் ரூபா பேரம் பேசப்பட்டுள்ளதுடன் அதில் 40 ஆயிரம் ரூபா மட்டுமே வழங்கபட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# குறவர் இனத்தவர்களுக்கு தேசிய அடையாள அட்டை

(கொழும்பு)


இலங்கையில் குறவர் இன மக்களுள் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு விசேட அடையா அட்டைகளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது என வனவளத்துறை அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்ஷா தெரிவித்துள்ளார்.

குறித்த இனத்தவர்களுடன் பேசி இந்த தீர்மானம் மேற்கொளளப்பட்டுள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று மிருகங்களை காட்சிப்படுத்துவதுடன் சாத்திரம் பார்த்து பிழைப்பு நடாத்தும் குறித்த மக்கள், நீண்ட காலத்துக்கு முன்னர் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்தவர்களாவர் என அவர் தெரிவித்துள்ளார்.

# பெண்கள் முன்னேறாவிட்டால் இந்தியா வல்லரசாக முடியாது

## – ராகுல் காந்தி



பெண்கள் முன்னேறாவிட்டால் இந்தியா வல்லரசாக முடியாது என்று காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையை தயாரிப்பது தொடர்பாக நாடு முழுவதும் பல்வேறு தரப்பினரின் கருத்துகளை ராகுல் காந்தி கேட்டறிந்து வருகிறார்.

அதன்படி மகாராஷ்டிர மாநிலம் சேவாகிராமத்தில் உள்ள காந்தி ஆச்சிரமத்தில் நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

இந்தியாவில் 50 சதவீதம் பேர் பெண்கள். அவர்கள் முன்னேறாவிட்டால் நாட்டில் எல்லாமே பாதிதான். அந்த வகையில் பாதி வலிமை, பாதி பெருமை, பாதி சக்திதான் கிடைக்கும். இந்தியா வல்லரசாக முடியாது.

இதேபோல் கோடிக்கணக்கான நமது இளைஞர்களுக்கு முறையான வேலைவாய்ப்புக்களை வழங்க வேண்டும் அவர்கள் முன்னேறவில்லை என்றாலும் இந்தியா வல்லரசாக முடியாது.

இப்போதைய நடைமுறைகளின்படி காங்கிரஸ், பா.ஜ.க உள்ளிட்ட கட்சிகள் தங்களது வேட்பாளர்களைத் தாங்களே தேர்ந்தெடுக்கின்றன. அங்கு தான் ஊழலின் ஆணிவேர் ஆரம்பமாகிறது. இதற்குப் பதிலாக வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் பணியில் மக்களே நேரடியாகப் பங்கேற்றால் 50 சதவீத ஊழல் ஒழிந்துவிடும். என்றார்.




# உலகத்தை குடும்பமாக மாற்ற கடவுள் தந்த பரிசு



உலகத்தையே குடும்பமாக மாற்றியுள்ள இன்டர்நெட் கடவுள் தந்த பரிசு என பாப்பாண்டவர் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

கத்தோலிக்க தேவாலயங்களில் கடந்த 1967ஆம் ஆண்டு முதல் உலக தொலைதொடர்பு தினம் கொண்டாடப்பட்டுவருகிறது.


இதனை முன்னிட்டு நேற்று முன்தினம் பாப் பிரான்சிஸ் வெளியிட்டுள்ள தகவலில், இன்டர்நெட் என்பது கடவுளின் பரிசு, அதன் மூலம் உலகமே ஒரு குடும்பம் போல் உருவாகிறது.

ஆனால் அதை வணிக ரீதியாகப் பயன்படுத்துவது சாத்தானின் வேலை. இவற்றை மக்கள் சுய விருப்பு வெறுப்புகளுக்காகப் பயன்படுத்துகிறார்கள், ஒருவரையொருவர் திட்டிக் கொள்கிறார்கள்.

இன்டர்நெட் மூலம் ஏராளமான தகவல்களை அறிந்துகொள்ள முடியும். ஆனால் சமூக வலைத்தளங்களின் மூலம் பிரச்சினைகள் உருவாகின்றன, இது ஏற்புடையதல்ல என்று தெரிவித்துள்ளார்.

9 மொழிகளில் டுவிட்டர் கணக்கை வைத்துள்ள பிரான்சிஸை, சுமார் ஒரு கோடிக்கும் அதிகமான மக்கள் பாலோ செய்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தப்பினார் "விநாயகர்"



உருவம் பொறிக்கப்பட்ட ஆடவர்களின் காற்சட்டை வகைகள் விளம்பரப்படுத்தப்பட்டிருந்தன.

எதிர்ப்புகளைத் தொடர்ந்து விநாயகர் உருவம் பதிக்கப்பட்ட காற்சட்டை வகை விளம்பரத்தை அமெரிக்க நிறுவனம் நீக்கியுள்ளது.

அமெரிக்காவின் சியாட்டில் நகரைத் தலைமையிடமாகக் கொண்டு அமேசான்.கொம் என்ற இணையதள நிறுவனம் இயங்கி வருகின்றது.

இந்த நிறுவனத்தின் இணையதள விற்பனைப்பிரிவில் இந்து மதக் கடவுளான விநாயகரின் உருவம் பொறிக்கப்பட்ட ஆடவர்களின் காற்சட்டை வகைகள் விளம்பரப்படுத்தப்பட்டிருந்தன.

இவற்றின் பின்புறங்களிலும், கால்பகுதிகள் மற்றும் காலுறைகளிலும் விநாயகக் கடவுளின் உருவம் பொறிக்கப்பட்டிருந்தது. இந்துக்களிடையே கோபத்தை எழுப்பியது.

கடுமையான எதிர்ப்புக்குப் பின்னர் இத்தகைய விளம்பரங்கள் அந்த இணையதளத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளன.

# மனநலம் பாதிக்கப்பட்டவருக்கு பாகிஸ்தானில் மரணதண்டனை தீர்ப்பு

பாகிஸ்தானில் மனநலம் பாதிக்கப்பட்ட நபர் ஒருவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தான் வாழ் இங்கிலாந்து நாட்டவரான முகமது அஸ்கர், இஸ்லாமிய மதத்தை இழிவுபடுத்தும் வகையில் கடிதம் எழுதியதாக கடந்த 2010ஆம் ஆண்டு ராவல்பிண்டியில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

இவ்வழக்கு விசாரணையின் போது, அஸ்கர் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்றும், உண்மையில் இவ்வழக்கு சொத்துப்பிரச்சினை தொடர்பானது என்றும் அவரது வழக்கறிஞர் வாதாடினார்.

இங்கிலாந்து மருத்துவமனை மருத்துவருக்கு இது தொடர்பாக கடிதம் எழுதியிருந்தார். ஆனால், அஸ்கர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டதால் அவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

மனநிலை பாதிக்கப்பட்ட அஸ்கர், இங்கிலாந்தின் எடின்பர்க் நகரில் சிகிச்சை பெற்று விட்டு 2010ஆம் ஆண்டு பாகிஸ்தான் திரும்பினார். பின்னர் அவரது வீட்டில் வாடகைக்கு குடியிருந்தவருடன் பிரச்சினை ஏற்பட்டது. அப்போது அவர் மதத்தை இழிவுபடுத்தியதாக புகார் அளிக்கப்பட்டது என்று அஸ்கரின் வழக்கறிஞர் குறிப்பிட்டார்.

மனநிலை பாதிக்கப்பட்டவருக்கு மரணதண்டனை விதித்திருப்பது பாகிஸ்தானில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அவருக்கு தேவையான உதவிகள் செய்யப்படும் என்று இங்கிலாந்து தூதரகம் தெரிவித்துள்ளது. அஸ்கரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று சர்வதேச பொதுமன்னிப்புச் சபை கேட்டுக்கொண்டுள்ளது.



அஸ்கருக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனையை எதிர்த்து மேல் முறையீடு செய்யப்போவதாகவும், சிறையில் அஸ்கரின் பாதுகாப்பு மற்றும் மனநிலை குறித்து கவலைப்படுவதாகவும் வழக்கறிஞர் தெரிவித்தனர்.

பாகிஸ்தானில் கடுமையாக மதச்சட்டங்கள் அமுலில் இருப்பதால், ஏராளமானோர் இச்சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இருப்பினும் மத நிந்தனை குற்றங்களுக்கு மரணதண்டனை நிறைவேற்றுவது மிகவும் குறைவு. இந்தச் சட்டங்கள், சிறுபான்மை மக்களை குறிவைத்து சுயலாபத்துக்காக தவறாக பயன்படுத்தப்படுவதாக மனித உரிமை அமைப்புகள் குற்றஞ்சாட்டுகின்றன.

# தேர்தலில் தி.மு.க தானாகவே தோற்றுவிடும்

## மு.க. அழகிரி



திராவிட முன்னேற்றக்கழகம் தேர்தலில் தானாகவே தோற்றுப் போய்விடும் என தி.மு.க. முன்னாள் உறுப்பினர் மு.க. அழகிரி தெரிவித்துள்ளார். தி.மு.க.வில் தென்மண்டல அமைப்பு செயலாளராக இருந்து வந்த மு.க. அழகிரி கட்சியில் இருந்து நேற்று முன்தினம் தற்காலிக நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

கட்சி விரோத நடவடிக்கையில் ஈடுபட்டதால் அவர் மீது இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தி.மு.க.பொதுச் செயலாளர் அன்பழகன் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி மு.க.அழகிரி தெரிவிக்கையில்:

கட்சியில் இருந்து என்னை ஏன் நீக்கினார்கள் என்றே எனக்கு தெரியவில்லை.

மதுரையில் சிலர் மீது சாதியை சொல்லி வழக்குப்பதிவு செய்யப்பட்ட சம்பவத்திற்கு நான் எப்படி பொறுப்பாக முடியும். ஒருவர் சாதியை சொல்லி திட்டியது உண்மை என்றால், அவர புகார் செய்ய வழி இருக்கும் போது புகார்தான் செய்வார்.

என்னை கட்சியில் இருந்து நீக்கியபின் எனது ஆதரவாளர்கள், தொண்டர்கள் அதிக பலத்துடன் இருக்கிறார்கள். என் நிலைப்பாடு குறித்து வரும் 30 ஆம் திகதி மதுரை ராஜாமுத்தையா மன்றத்தில் நடக்கும் பிறந்தநாள் விழாவில் தெரிவிப்பேன்.

இன்றையதினம் மதுரையில் தொண்டர்களைச் சந்தித்துப்பேசுவேன். அதுவரை அமைதியாக இருக்கவும் அறிவுறுத்தி உள்ளேன். தி.மு.க.வில் என்ன நடக்கிறது என்றே தெரியவில்லை.

எனது ஆதரவாளர்கள் மீது மட்டும்தான் நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது. இது ஏன் என்று எனக்கு புரியவும் இல்லை. தெரியவும் இல்லை.

இதுபற்றி நான் தலைவர் கருணாநிதியை சந்தித்துப் பேசினேன். ஆனால் அவர் எனக்கு இது தொடர்பாக எதுவுமே சொல்லவில்லை. ஆனால் நான் பேசி விட்டு சென்ற உடன் என்னை நீக்கி இருக்கிறார்கள்.

மு.க.ஸ்ராலினை நான் தலைவராக ஏற்க மாட்டேன் என்று ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். இப்போதும் சொல்கிறேன். அவரை ஒரு போதும் தலைவராக ஏற்க மாட்டேன் என்றார்.

# முதியோர் இல்லத்தில் தீ விபத்து

## கனடாவில் 31 பேர் பலி



கனடாவில், முதியோர் இல்லத்தில் ஏற்பட்ட தீ விபத்தில், 31 பேர் உயிரிழந்துள்ளனர். கனடா நாட்டின், கியூபெக் நகரில், முதியோர் இல்லத்தில் 60இற்கும் அதிகமான முதியவர்கள் தங்கியிருந்தனர். நேற்று, முன்தினம் அதிகாலை, இந்த இல்லத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் முதியோர்கள் சிக்கிக் கொண்டனர்.

இங்கு இருந்தவர்களில் ஐந்து பேர் மட்டுமே நடக்கக்கூடிய நிலையில் இருந்தனர். ஏனையவர்கள் 85 வயதை கடந்தவர்கள் இவர்களில் பெரும்பாலானோர், சக்கர நாற்காலி மூலம் தான் நடமாடி வந்தனர். தீ விபத்தில், முதியோர் இல்லமே, நொறுங்கி விழுந்து விட்டது. இது வரை,ஐந்து சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன் 31 பேர் இந்த விபத்தில் இறந்துள்ளனர். கடும் பனி பொழிவால், மீட்பு பணி மெதுவாக நடைபெற்றுவருகின்றது.

# நரமாமிச எலிகளுடன் பிரித்தானியா வரும் கப்பல்



நர மாமிசம் சாப்பிடும் கொடூர எலிகளுடன் பிரித்தானியாவை நோக்கி மிகப்பெரிய கப்பல் ஒன்று வந்து கொண்டிருக்கிறது.

கடந்த 1976ஆம் ஆண்டில் யூகோஸ்லோவியாவில் தி லியோ போவ் ஆர் லோவா என்ற பயணிகள் சொகுசு கப்பல் கட்டப்பட்டது.

இது கனடா நாட்டின் துறைமுகத்துக்கு வந்தபோது கப்பலின் உரிமையாளர் கடும் நிதி நெருக்கடி ஏற்பட்டு கடனில் தத்தளித்தார்.

கப்பல் மாலுமிகள் மற்றும் ஊழியர்களுக்கு அவரால் சம்பளம் வழங்க முடியவில்லை. அதைத் தொடர்ந்து அக்கப்பல் டொமினிகன் குடியரசு நாட்டை சேர்ந்தவருக்கு 36 இலட்ச ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது.

பல பிரச்சினைகளுக்கு பின்பு தனது பயணத்தை தொடங்கிய அக்கப்பல் புயலில் சிக்கி சேதமடைந்தது. எனவே அதை கடந்த 2012ஆம் ஆண்டிலேயே உடைக்க முடிவு செய்யப்பட்டது.

அத்திலாண்டிக் கடலில் பயணம் செய்யும் அக்கப்பல் இங்கிலாந்தை நோக்கி வருகிறது. அதை அங்கு நிறுத்தி வைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக கப்பல் இயங்காமல் நின்றதால் அதில் நூற்றுக்கணக்கான எலிகள் இருக்கின்றன. அவை உணவுக்காக ஒன்றையொன்று கடித்து சாப்பிட்டு இராட்சத அளவில் கொழுத்துள்ளன.

கப்பல் இங்கிலாந்துக்கு வரும் பட்சத்தில் அவை ஊருக்குள் புகுந்து மக்களை கடித்தும் எலிகள் மூலம் மக்களுக்கு நோய் பரவும் அபாயம் உருவாகும் என நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# நாடு தழுவிய பகிஷ்கரிப்பு அரச மருத்துவர்கள் முஸ்தீபு

(கொழும்பு)

தமக்குரிய சேவைப் பிரமாணக்குறிப்பை அமுல்படுத்தாத காரணத்தால் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடு தழுவிய ரீதியில் எதிர்வரும் 30 ஆம் திகதி அடையாள பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாக அரச மருத்துவ உத்தியோகத்தர் சங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக சங்கத்தின் நிர்வாக உறுப்பினர் டாக்டர் நவின் டி சில்வா தெரிவித்துள்ளதாவது,

கடந்த 2006 ஆம் ஆண்டு 6 ஆம் இலக்க சுற்று நிருபத்தின் படி சேவைப் பிரமாணக் குறிப்பை எவ்வித தாமதமுமின்றி அமுல்படுத்த வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது.

எனினும் இந்தக் குறிப்பு அமுல்படுத்தப்படாமையால் பதவியுயர்வு பெறுவோர், மேலதிக கொடுப்பனவு, விடுமுறைக் கொடுப்பனவு, ஆட் சேர்ப்பு மற்றும் வருடாந்த இட மாற்றம் என்பன முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

நிதியமைச்சு, பொதுநிர்வாக அமைச்சு, சுகாதார அமைச்சர் ஆளணி ஆணைக்குழு, சம்பள ஆணைக்குழு என்பன சேவை பிரமாணக் குறிப்பை அமுல்படுத்த அனுமதியளித்த போதிலும், பொதுச்சேவை ஆணைக்குழு இதற்கு அனுமதி யளிக்க வில்லை.

கடந்த வருடம் நவம்பர் மாதம் நாலாம் திகதி நாடாளாவிய ரீதியில் பணிப்பகிஷ் கரிப்பை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தோம். எனினும் நிதியமைச்சின் செலாளர் பி.பி. ஜயசுந்தர எம்முடன் தொடர்பு கொண்டு இந்த வேலை நிறுத் தத்தைக் கைவிடுமாறு ஜனாதி பதி கேட்டுள்ளதாகவும், இந்தப் பிரச்சினை தீர்க்கப்படுமெனத் தெரிவித்தாகவும் எம்மிடம் கூறினார். இதற்கமைய எமது பகிஷ்கரிப்பு நடத்தப்படவில்லை.

எனினும் எதிர்வரும் 30 ஆம் திகதி நாடாளாவிய ரீதியில் அடையாள பணிப்பகிஷ்கரிப்பு மேற்கொள்ளவுள்ளோம். இந்தப் பணிப் பகிஷ்கரிப்பு மூலம் மகரகம புற்றுநோய் வைத்தியசாலை, காஸ்ரல் டி சொய்சா மகப்பேற்று மருத்துவமனைகள், சீமாட்டி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலை என்பன பாதிக்கப்படமாட்டாது. தவிர அனைத்து அரச வைத்தியசாலைகள், மருத்துவ நிலையங்கள், வெளி நோயாளர் பிரிவு, கிளினிக்குகள் என்பன கடுமையாகப் பாதிக்கப்படும். எனினும் அவசர சத்திரசிகிச்சைப் பிரிவில் பாதிப்பு ஏற்படாது.

எமது அடையாள பணிப்பகிஷ்கரிப்பிற்கு அரச பொதுச் சேவை ஆணைக்குழு பொறுப்புக்கூறாவிடின் எமது பணிப்பகிஷ்கரிப்பு விரிவாக்கம் பெறுமெனவும் அவர் தெரிவித்தார்.

# விழிப்புணர்வு ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

'புகைத்தல் அற்ற ஆரோக்கிய வாழ்வு' என்னும் தொனிப்பொருளில் புகைத்தலுக்கு எதிரான விழிப்புணர்வு ஊர்வலம் மன்னாரில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எஸ்.என். சில்றோய் தலைமையில் அப்பணிமனைக்கு முன்பாக ஆரம்பமான ஊர்வலம் மீண்டும் பணிமனையை வந்ததடைந்தது.

இதில் கலந்து கொண்டவர்கள் புகைத்தலுக்கு எதிராகப் பதாகைகளைத் தாங்கியிருந்தனர்.

# இலங்கைக்கு எதிராக சர்வதேச சமூகத்தை திருப்ப முயற்சி

## அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

நாட்டின் எல்லைக்கு அப்பால் உள்ள புலிகள் இலங்கையில் ஈழ இராஜ்ஜியத்தை அமைப்பதற்கு கனவு கண்டு வருகின்றனர். அதற்காக சர்வதேச சமூகத்தை இலங்கைக்கு எதிராகப் பயன்படுத்த முயற்சித்துவருகிறனர் என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

எனினும், நிலைமையை புரிந்துகொண்டுள்ள அரசாங்கம் அதற்கேற்றவகையில் சர்வதேச சமூகத்தை தெளிவுபடுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது. ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் உறுப்பு நாடுகளுக்கு எமது நாட்டின் நிலைமைகள் குறித்து விளக்கமளித்து வருகின்றது. வரலாற்றில் பல சந்தர்ப்பங்களில் ஐக்கிய நாடுகள் சபையிலும் மனித உரிமைப் பேரவையிலும் பிரபல நாடுகள் கொண்டு வந்த பிரேரணைகள் தோல்வியடைந்த சந்தர்ப்பங்கள் உள்ளன என்றும் அமைச்சர் கூறினார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட அவர்,

எதிர்வரும் மார்ச் மாதத்தில் ஜெனிவாவில் மனித உரிமைப் பேரவையின் அமர்வுகள் நடைபெறுவதற்கும், மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறுவதற்கும் எவ்வாறான தொடர்பும் இல்லை. மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்கான பதவிக்காலம் முடிவடைந்து விட்டது. அந்தவகையில் தற்போது தேர்தலை நடத்தவில்லை என்றால் நாங்கள் அரசியலமைப்பு ரீதியான சிக்கலை எதிர்கொள்வோம். எனவே தேர்தலை நடத்துகின்றோம். அதேநேரத்தில் ஜெனிவா விவகாரமும் வந்துள்ளது எனவும் தெரிவித்தார்.

ஜெனிவா விடயத்தை பொறுத்தவரை அரசாங்கம் யுத்தத்துக்குப் பின்னரான நாட்டின் முன்னேற்ற நிலைமை தொடர்பில் மனித உரிமைப் பேரவையின் உறுப்பு நாடுகளை தெளிவுபடுத்தி வருகின்றது. அண்மைக்காலத் தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பல்வேறு உலக நாடுகளின் தலைவர்களை சந்தித்து விளக்கமளித்துவருகின்றார்.

அமைச்சர்களும் பல்வேறு நாடுகளுக்கு சென்று யுத்தத்தின் பின்னரான இலங்கையின் முன்னேற்ற நிலைமைகள் குறித்து விளக்கமளித்து வருகின்றனர். இலங்கைக்கு எதிராக குற்றச் சாட்டுக்களை முன்வைக்கும் ஜெனிவா ஏன் பிரபாகரன் மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள் குறித்து குரல் எழுப்புவதில்லை என்று கேள்வியெழுப்புகின்றோம்.

தமிழ்த் தலைவர்களையும், அப்பாவி மக்களையும் அரச தலைவர்களையும் புலிகள் அழித்தனர். எனவே அவர்களுக்கு எதிராக ஏன் குற்றச் சாட்டுக்களை முன்வைப்பதில்லை என்று கேட்கின்றோம். புலிகள் செய்த அட்டுழியங்களை இன்று பலர் மறந்துவிட்டனர்.

வடக்கில் இன்று பாரிய அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இவை தொடர்பில் விளக்கமளிக்க வேண்டும். யுத்தத்தை இராணுவத்தினரும் எமது தலைவர்களும் சரியாகவே செய்தனர் எனவும் மைத்திரிபால சிரிசேன தெரிவித்துள்ளார்.

# தமிழர்களால் இலங்கை ஆளப்பட முடியாது

## பிரதியமைச்சர் முரளிதரன் தெரிவிப்பு

தமிழ் ஜனாதிபதி ஒருவரினால் எந்தக் காலத்திலும் இலங்கையை ஆட்சி செய்ய முடியாது என பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார். இலங்கையின் மொத்த சனத்தொகையில் பதினெட்டு வீதமானவர்களே தமிழ் மக்கள். இவ்வாறான ஓர் நிலைமையில் தமிழர் ஒருவர் ஜனாதிபதியாக ஆட்சி வகிப்பது நடைமுறைச்சாத்தியமற்றது.

போர்க் குற்றச் செயல் விசாரணை குறித்து கோருவதன் மூலம் நாடு இன்னும் நெருக்கடிகளையே எதிர்நோக்க நேரிடும் புலிகள் அமைப்பு எவரையும் பாவம் பார்க்கவில்லை.

இம்முறை ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைப் பேரவை மாநாட்டில் பங்கேற்க முயற்சித்து வருவதாக பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

## இந்திய மீனவர்கள்...

செய்யுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.விடுதலை செய்யப்பட்ட 25 மீனவர்களது 06 படகுகளும் அவர் களிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்த மீனவர்கள் கடந்த 21 ஆம் திகதி வடபகுதி கடற்பரப்பில் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழக மீனவர்கள் 40 பேர் நேற்று முன்தினம் மாலை விடுதலை செய்யப்பட்டனர்.

இந்த மீனவர்கள் ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தனர்.

இதன்போது தமிழக மீனவர்கள் 40 பேரை விடுதலை செய்து, அவர்களின் 09 படகுகளையும் விடுவிக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்ததாக கடற்றொழில் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட பணிப்பாளர் நடராஜா கணேஷமூர்த்தி குறிப்பிட்டார்.

நேற்று விடுதலை செய்யப்பட்ட 25 தமிழக மீனவர்களுடன் யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அனைத்து இந்திய மீனவர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக கடற்றொழில் திணைக்களத்தின் யாழ். மாவட்ட பணிப்பாளர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## வலி.வடக்கில்...

விலையில் விற்பதனால் யாழ்.மாவட்டத்திலுள்ள விவசாயிகள் பாதிப்படைவதாக கட்டளைத்தளபதிக்கு தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அதற்கு கருத்து தெரிவித்த கட்டளைத்தளபதி அது தொடர்பாக ஆராய்ந்து விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.

இச்சந்திப்பில் அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி.குகேந்திரன் (வி.கே.ஜெகன்), வலிகாமம் கிழக்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும், கோப்பாய் பிரதேச இணைப்பாளருமான இ.ஐங்கரன், வலிகாமம் மேற்கு பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவரும், வட்டுக்கோட்டை இணைப்பாளருமான சி.பாலகிருஷ்ணன் (ஜீவன்), சாவகச்சேரி நகரசபை எதிர்க்கட்சித் தலைவரும் தென்மராட்சி இணைப்பாளருமாகிய சூசைமுத்து அலெக்சாண்டர் (சாள்ஸ்), பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவரும் வடமராட்சி இணைப்பாளருமாகிய ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் (ரங்கன்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

# யுத்தத்துக்கு பிந்திய இலங்கைக்கு சர்வதேசம் உதவியளிக்க வேண்டும்

## அமைச்சர் டலஸ் கோரிக்கை

பிரிவினைவாதத்தை போஷிக்கும் செயற்பாடுகள் இலங்கைக்கு வெளியில் இருக்கும் வரை நாங்கள் ஜெனிவா செல்ல வேண்டியேற்படும் என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால் போருக்குப் பின்னரான எமது நாட்டைக் கட்டியெழுப்பவும் ஒற்றுமையை பலப்படுத்தவும் மேற்கு நாடுகள் எங்களுக்கு உதவவேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம் என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளரும் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

மாறாக உ'தவி கோரி நாங்கள் நீட்டும் கரங்களில் சர்வதேச சமூகம் துப்பிவிடக்கூடாது. ஜெனிவா விவகாரத்தைப் பொறுத்தவரை சர்வதேச சமூகத்துக்கு எமது அமைச்சர்கள் தெளிவுபடுத்தல்களை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர்,

ஜெனிவா மனித உரிமைப் பேரவையில் இலக்கங்களை வைத்து எதனையும் தீர்மானிக்க முடியாது. பிரேரணைகள் வந்த போது எமக்கான ஆதரவு இருந்துள்ளதை கண்டுள்ளோம். யுத்தம் முடிந்துவிட்டது.

தற்போது நாட்டில் சமாதானம் ஏற்பட்டுள்ளதுடன் அபிவிருத்தியும் ஏற்பட்டுவருகின்றது. கடந்த மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெற்றபோது கொழும்பு எவ்வாறு இருந்தது என்று அனைவருக்கும் தெரியும்.

குண்டுகள் வெடிக்கும் இடமாக கொழும்பு காணப்பட்டது. முல்லைத்தீவு காட்டுக்குள் இருந்த பிரபாகரன் கொழும்பில் அரசியல் தலைவர்களை சிறைப்படுத்தியிருந்ததை மறக்க முடியாது. ஆனால் தற்போது நிலைமை மாறிவிட்டது.

யுத்தம் முடிவடைந்து நான்கு வருடங்கள் கடந்துவிட்டன. இந்நிலையில் பல முன்னேற்றங்களை காட்டியுள்ளோம். ஆனால் எங்களினால் மெஜிக் காட்ட முடியாது. போருக்குப் பின்னரான எமது நாட்டைக் கட்டியெழுப்பவும் ஒற்றுமையை பலப்படுத்தவும் மேற்கு நாடுகள் எங்களுக்கு உதவவேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம். எமது நாட்டை கட்டியெழுப்ப உதவுங்கள்.

மாறாக உதவி கோரி நாங்கள் நீட்டும் கரங்களில் சர்வதேச சமூகம் துப்பிவிடக்கூடாது. ஜெனிவா விவகாரத்தைப் பொறுத்தவரை சர்வதேச சமூகத்துக்கு எமது அமைச்சர்கள் தெளிவுபடுத்தல்களை மேற்கொண்டுவருகின்றனர்.

நாட்டில் எற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து சர்வதேச சமூகத்தை தெளிவுபடுத்தி வருகின்றோம். எனினும் பிரிவினைவாதத்தை போாிக்கும் செயற்பாடுகள் இலங்கைக்கு வெளியில் இருக்கும்வரை நாங்கள் ஜெனிவா செல்ல வேண்டியேற்படும் என்பது எங்களுக்குத் தெரியும் என அமைச்சர் டலஸ் அழகப்பெருமா தெரிவித்துள்ளார்.

# காரைநகரில் தங்கநகை திருட்டு

காரைநகர் மேற்கு வீதியில் சின்ன ஆலடி என்ற இடத்தில் வீடு ஒன்றுக்குள் புகுந்த திருடர்கள் 15 பவுண் தங்கநகை களை திருடிச் சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக ஊர்காவற்துறைப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

(50)

# யுத்த வெற்றியை சர்வதேசத்துக்கு தாரைவார்க்க தயாராக இல்லை



ஜெனீவா மனித உரிமைக்கான மாநாட்டில் சர்வதேச அழுத்தங்களுக்கு முகம் கொடுக்க அரசாங்கம் தயாராகவே உள்ளது இராணுவத்தையும், அரசாங்கத்தையும் குற்றவாளிகளாக ஒருபோதும் இடமளிக்கமாட்டோம் என்று அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி என்னை நியமித்தால் ஜெனீவா மாநாட்டில் அரசாங்கத்தின் சார்பில் விவாதிப்பேன். யுத்த வெற்றியை எவருக்கும் தாரைவார்க்க முடியாது எனவும் அவர் கூறினார்.

பெருந்தோட்டத்துறை அபிவிருத்தி அமைச்சின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தார்.

இது தொடரபாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஜெனீவா மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கை மீது குற்றம் சுமத்தினாலும் நாட்டிற்கு எதிராக செயற்பட்டாலும் அவை அனைத்திற்கும் முகம் கொடுக்க அரசாங்கம் தயாராகவே உள்ளது.

முப்பது வருட கால யுத்தத்தினால் இலங்கை பல இழப்புகளை சந்தித்துவிட்டது. முக்கியமாக இலங்கை பாதுகாப்புப் படையினரின் இழப்புகளை எவராலும் ஈடு செய்ய முடியாது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதல் மற்றும் வடக்கில் தீவிரவாதிகளின் ஆக்கிரமிப்புகளின் காரணத்தினால் 30 வருடங்களாக அபிவிருத்தி என்ற ஒன்று தெரியாமலேயே இருந்தது. எனினும், இன்று யுத்தம் முடிவடைந்து நான்கு ஆண்டுகளில் இலங்கை பாரிய அபிவிருத்தியினைக் கண்டுள்ளது.

வடக்கில் இன்று சுதந்திரக் காற்று வீசும் நிலைமை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தினாலேயே ஏற்படுத்தப்பட்டது. இவை ஏன் சர்வதேச நாடுகளுக்கு தெரியவில்லை. யுத்தத்தில் இருந்து மக்களை காப்பாற்றியமையே சர்வதேச அமைப்புக்களுக்கு மனித உரிமை மீறல்களாகத் தெரிகின்றது.

நாட்டைக் காப்பாற்றிய இராணுவத்தினரையும் மக்களைக் காப்பாற்றிய அரசாங்கத்தையும் சர்வதேசத்தின் முன்னிலையில் குற்றவாளி யாக்க நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். எமது நாட்டினதும் பாதுகாப்புப் படையினரின் தன்மையினை இலங்கையர் அனைவரும் நன்கு புரிந்து கொண்டுள்ளனர். எனினும், ஒரு சில அமைப்புகளும் சர்வ தேச தீவிரவாத அமைப்புக்களும் ஒன்றிணைந்து ஜெனீவா மாநாட்டில் நாடகம் நடத்துகின்றன.

ஜெனீவா மனித உரிமைகள் மாநாட்டில் நான் கலந்து கொள்வது தொடர்பில் எவ்விதத் தீர்மானமும் இது வரையில் எடுக்கப்படவில்லை. எனினும் இறுதி நேரத்தில் ஜனாதிபதி என்னை இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்த நியமித்தாலும் அரசாங்கத்தின் சார்பில் நான் கலந்துகொள்வேன்

# மேல்மாகாண தேர்தலில் கூட்டமைப்பு போட்டியிடாது

## செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு

மேல்மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிடும் எண்ணம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு இல்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

இந்தியாவிற்கான விஜயம் செய்வது தொடர்பில் இந்திய மத்திய அரசாங்கத்தின் திகதி அறிவிப்பை எதிர்பார்த்திருப்பதாக அதேவேளை மேல் மாகாண சபைத் தேர்தலின் போது, மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணிக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு பெரும்பாலும் தமது ஆதரவை வழங்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# தேர்தல் ஆணையாளருடன் முக்கிய சந்திப்பு இன்று

(கொழும்பு)

தேர்தல்கள் ஆணையாளர், நாடு பூராகவுமுள்ள அனைத்து மாவட்டங்களின் பிரதித் தேர்தல் ஆணையாளர்கள் மற்றும் உதவித் தேர்தல் ஆணையாளர்களுக்கு இடையிலான விசேட சந்திப்பொன்று இன்று இடம் பெறவுள்ளது.

இதன் நிமித்தம் இவர்கள் இன்று காலை 8.00 மணியளவில் கொழும்பிற்கு வருகை தரவுள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் மற்றும் ஏனைய தேர்தல்கள் தொடர்பிலும் கலந்துரையாடுவதே இந்த சந்திப்பின் முக்கிய நோக்கமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# இருமொழி உதவிக்கரும பீடம்; வவுனியா மாவட்ட செயலகத்தில்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் மகிந்த சிந்தனைத் திட்டத்திற்கமைவாக இருமொழிக் கொள்கையுடன் கூடிய தேசமொன்றைக் கட்டி எழுப்புவதன் பொருட்டு வவுனியா மாவட்ட செயலக வளாகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இருமொழி உதவிக் கருமபீடம் நாளை திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு திறந்து வைக்கப் படவுள்ளது.

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவும் கைத்தொழில், வணிகத்துறை அமைச்சர் ரிஷாத் பதியுதீனும் இணைந்து இக் கரும பீடத்தை திறந்துவைக்கவுள்ளார்கள். மாவட்ட செயலாளர் எம்.கே. பந்துல ஹரிச்சந்திர தலைமையில இவ் வைபவம் நடைபெறவுள்ளது.

# கர்ப்பிணித் தாய்மார் இறப்பு வீதம் குறைவு

தென் ஆசியாவில், குறைந்த தாய்மார் இறப்புக்கள் இலங்கையிலே பதிவாகியுள்ளதாக புதிய ஆய்வில் தெரியவந்துள்ளது.

திமர் மற்றும் மகப்பேற்று சேவைகள் தொடர்பாக தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் இந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த ஆய்வறிக்கை, சுகாதார அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

ஒரு இலட்சம் குழந்தை பிரசவத்தின் போது, 37 தாய்மார் உயிரிழப்புக்களே ஏற்படுவதாக அந்த ஆய்வறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# ஜாவா தீவுஅருகே நேற்று நில அதிர்வு

இந்தோனேசிய ஜாவா தீவிற்கு அருகாமையில் நேற்று நில அதிர்வு ஒன்று உணரப்பட்டுள்ளது.

6.1 ரிச்டர் அளவிலே இந்த நில அதிர்வு உணரப்பட்டதாக அமெரிக்க புவியியல் மையம் தெரிவித்துள்ளது.எனினும், நில அதிர்வு காரணமாக எந்தவித சேதமும் ஏற்படவில்லை.

# பிரேரணைக்கு ஆதரவு தேட பிரிட்டிஸ் அரசு முயற்சி

இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக, எதிர்வரும் ஜெனீவா மாநாட்டில் அமெரிக்கா முன்வைக்கவுள்ள பிரேரணையை மேலும் வலுச்சேர்க்க முயற்சிப்பதாக பிரித்தானியா தெரிவித்துள்ளது.

பிரித்தானிய நாடாளுமன்றத்தின் வெளிவிவகாரங்களுக்கான செயலாளர் மார்க் சைமண்ட்ஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பிரித்தானிய நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக ஏனைய ஐரோப்பிய நாடுகளுடன் பிரித்தானிய வெளிவிவகார திணைக்களம் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# வீதி விபத்தில் இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

சைக்கிளில் சென்ற சகோதரர்களை மோதிவிட்டு மோட்டார் சைக்கிள் சாரதி தப்பி ஓடினார் சகோதரி கால் முறிந்த நிலை யிலும் சகோதரன் பலத்த காயங் களுடனும் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் நேற்று இரவு அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

புன்னாலைக்கட்டுவன் ஆயர் கடவைப் பிள்ளையார் கோவிலுக்கு முன்னாள் உள்ள ஒழுங்கையில் நேற்று முன்தினமிரவு 8.30 மணியளவில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

புன்னாலைகட்டுவன் தெற்கை சேர்ந்த சகோதரர்களான விமலேஸ்வரன் ஜீவனா வயது 23 மற்றும் சகோதரன் விமலேஸ்வரன் கோகிலன் வயது 21 ஆகியவர்களே படுகாயத்துடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களாவர்.

ஜீவனா மேலதிக சிகிச்சைக்காக நேற்று மதியம் யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வண்டி மூலம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

# பருத்தித்துறை மரக்கறிச்சந்தை நேற்றும் வழமைபோல் இயங்கவில்லை

பருத்தித்துறை மரக்கறிச் சந்தை நேற்றும் வழமை போல் இடம்பெறவில்லை இதனால் இந்தப் பிரச்சினைக்கான தீர்வு எட்டுவதற்கு பலதரப்பினரும் முயற்சி எடுத்து வருகின்றனர்.

பருத்தித்துறை புதிய சந்தைத்தொகுதியில் அமைக்கப்பட்ட மரக்கறிச் சந்தையில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக புறக்கணிப்பில் வர்த்தகர்கள் நேற்று ஈடுபட்டதால் நேற்று சந்தை வழமை போல் நடைபெறவில்லை.

அதனால் இவ்விடயம் சம்மந்தமாக தமது நிலைப்பாட்டை தெரிவிப்பதற்காக நகரபிதா தலைமையில் நகரசபை மண்டபத்தில் பத்திரிகையாளர் சந்திப்பொன்று நடைபெற்றது. இதில் வட.மாகாணசபை வடமராட்சி உறுப்பினர்கள் இருவரும் கலந்து கொண்டனர்.

இன்று முதல் வழமை போல் மரக்கறிச்சந்தை புதிய சந்தைத் தொகுதியில் மேல் மாடியில் நடைபெறும் என நகரபிதா உறுதியாகத் தெரிவித்தார். (16)

# மலையகத்தில் தீ விபத்து; 149 குடும்பங்கள் பாதிப்பு

நுவரெலியா - கொத்மலை, ரம்பொட தோட்டத்தில் இரண்டு லயன் அறைகளில் நேற்று மதியம் ஏற்பட்ட தீப் பரவலில் 29 வீடுகள் தீயில் அழிந்துள்ளன.

இந்த தீ பரவல் காரணமாக லயன் வீடுகளில் வசித்து வந்த 149 தொழிலாளர்களின் குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாக நுவரெலியா மாவட்ட இடர்முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இடம்பெயர்ந்துள்ள மக்களை பாதுகாப்பான இடத்தில் தங்க வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் இடர் முகாமைதத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.

மின் ஒழுக்கு காரணமாக தீ பரவியிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

# மரண அறிவித்தல்



## நாகன் நடராசா

காங்கேசன்துறையை பிறப்பிடமாகவும் சங்கானையை வசிப்பிடமாவும் யாழ்.கோயில் வீதியில் வசித்துவந்தவருமாகிய நாகன் நடராசா நேற்று (2014.01.25) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்துவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (வெள்ளை) மற்றும் சறோஜாதேவி வள்ளிநாயகி (ஔவை) நாகதேவி, செல்வராசா (பாலையா) சிவராசா (ரட்டா) காலஞ்சென்ற யோகராசா (அமீன்) மற்றும் விஜயகுமார் ராகவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவபாக்கியம், அமிர்தராச (பற்றிக்) யேசுநாஸன், புஸ்பராணி (ரூபி) மனோகரவதனி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை கோயில் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று காலை 10 மணிக்கு பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சங்கானை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.03. முதலாம் ஒழுங்கை
கோயில் வீதி
யாழ்ப்பாணம் (இ)

தகவல்
குடும்பத்தினர்

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஜனவரி 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.